
படைப்பு
ஊற்று: 1 | நதி: 3 | ஜூலை 2018 | திங்களிதழ்

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்
www.padaippu.com



## "வானம்பாடின்னு வந்ததுமே எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டன"

'கவிஞர் புவியரசு' உடன் ஒரு நேர்காணல்



அசாம் இலக்கிய விழாவில் கவிதை வாசித்த தமிழ்க் கவிஞர் மு.முருகேஷ்



வண்ணம் கெடாத வானவில்!

– ஆரூர் தமிழ்நாடன்



கற்றது தமிழ்

– புலவர் இரெ.சண்முக வடிவேல்

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று: 1 | நதி: 3 | ஜூலை 2018

நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாக மேலாளர்:
**சகா (சலீம் கான்)**

நிருபர்கள் குழு:
முனைவர் **கோ.நித்தியா**
**ஸ்டெல்லா தமிழரசி**
**தனபால் பவானி**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு: **ஐசக்**

ஓவியக் கலைஞர்கள்:
**கொ.வடிவேல்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப
வேண்டிய மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

இணையதள முகவரி:
www.padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்,
கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவரவர் கருத்துக்களே.
கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே,
படைப்பு தகவு மின்னிதழின்
கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** - பக். 04
- **“வானம்பாடின்னு வந்ததுமே எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டன”**
  - கவிஞர் புவியரசு உடன் நேர்காணல் - பக். 05
- **செம்மண்ணின் மைந்தன் சூர்யகாந்தன்**
  - ஜி. ராஜன் - பக். 16
- **அசாம் இலக்கிய விழாவில் கவிதை வாசித்த தமிழ்க் கவிஞர் மு.முருகேஷ்** - பக். 23
- **வண்ணம் கெடாத வானவில்! - சுகன் நினைவுகள்**
  - ஆரூர் தமிழ்நாடன் - பக். 26
- **எனக்குப் பிடித்த புத்தகம்**
  - கட்டுரையாக்கம் : கி.காவேரி - பக். 30
- **வசந்தாக்கா - மனித முகவரிகள்**
  - மானசீகன் - பக். 35
- **பாஷோவின் பழைய குளம்**
  - முகம்மது பாட்சா - பக். 39
- **‘ஆனந்தியின் பொருட்டு தாழப் பறக்கும் தட்டான்கள்’ - நூல் விமர்சனம்**
  - கார்த்திக் திலகன் - பக். 45
- **கற்றது தமிழ்**
  - புலவர் இரெ. சண்முக வடிவேல் - பக். 48
- **ஈரிருநாள் இலங்கை**
  - தமிழ்பாரதன் - பக். 54
- **பின்னூட்ட எண்ணங்கள்** - பக். 59
- **மரம், மரமன்று; அது மனிதருள் ஒன்று**
  - பழநியப்பன் கிருஷ்ணமூர்த்தி - பக். 63


## சிறுகதைகள்


- **ஒரு மனிதன் : ஒரு வீடு : ஒரு தோட்டம்**
  - சூர்யகாந்தன் – பக். 19
- **பிராக்ஸிமா பி**
  - முரளி – பக். 32
- **திருவாத்தான்**
  - மொழிபெயர்ப்பு : சிறுமேதாவி – பக். 51
- **சாம்பலில் மூழ்கிய நகரம்**
  - பிரேமபிரபா – பக். 60


## கவிதைகள்


- **அந்தி**
  - கனிமொழி.ஜி – பக். 15
- **குரல்**
  - ராம் வசந்த் – பக். 31
- **மண்புழுவின் இருப்பு!**
  - ரோஷான் ஏ.ஜிப்ரி – பக். 44
- **நமது கடவுள்!**
  - கரிகாலன் – பக். 58



# தலையங்கம்

வணக்கம்,

படைப்பு 'தகவு' மூன்றாம் இதழ் உங்கள் கண்முன் ஒளிவீசி விரிந்திருக்கிறது. இதழாசிரியர் சுகன் குறித்த பதிவுகளுக்குத் தொடர்ந்து பாராட்டுக்களும் வரவேற்பும் வந்தவண்ணம் உள்ளன. 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றார் பாரதிதாசன். சற்றும் தளராமல் ஒரு தமிழ் இலக்கியச் சிற்றிதழைத் தொடர்ந்து கொண்டுவந்து தஞ்சை சார்ந்த இலக்கிய உலகில் தனக்கெனத் தனியிடம் பெற்று மிளிர்கிறார் சுகன். எத்தனையோ உள்ளங்களில் நீங்காத இலக்கிய நினைவாக உள்ள சுகன் குறித்த எண்ண அலைகள் இவ்விதழிலும் நனைத்துச் செல்கின்றன.

கவிஞர் புவியரசுவின் நேர்காணல் இவ்விதழில் வெளிவந்துள்ளது. ஆயிரம் இதழ் கண்ட அபூர்வ மனிதர் அவர். ஊடக வளர்ச்சியால் தற்போது இதழுலகம் எளிதில் நமக்கு வசப்பட்டுவிடுகிறது. ஆனால் ஆரம்பகாலத் தமிழ் இதழ்ச் சூழலுக்குக் கடினமான களங்களில் தடம் பதித்த வரலாறு உண்டு. அக்கடினக் காலகட்டத்தில் வானம்பாடி இதழுக்கு அடித்தளமிட்டவர், இப்போது துளிர்த்திருக்கும் நம் தகவுக்கு அளித்திருக்கும் பேட்டி, இலக்கிய உலகம் குறித்த பல்வேறு ஒளி ஊற்றுக்களை நமக்கு அடையாளங் காட்டுவதாய் அமைந்துள்ளது. அவரது நேர்காணல் அடுத்த மாதமும் தொடரும்.

'கற்றது தமிழ்' என்னும் பகுதி தொடங்கப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்குப் பங்களிப்போர் பல்துறை சார்ந்த பல அறிஞர்களும்தான். எனினும், தமிழைக் கற்று, தன் வாழ்வுக்கான ஒரே வழியாய்த் தமிழைக் கொண்டவர்கள் இக்காலச்சூழலில் வளர்ந்த முறைமையை வெளிப்படுத்துவதாய் இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. தமிழால் உயர்ந்து, தமிழால் வாழும் பலரை இனி மாதாமாதம் சந்திப்போம்.

கவிதைகள் எப்போதும்போல் அக உலகத்தோடு, போராடவேண்டிய புறச்சூழல்களையும் பேசுகின்றன. சமகாலத்தைப் பதிவுசெய்யத் துடிப்பவன்தான் படைப்பாளியாய் முனைப்பு கொள்கிறான். தன் அகம், சுற்றியிருக்கும் உள்ளங்களின் ஊசலாட்டங்கள், புனைவுலகக் கற்பனைகள் என இலக்கியவாதிகள் களம்கண்ட பல படைப்புகளும் உங்களுக்காய்..

நன்றி.

– **ஆசிரியர்**




• கவிஜி
படங்கள்: காதலாரா



# “வானம்பாடின்னு வந்ததுமே எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டன”

## ‘கவிஞர் புவியரசு’ உடன் ஒரு நேர்காணல்

**கோ**வையின் அடையாளங்களில் ஒருவர். வானம்பாடி இயக்கத்தின் முன்னோடி. சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். கவிஞர். எப்போதுமே போராட்டக் குணம் கொண்டவர். சிறந்த மொழிபெயர்ப்பாளர். பழக எளிமையான மனிதர். இன்னமும் எழுதிக்கொண்டிருக்கும் இலக்கியவாதி. கவிஞர் புவியரசு அவர்களுடன் ஒரு காலைவேளையில் உரையாடியதிலிருந்து......

**வானம்பாடி இயக்க முன்னோடி நீங்கள்.. அக்காலகட்ட இலக்கிய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்களேன்...!**

வானம்பாடி காலகட்டம் 1970களில் ஆரம்பித்தது. அந்தக் காலகட்டத்தில் எங்கள் கவனம் முழுக்க வானம்பாடியிலேயே இருந்தது. வேறு இலக்கியங்களில் கவனம் செலுத்த முடியாவண்ணம் இதுலயே பிரச்சனைகள் வந்தன. முதலில் பதினாறு பக்கமும் பிறகு இருபத்திநான்கு பக்கமும் பிறகு முப்பத்தாறு பக்கமும் என்று வானம்பாடி வந்தது. அது விற்பனைக்குப் போகல. விலை இல்லாக் கவி மடல். முதல் தடவையாக ஒரு பத்திரிக்கை விலையில்லாமல் போடப்பட்டது அதுதான். pamphlet. இலவசமா எல்லா ஊருக்கும் அனுப்பினோம். இலங்கை மலேசியா உள்பட பல நாடுகளுக்கும் போச்சு. தைரியமாக எழுதினோம். எழுதுனதுனால நிறைய பிரச்சனைகள் வந்தன. ஒன்னு வந்து.. தமிழ் கொஞ்சம் கலப்படமா இருந்தது. இந்த தர்ணா, ரத்த புஷ்பங்கள் போன்ற வார்த்தைகள் எங்கள் கவிதைகளில் கலந்திருந்தது,

தமிழ் ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்குமே விரோதமாகி இருந்தது. அதைச் சமாளிக்கறதே எங்களுக்கு வேலையாக இருந்தது. சக்திக்கனல் சிதம்பரநாதனைத் தவிர நாங்க எல்லாருமே... சிற்பி, மீரா, மேத்தா.... கிட்டத்தட்ட தமிழ் ஆசிரியர்கள்தான். அப்போ, புதுக்கவிதை வந்தவுடனே தமிழாசிரியர்கள் எல்லாருமே இந்தப் புதுக்கவிதையை எதிர்த்தாங்க. அவுங்கள சமாளிக்கறதே பெரிய விஷயமா இருந்துச்சு.. அதனால அவுங்களோட பள்ளிகள் கல்லூரிகள் எல்லாம் கதவைச் சாத்திட்டாங்க. கோயில்களுக்குச் சென்று நாங்க பட்டிமன்றம் நடத்துவோம். அதிலயும் முற்போக்காப் பேசுவோம்... அதனால அவையும் சாத்தப்பட்டன. வானம்பாடின்னு வந்ததுமே எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டன. அப்போ இந்தக் கதவுகளைத் தட்டுவதற்கே நேரம் சரியாக இருந்தது. அப்புறம் சிலபேர் என்ன பண்ணுனாங்க... நக்சலைட் முத்திரை குத்தினாங்க. நாங்க சிபிஐ (CPI), சிபிஎம் (CPM) ரெண்டுலயுமே இல்ல. ஆனா மார்க்சியவாதிகளாக இருந்தோம். சுதந்திரமான மார்க்சியவாதிகளாக இருக்கறது ஆபத்துன்னு அப்போதான் தெரிஞ்சது.. அனுபவத்துல. ஏதோ ஒரு பக்கம் இருக்கணும். இல்ல, மார்க்சியம் பேசிட்டு லெப்ட்டும் இல்ல ரைட்டும் இல்லன்னாப் போச்சு. வம்பு. இந்தச் சிந்தனை அரசாங்கத்துக்கிட்ட இருக்கு. திராவிட முன்னேற்றக் கழகம் எங்களை மிகக் கடுமையாக எதிர்த்தது. திராவிடர் கழகம் எதிர்த்தது.. அடிக்கற அளவுக்கு. ஆள் வெச்சு அடிக்கற அளவுக்குப் பிரச்சனைகள் வந்தன. போலிஸ்க்கெல்லாம் போயி......பெரிய விவகாரங்கள் எல்லாம் வந்தன. வானம்பாடி VCS காலனியில் எங்க வீட்டு முகவரியில்தான் இருந்தது. கிண்டல் கூடப் பண்ணுவாங்க... காலனி ஆதிக்கத்தில் மாட்டிக்கொண்டது வானம்பாடி அப்படினு. அதனால, என்ன வந்து ரொம்பத் தொந்தரவு பண்ணுனாங்க. நிறைய தடவை காவல்துறைக்கும் கியூ பிராஞ்சுக்கும் போக வேண்டி வந்தது. ரொம்ப சிரமம். எல்லா ஊர்லயும் பிரச்சனை இருந்தது. தமிழ்நாடனைக் கொண்டு போய் வெச்சு சித்ரவதை எல்லாம் பண்ணுனாங்க. ஆக, இந்த மாதிரி போராட்டங்களே நிறைய இருந்ததால வேற இலக்கிய வேலைகளில் நாங்கள் ஈடுபடவில்லை.

## மொழிபெயர்ப்பின்போது என்னென்ன வகையான சிக்கல்கள் எழுகின்றன? அவற்றை எவ்விதம் கையாளுகிறீர்கள்?

மலையாளத்தில் இருந்து மொழிபெயர்க்கும் போது அப்படியே செய்யலாம். இன்னும் கூட அழகாச் செய்யலாம். ஆனா ஹிந்தியில் இருந்து செய்யும்போது நேரிடையாகச் செய்வதில்லை. அதை ஆங்கிலத்துக்குப் போய்த்தான் செய்கிறோம். யூகித்துத்தான் செய்யவேண்டி இருக்கிறது. காசி நஸ்ருல் இஸ்லாமை வங்கத்தில் இருந்து பண்ணும்போது ஆங்கிலத்துக்குப் போய்த்தான் பண்ணேன். ஆனா வங்கம் தெரிஞ்சவங்ககிட்ட கொஞ்சம் கேட்டுக்கிட்டேன். வங்கத்தினுடைய ட்ரெண்ட் என்ன... இலக்கியப் போக்கு என்ன..... அவர் காலத்தின் இலக்கியப் போக்கு என்ன....அப்படிங்கறது எல்லாம் தெரியணும். அவர் வெளிப்படையான கம்யூனிஸ்ட்டாக இருந்தார். அவர் காலத்துல தான் தாகூர் இருந்தார். அப்போ தாகூரும் மக்களுக்குத் தெரிந்தவர். இவரும் மக்களுக்குத் தெரிந்தவர். இப்போ தாகூரையும் நஸ்ருலையும் மொழிபெயர்க்கும்போது நஸ்ருல் மாறுபட்டவராக இருந்தார். தாகூர் வைணவக் கலாச்சாரத்தோடு சம்பந்தப்பட்டவர். என்னதான் புதுமைகளும் புரட்சியும் செய்தாலும் தாகூருடைய வேர்கள் அந்தக் கலாச்சாரத்தில் இருந்தன. ஆனால் நஸ்ருலின் வேர்கள் முற்றிலும் மாறுபட்டவை. ஆங்கிலத்தில் இருந்து செய்யும்போது இதையெல்லாம் கவனத்தில் வச்சுக்கணும். ஆங்கிலத்தில் இருந்து வெளிநாட்டு விஷயங்கள் செய்யும்போது நிறைய சிக்கல்கள் வரும். அவுங்க பழமொழிகள்... உதாரணத்துக்கு... put in on the table அப்படினா மேசை மேல வையுனு அப்படியே எடுத்துக்கக்கூடாது. அதை வெளிப்படையாப் பேசுன்னுதான் எடுத்துக்கணும். இப்போ ரெண்டு நாட்டுக் கலாச்சாரத்துக்கு மத்தியில இந்த மாதிரி நிறைய பிரச்சனைகள் வரும். இப்போ நமக்குக் கலாச்சாரத்தைச் சொல்வதா... விஷயத்தைச் சொல்வதாங்கிற போராட்டம். அந்த இடத்தில் எது முக்கியமாக இருக்கிறதோ அதை மொழிபெயர்க்க வேண்டும். கலாச்சாரம் தொடர்பான விஷயங்களுக்கு விளக்கம் எழுதவேண்டி வரும். ஆனால் எழுதக்கூடாது. அடிக்குறிப்பாவது

போடவேண்டி வரும். இரு நாட்டுக்கும் தாவரங்கள், செடி கொடிகள், இயற்கை, பேர்கள் வேற. இங்கிருப்பது அங்கில்லை. அங்கிருப்பது இங்கில்லை. இறக்குமதி செய்யும்போது பொருள்களுக்கு என்ன பிரச்சனை வந்ததோ அதேதான் கவிதைகளை மொழிபெயர்க்கும்போதும் வந்தது. ஆனாலும் கூட சில கலாச்சாரங்களும் மொழியும் நம்மோடு ஒத்துப் போகிறது. இப்போ ரஷ்ய மொழி தமிழ் மொழி மாதிரிதான் நேருக்கு நேராக வரும். ஆங்கிலம் மாதிரி தலைகீழாக வராது. அதனுடைய கலாச்சாரம் இந்தியக் கலாச்சாரத்துக்குப் பக்கமாகத்தான் இருக்கு. முற்றிலும் மேலைநாட்டுக் கலாச்சாரமாக இல்ல. அதெல்லாம் மொழிபெயர்ப்பதற்குக் கொஞ்சம் வசதியாக இருக்கும். இது தவிர, சிக்கல் இருக்கவே செய்யும். ஆனாலும் அந்த எழுத்தாளன் என்ன சொல்கிறான் என்பதுதான் குறிக்கோளாக இருக்க வேண்டும். சொற்கள் முக்கியம் அல்ல. The door opened on the formless skyன்னு ஓஷோ எழுதறார். வடிவற்ற வானத்துக்கும் வாசல் திறக்கும்ன்னு அழகா நம்மால் எழுத முடியும். மொழிபெயர்ப்பாளர் நேர்மையாக இல்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நேர்மையாக இருக்க முடியாது. பாப்லோ நெருடா லத்தின் அமெரிக்கா ஆளு. லத்தின் மொழியில்தான் அவர் எழுதினார். அவருடைய நண்பர்தான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர். நண்பர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது, பாப்லோ நெருடா சொன்னதுதான் எங்களுக்கு எல்லாம் வழிகாட்டி. "ஏன்டா சொல்லுக்குச் சொல்லு மொழிபெயர்க்கிற... கொஞ்சம் செழுமைப்படுத்துடா.... உனக்குத் தெரிஞ்ச மாதிரி கொஞ்சம் வார்த்தை எல்லாம் போட்டு கொஞ்சம் அழகுபடுத்துடா... பாப்லோ நெருடா இவ்ளோ அழகா எழுதி யிருக்கான்னு எல்லாரும் சொல்வாங்கள்ல..."ன்னு அவ்ளோ வெளிப்படையாச் சொல்லியிருக்கார். கருத்து முக்கியம். அதை மையப்படுத்தி நாங்கள் செய்கிறோம்.

**திரைத்துறையில் உங்கள் இலக்கியப் பங்களிப்பு எவ்விதம் அமைந்தது?**

திரைத்துறையில் (சிரித்துக்கொள்கிறார்) இலக்கியப் பங்களிப்புக்கு இடம் இல்லை. கமல் சொல்லிக்கிட்டே இருக்கார்... இலக்கியமும் சினிமாவும் ஒன்னுபடணும் ஒன்னுபடணும்ன்னு. திரைத்துறையில் நான் எதுவும் செய்யல. வராத படங்கள்ல பாடல்கள் நிறைய எழுதியிருக்கேன். திரைத்துறையைச் சார்ந்த நண்பர்கள் நீங்கதான் எழுதணும்ன்னு நம்மள கூட்டிட்டுப் போய் எழுத வெச்சிருக்காங்க. சுசீலா....ஜேசுதாஸ்......வாணி





ஜெயராம் எல்லாருமே பாடி இருக்காங்க. ஆனா எதுவுமே வரல. அதுல இலக்கியமா எழுதும்போது அவுங்களே சொல்றாங்க... வேண்டாம், இலக்கியமா எழுத வேண்டாம். "நீலவான ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று காட்டுகிறாய் ஒளி முகத்தை..."ன்னு பாரதிதாசன் சொன்ன மாதிரி எல்லாம் எழுதினோம் ஒரு பாட்டு. அய்யய்யயோ... இதெல்லாம் வேண்டாங்கன்னு கங்கை அமரன் கூட சொன்னாரு... 'என்னங்க நீங்க எப்பவும் திட்டிட்டு இருப்பீங்களே... இவனும் அவளும் வருவாங்க ... தொரத்தித் தொரத்திப் புடிப்பானுங்க....... என்னங்க டூயட்டுன்னு...... அதையே எழுதுங்க' அப்படினாரு. "எதையங்க"ன்னேன்.....?

கோடம்பாக்கத்துல இருக்கற வரைக்கும் நான் தமிழ் சினிமாவை ஒப்பனாத் திட்டிக்கிட்டுத்தான் இருந்தேன். அப்போ ஒரு பாட்டு... ஏதோ அப்படி இப்படினு உளறினத, 'ஆஹ்.. இதுதான் பல்லவி.. இதுதான் சரணம்...... தபேலாகாரா எடுடா அடிடா' னு எடுத்துக்கிட்டாங்க.... அப்போ இலக்கியம் நுழைவதற்கு இடம் கொடுப்பது இல்லை. இலக்கியவாதிகள் நுழையும்போது ரொம்ப ஜாக்கிரதையா இருப்பாங்க. நான் எழுதி மூணு பாட்டு ரெக்கார்ட் ஆச்சு.. நாலாவது நாள்... எம்பிஎஸ் ஐப் போய்ப் பாக்கணும்.. நம்மாளு.. பெரிய சங்கீத மேதை அப்படினு..வீட்டுக்குப் போனேன். போனதுமே, தகவல் வந்தாச்சுன்னாரு.. என்ன தகவல்ன்னேன்...? ஒரு கம்யூனிஸ்ட்காரன் சினிமாவுக்குள்ள வந்திருக்கான் ஜாக்கிரதைனு தகவல் வந்தாச்சுன்னாரு. அய்யய்யயோ.. என்னங்க... நான் கம்யூனிஸ்ட் கட்சிக்காரன் அல்லவேன்னேன். அப்படி வந்துருச்சுங்க தகவல். ஜாக்கிரதையா இருங்கங்கறாரு. இலக்கியமா மூணு பாட்டு ரெக்கார்ட் ஆனதுக்குள்ள தகவல் அவருக்குப் போயிடுச்சு. ஆக, தமிழ்ச் சினிமாக்காரங்க ரொம்ப விழிப்பா இருக்காங்க. மகாநதியில "தேடிச்சோறு நிதந்தின்று" கவிதையைக் கோட் பண்ணினதுக்கு, என்ன கமலும் நீங்களும் சேர்ந்துக்கிட்டுப் பாரதியார் பாடம் நடத்தறீங்களான்னு கோடம்பாக்கத்துல கேட்டாங்க. பாரதியாரை எதுக்கு உள்ள கொண்டு வர்றீங்கன்னு ரொம்பக் கிண்டல் பண்ணுனாங்க.. மனதுக்கு ரொம்ப வருத்தமா இருந்தது. இப்ப தான்.... நம்ம இளைஞர்கள் வந்துருக்காங்க... சேரனுக்குப் பிறகு வந்தவங்க வந்து தட்டி எறிஞ்சிட்டாங்க. ஜென்னுனு சொல்லாமலே ஜென் விஷயங்கள்

எல்லாம் வந்துருச்சு. சத்யராஜ் போன்றவங்க எல்லாம் ஓஷோல ரொம்ப ஈடுபாடா இருக்காங்க. வெளிப்படையாப் பேசறாங்க. கமல் ரொம்ப முயற்சி பண்றாரு. நினைச்ச மாதிரி முடியறது இல்ல.

### ஓஷோ பற்றி...?

நான் ஓஷோவைத் திட்டிக்கிட்டு இருந்தேன். அவரைப் பத்தி ஒரு புத்தகம் வந்தது. ஆபாசமான சாமியார், செக்ஸ் சாமியார்னு ஒரு பொய்யான தகவலை மத சார்பானவர்கள் புத்தகமாப் போட்டிருந்தாங்க. அது தமிழ்லயும் மொழிபெயர்த்து வந்திருந்தது. அப்போ, நான் எங்கயாவது பட்டிமன்றம் போகும்போது சம்பந்தமே இல்லாம ஓஷோவை ஒரு தாக்கு தாக்கிருவேன்! அந்தச் சமயத்துல, ரயில்ல சென்னைக்குப் போகும்போது தனியா மரபின்மைந்தன் முத்தையாகிட்ட மாட்டிக் கிட்டேன். ரயில்ல கூட்டமும் இல்ல... முன்னால வந்து உக்காருங்கன்னு கூப்பிட்டு, "என்ன இப்படிப் பண்ணிட்டு இருக்கீங்க.... ஓஷோவைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்...?"னு கேட்க, 'எல்லாம் தெரியுங்க'...ன்னேன். உங்களுக்குத் தெரியாதுன்னு சொல்லி, சில பிரச்சினைகளைச் சொல்லி அதுக்கு ஓஷோ சொன்ன தீர்வுகளையும் சொல்லி விளக்க...... 'அட, ரொம்ப நல்லாயிருக்கே' ன்னேன். 'நீங்க ஓஷோவைப் படிக்காம திட்றது, விமர்சனம் பண்றது என்னங்க ஞாயம்'ன்னு சொல்லிட்டு..... அவரே சொன்னாரு.... 'சென்னைக்குப் போனப்பறம் ஓரியன் பேப்பர் மார்ட்ல மட்டி காகிதத்துல போட்டிருக்காங்க... பத்து ரூபா பதினைந்து ரூபாதான் ஒரு புக்கு.......... வாங்கிப் படிங்க... அப்புறம் மறுபடியும் திட்டறதுனாத் திட்டுங்க'ன்னாரு. ஒரே புத்தகம்... பத்து ரூபாய்க்கு வாங்கினேன். பத்தாம் வகுப்புப் பையன் படிக்கற ஆங்கிலத்துல ரொம்பவும் எளிமையாத்தான் இருக்கு. ஓஷோ ரொம்ப எளிமையாத்தான் பேசறாரு. அதைப் படிச்ச உடனே...... 'தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'ங்கிற மாதிரி, அடடே இவ்ளோ பெரிய ஆளான்னு அப்போதான் தெரிஞ்சது. கட்டித்தட்டிப் போன நம்ம முட்டாள்தனமான எண்ணங்களை எல்லாம் தகர்த்தெறிகிறார். அப்புறம்தான் அவர் ஆசிரமத்துக்குப் போய்ப் பகலில் காவியுடை.... இரவில் வெள்ளுடை அணிந்து ஒரு வாரம் இருந்தோம். ஆனா அந்த ஆசிரம அமைப்பு நமக்குப் பிடிக்கல. ஆசிரமத்துக்காரங்க அதை ஒரு ஆக்கிரமிப்பா வெச்சுக்கிட்டு அதைப் பண்ணிக் கிட்டு இருக்காங்க. ஓஷோவை வியாபாரம் பண்றாங்க. ஓஷோ வியாபாரி அல்லவே... அவரோட நோக்கத்தையே மாத்தற சிக்கல் எல்லாமே இருந்துச்சு... அதெல்லாம் இப்ப இல்லை.. சரி ஆகிடுச்சுன்னு சொன்னாங்க.

### மிர்தாதின் நூல் குறித்தும் அதன் உருவாக்கம் குறித்தும் சொல்லுங்கள் அய்யா. அதன் ஒரிஜினல்/மூலம் கிடைக்காமல் தவித்த அனுபவம் குறித்து...

ஓஷோ சொல்லித்தான் மிர்தாத் தெரியும் நமக்கு. ரொம்ப நாள் தேடித் தேடிப் பார்த்து எங்கேயும் கிடைக்கல. மிகைல் நெய்மி எழுதினது.. புக் ஆப் மிர்தாத். மிகைல் லெபனான்காரன். கலீல் ஜிப்ரானோட நெருங்கிய நண்பன். மிகைல் நெய்மி இல்லன்னா கலீல் ஜிப்ரான் செத்தே போயிருப்பான். நெய்மிதான், "டேய்.. நீ பெரிய ஆளுடா... இன்னும் பெரிய ஆளா வருவ..எழுது" ன்னு சொல்லி ஜிப்ரான அமெரிக்கா கூட்டிப் போய்த் தங்க வெச்சு... ஊக்குவிச்சது. நம்ம கவிக்குயில் சரோஜினி அம்மா கூட ஜிப்ரான் அறைக்குப் போய்ப் பேசியிருக்காங்க. பல கவிஞர்களோட தொடர்பு வெச்சு, அப்புறம் அவன் ஆங்கிலத்துல எழுத ஆரம்பிச்சான். அவனுடைய மரணத்தைப் பத்திக் கூட நெய்மி ஒரு புத்தகம் எழுதியிருக்கான். தேடிக்கிட்டு இருக்கேன்.. கிடைச்சா மொழிபெயர்க்கணும். மிர்தாத் புத்தகத்தைப் பத்திப் பல பேர்கிட்ட விசாரிச்சோம்.. ஆனா, கிடைக்கல. நமக்குத் தெரிஞ்ச நண்பர் ஒருவர் ரிஷிகேசம் போயிருந்தபோது ஒரு ஜெராக்ஸ் பிரதியை லைப்ரரியில பார்த்துருக்காரு.

"அய்யயோ... இது எங்கேயும் கிடைக்கல.. எனக்கு வேணும்"னு சொல்லும்போது 'அப்படியெல்லாம் கொடுக்க மாட்டோம்' னுட்டாங்க. ஒரு வாரம் உண்ணாவிரதம் இருந்து போராட்டமெல்லாம் பண்ணி அந்தச் சாமியார் கூடவே இருந்து ஜெராக்ஸ் காப்பிய ஒருவழியா வாங்கிட்டு வந்தார். சில இடங்கள்ல சரியாக் கூட பிரிண்ட் இல்ல. இங்க வந்த பின்னால என்கிட்ட வந்து இந்த மாதிரி ஒரு புத்தகம் கிடைச்சிருக்கு... ரொம்பக் கடினமா இருக்கு...


படிச்சுப் பார்த்துக் கொஞ்சம் சொல்லுங்கன்னாரு. கொடுங்கன்னு வாங்கிப் பார்த்தேன்... 'ஐயோ... இத தானுங்க தேடிட்டு இருந்தேன்'னேன்... இங்கிலிஷ்காரனே திணர்ற மாதிரி வேற வேற வார்த்தைகளைக் காயின் பண்ணி வார்த்தை களைச் சுழட்டி சுழட்டி எழுதி இருந்தான். ஒன்னுமே புரியல. ரொம்பக் கடினமான ஒரு மொழியை உள்ள வெச்சிருந்தான். ஆரம்பத்துல பார்த்தா ஹாரிபாட்டர் மாதிரி பிசாசு மந்திரம் மாஜிக்குன்னு வருது. அப்புறம் பார்த்தா பிலாசபி. பெரிதெல்லாம் பெரிதல்ல சிறிதெல்லாம் சிறிதல்ல.. நமக்குத் தெரியும். ஆனா அவன் சொல்லி இருக்கற இடமும் சூழலும்.. வினோதமான தத்துவார்த்தத்தைத் தந்தது. ரெண்டு மூணு தடவ படிச்சுப் பார்த்துட்டுக் காந்தி கண்ணதாசன்கிட்ட சொன்னேன்.

"அய்யோ...அண்ணே, அத மொழிபெயர்த்துருங் கன்னாரு...." ஒன்னும் புரியலைங்கன்னேன்.. "அதெல்லாம் புரியும். நீங்கதான் பண்ணியே ஆகணும்"னுட்டார். வேற எதையும் படிக்காமல் அதை மட்டுமே பல மாதங்கள் படிக்கும்போது வார்த்தைக்கு வார்த்தை புரியாட்டியும்... உள்ள இருக்கற விஷயம் புரிஞ்சது. ஒரு கட்டத்துல தெளிவாயிடுச்சு. அப்புறம் மொழிபெயர்க்க ஆரம்பிச்சேன். கொஞ்சம்கொஞ்சமா எழுதி முடிப்பதற்கு ஒரு வருஷம் ஆச்சு. எதையும் கம்பேர் பண்றதுக்கு ஒன்னும் இல்ல. ரொம்ப சிரமமா இருந்துச்சு. அந்த ஒரு ஜெராக்ஸ் மட்டும் தான். அதை அனுப்பியது ஒரு முஸ்லீம்.

"ஸ்வாமி அவர்களுக்கு மிகைல் நெய்மி பிறந்த தேசத்திலிருந்து அனுப்பப்பட்டது"ன்னு யூசுப்னு பேர் போட்ருக்கான். அப்போ, இந்து முஸ்லீம் எல்லாத்தையும் கடந்த ஒரு தத்துவமா மிர்தாத் இருக்கு. ஒரு தத்துவார்த்தமான புத்தகம் இது. புத்தகம் போட்ட மறு வருஷமே சிறந்த மொழிபெயர்ப்புனு அதுக்கு அவார்டு கிடைச்சது. அது என்னாச்சுன்னா இன்னைக்கு வரைக்கும் ஒரு ஒன்றரை லட்சம் புத்தகம் சத்தமில்லாம, விளம்பரமில்லாம வித்திருக்கு. அதுல என்னாச்சுன்னா அதுக்கு ஒரு அடியார் கூட்டம் வந்திருச்சு. அவங்கள்ல சிலர் போன் பண்ணி, "அய்யா... நாங்கெல்லாம் மிர்தாதிகள், உங்கள வந்து தரிசனம் பண்ணிட்டுப் போலாம்னு வர்றோம்"ங்கறாங்க.. அய்யயோ...நான் ஜஸ்ட் ஏ ட்ரேன்ஸ்லேட்டர். அவ்ளோதான்.. தரிசனம் பண்ற மாதிரி ஆளு இல்ல. ஈடுபாட்டோட இந்த வேலைய செஞ்சேன் அவ்ளோதான்.. நான் சாமியெல்லாம் இல்லனு சொன்னேன். ஆனா புக்கு அப்படியே கரன்ட் மாதிரி பரவுது. அதும் இளைஞர்கள் நிறைய பேர் படிக்கறாங்க. ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தற அளவுக்குக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் மிர்தாத் போய்ச் சேர்ந்திருக்கு. எல்லா பிலாசபியும் இருக்கற பிலாசபி மிர்தாத் புத்தகம். இந்தப் புத்தகம் வாங்குபவர்களுக்கும் மரியாதை. கொடுப்பவர் களுக்கும் மரியாதைன்னு சொல்றாங்க.

## இன்றைய காலகட்டத்தில் பெண்ணியம் சமநிலை தவறுகிறதா..?

பெண்ணியம் சமநிலை தவறுகிறது எல்லாம் இல்லை. ஆனா அவுங்க எழுச்சி கொண்டு வர்றது சில ஆணாதிக்கவாதிகளுக்கு உறுத்தலாக இருக்கு. இவ எல்லாம் இப்படிப் பேசறாளே.... இவ எல்லாம் இவ்ளோ தைரியமாப் பேசறாளேன்னு. அதைச் சகித்துக்கொள்ள முடியல. பெண்ணியம் வந்து இன்னும் பூரணமான விடுதலை அடையலன்னுதான் நான் நினைக்கிறேன். சமம்னா சமம்தான, சமம்னா சமமேதானங்க.. அதுல என்ன கொஞ்சம் அப்பிடி கொஞ்சம் இப்பிடி. அவளுடைய உருவம்.... உறுப்புகள் வைத்துச் சொல்லக்கூடாது.. அது ஓர் உயிர்.. நம்மில் பாதி. நாம என்னல்லாம் பேசறமோ அதெல்லாம் அவளும் பேசுவா. நீ பொம்பள, அப்படி பேசலாமான்னா, நீ ஆம்பள மட்டும் அப்படி பேசலாமா? உலகம் முழுக்க எழுச்சி கொண்டு வர்ற பெண்ணியத்தை இன்னும் இருக்கற ஆணாதிக்கம் போட்டு அமுக்கப் பார்க்குது. அவர்களின் பூர்ண விடுதலையை இவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. கவிதைகள் எல்லாம் கூட... எனக்கே கொஞ்சம் உறுத்தலாதான் இருந்தது. நானே கிரிட்டிசய்ஸ் பண்ணியிருக்கேன்.. மாலதி மைத்ரி கவிதைகள்ல. ஆனா சொல்லணும். அவுங்க சொல்றத நம்மால சொல்ல முடியல. நம்மால சொல்ல முடியாத விஷயங்களைத் தைரியமா அவுங்க சொல்றாங்க. புதிய விடியல் வரும்போது கொஞ்சம் கோபம் வரும். அந்தக் கோவத்துல கொஞ்சம் அதிகப் படியான வார்த்தைகளைப் போட்டிருவாங்க. ஆனாலும், பெண்களுக்கான விடுதலை இன்னமும்



முழுமையாகக் கிடைக்கவில்லை. அதற்கான முயற்சியில் கொஞ்சம் அதிகப்படியாக அவர்கள் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். அவ்வளவுதான்.

**இலக்கியப் பணி என்பதெல்லாம் போய் முழுக்க வணிக நோக்கத்தோடு இயங்கும் இன்றைய பதிப்பகங்கள் பற்றி... உங்கள் பார்வை...?**

ஆமாம்.... இன்றைய பதிப்பகங்கள் ரொம்ப மோசடி... நானே அதற்கு உதாரணம். நான் ஒரு நூற்றியைந்து புத்தகங்கள் எழுதியிருப்பேன்... அதில் தொண்ணூத்திமூணு புத்தகங்களுக்குப் பட்டை நாமம் சாத்தப்பட்டேன். புது பதிப்பகங்கள்கிட்ட நானே ஒன்னும் வேண்டாம்னு சொல்லிடுவேன். மபொசி பத்தி எழுதிட்டு வேலாயுதம் அண்ணாச்சிகிட்ட.... 'அண்ணாச்சி.. ஒன்னும் வேண்டாம்.. என் ஆசானைப் பத்திதானே எழுதினேன்'னேன். அப்படி இருந்தும் அவர் பணம் கொடுத்தாரு.

இந்தப் பிரச்சனைக்குக் காரணம் கல்லூரிப் பேராசிரியர்கள்தான். கல்லூரிப் பேராசிரியர்கள் இதுவரைக்கும் பேசாம வேலை செஞ்சுக்கிட்டு இருந்தாங்க. பத்து பேர் இருக்கக்கூடிய தமிழ்த்துறையில், ஆங்கிலத்துறையில் யாராவது ஒரு இளைஞன் படைப்பாளியா இருப்பான். அவன் எழுதி புத்தகம் போட்டவுடனேயே அவனுக்கான மரியாதை வெளியிலருந்து வர்றதும்... கொண்டாடுறதும்.... இந்த முதியவர்களைப் பெரிதும் பாதித்துவிடுகிறது. ஏன் நாம எழுத மாட்டமான்னு, வியாசகங்கள்... கட்டுரைகள்... தொகுத்து ஒரு புக்கா போடறது...... இந்த மாதிரி நினைப்புல பதிப்பகத்தை அணுகினா அது விக்காது. பதிப்பகத்துக்காரர் என்ன பண்ணுவாரு.. பண்ணிடலாங்க... செலவுத்தொகை மட்டும் ஏத்துக்கிட்டிங்கன்னா.... ஒன்னுமில்ல அட்டைப்படம் மட்டும்.. டிடிபி மட்டும்.. அப்புறம் காகிதம் மட்டும்.. அப்புறம் பிரிண்ட் மட்டும் அப்படினு சொல்ல...

இவங்களுக்கு நல்ல சம்பளம் வேற இருக்கா. அதனால பணத்தைக் கொடுத்து எல்லாரும் புக்கு போட ஆரம்பிச்சாங்க. அவர்கள் ஆயிரம் காப்பி போடவில்லை என்பது ஒரு ரகசியம். 200 காப்பி போட்டு 100 காப்பி இவரு கையில கொடுத்த உடனே உச்சி குளுந்து அடடா... நூ.......ரு காப்பியான்னு வாங்கிக்குவாங்க..... போட்ட காப்பிக்கெல்லாம் புக்கு விக்க விக்க காசு வருங்கன்னு சொல்லுவாங்க அவுங்க.. எங்க.. போட்டாத்தான விக்க முடியும். இதை விட இளைஞர்கள் பரவாயில்ல. 200 காப்பினா 200 காப்பி போட்டு வித்துக்கறாங்க... அது பரவால்ல.. ஆனா சில பதிப்பகங்களைத் தவிர பல பதிப்பகங்கள் ஏமாற்று வேலைதான் செய்கிறது.

பொள்ளாச்சியில் மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம்னு சிற்பியுடைய தலைமையில மொழி பெயர்ப்புக்காக நாங்க ஒரு கூட்டம் நடத்தினோம். தமிழ்நாட்டுல இருக்கற எல்லா மொழிபெயர்ப் பாளர்களையும் கூப்பிட்டோம். மகாலிங்கம் அவர்களின் மகன் மாணிக்கம்தான் ஏற்பாடு பண்ணினார். நல்ல ரீடர் அவர். அவர் படிச்சத வெச்சிக்கிட்டு, இதெல்லாம் நல்லா இருக்குங்களே.. இது தமிழுக்கு வந்தா நல்லா இருக்குமேன்னு சொல்ல, சிற்பி அப்போ நம்மளே ஒன்னு ஆரம்பிக்கலாம்னு சொல்லியிருக்கார். அன்னைக்கே அவருக்கு ஆபிஸ் போட்டுட்டாங்க. சிற்பி என்னையும் கூப்பிட நானும் கலந்துக் கிட்டேன். அப்புறம் வந்தவங்ககிட்ட நான் கேட்டேன். ‘நீங்க பிரபலமான புத்தகங்கள் எல்லாம் எழுதியிருக்கீங்களே... எவ்ளோ வாங்குனீங்க'ன்னு. ‘அது ஒன்னும் வாங்கலீங்க... ஊருக்குப் போக 500, 1000 கொடுத்தாங்க... அப்புறம் ஒரு ஐந்து காப்பி கொடுத்தாங்க.. அவ்ளோ தாங்க'னாங்க...

‘என்னங்க இப்படி ஒரு பிரச்சனை இருக்கே.. சரி நீங்க எவ்ளோ வாங்கி இருக்கீங்க'ன்னு, மாணிக்கம் என்னைப் பார்த்துக் கேட்டார். நானு ஒரு 95, 100 புத்தகங்க பக்கம் எழுதியிருக்கேன்... பட்டை நாமம்தான்.. ஒரு 500 கொடுக்கறது.. ஒரு ஆயிரம் வெச்சுக்கோங்கன்னு குடுப்பாங்க.. அவ்ளோதான்... சரி அன்னைக்குத் தரித்திரம், நாமளும் வாங்கிட்டு வந்திருவோம். அடுத்த முறை பதிப்புக்கு எதுவும் கிடையாது. ஒருமுறை கொடுத்ததோட சரி..அவ்ளோதான். பல பேருக்குச் சின்ன பதிப்பகம்ன்னு சொல்லி நாமளே வேண்டாங்கறோம். சில பெரிய பதிப்பகத்தைப் பத்தி விசாரிச்சா எல்லாருமே இப்படிதாங்கறாங்க. பிரபலமான புத்தகத்தை மொழிபெயர்த்துருக் காங்க... ஒன்னுமே கொடுக்கலங்கறாங்க. இது வந்து ஒரு மோசடி நடந்துகிட்டு இருக்கு.

கரமசோவ் சகோதரர்கள் பண்ணச் சொன்னாங்க. அப்போ நான் ஓஷோ பண்ணிக் கிட்டு இருக்கேன். அதை நிறுத்திப்போட்டு இத பண்ணா அவுங்க கோவிச்சுக்குவாங்க. அப்புறம் இதுக்கான ஊதியம் ஒன்னுமே கிடைக்காது. புக்கு போடாமப் போனா என்னாங்கறதுன்னு கேட்டேன்.

"உங்கள் நூலக"த்துல ஒரு பக்க விளம்பரம் போட்டாங்க. அப்பறம் அடிக்கடி, 'வந்துக்கிட்டு இருக்கு வந்துக்கிட்டு இருக்கு'னு, இவர் மொழிபெயர்த்துக்கிட்டு இருக்காரு.. அந்த மாதிரி விளம்பரம் வந்தது. நான் மொழிபெயர்க்க ஆரம்பிச்சேன். கரமசோவ் சகோதரர்கள் ஆங்கில மொழியில மட்டுமே 47 மொழிபெயர்ப்பு வந்துருக்கு. அப்போ ஐரோப்பா மொழிகள்ல எத்தனை வந்ததுன்னு நமக்குத் தெரியாது. ரொம்ப ஷாக்கிங்கா இருந்தது. அப்போ தேடிப் புடிச்சதுல 6 புத்தகங்கள் கிடைச்சது. கொஞ்சம் கடினமாத்தான் இருந்தது. அந்த 6 புத்தகங் களையும் கம்பேர் பண்ணி கம்பேர் பண்ணி நமக்கு ஒரு மொழியை உருவாக்கி இந்த ஸ்டேண்டர்டுல நாம் எழுதுவோம்னு எழுதினேன். ஓஷோ சொல்றாரு.. எனக்குப் பிடித்த புத்தகங்கள்ல முதல்ல, வார் அண்ட் பீஸ்... ரெண்டாவது கரமசோவ் பிரதர்ஸ்ன்னு. இதுல என்ன சொல்றார்னா... மனிதனுடைய இருண்ட மன ஆழங்களுக்குள் சென்று வெளியில் சொன்னவன் இவனைப் போல எவனும் இல்லைனு. அப்படி, அவ்ளோ புகழ்ந்திருக்கார்... ஆக இத மொழிபெயர்ப்பது பெரிய விஷயம். பண்ணுங்கன்னு நம்ம தோழர்கள் எல்லாருமே சொன்னாங்க.

எல்லாப் படைப்பாளிங்க எழுத்தாளர் மத்தியில 50,000 க்கு ஒரு செக்கு. ஜெயகாந்தனுக்குக் கூட கிடைச்சிருக்காது. புத்தகம் அன்னைக்குத் தான் வருது. அன்னைக்குத்தான் பாக்கறாங்க. எல்லாரும் நல்லாப் பாத்துக்கோங்கப்பா... இவர் பேருக்குத்தான் போட்டிருக்கு... 50000க்குத்தான்

போட்டிருக்குன்னுத் தாபா மீடியாக்கெல்லாம் காட்டினார் (சிரித்துக்கொள்கிறார்). நான் ஏற்புரையில் நம்ம புத்தகத்தைப் பத்தி ஒன்னும் சொல்லல. முன்னால பதிப்பகத்துக்காரங்க எல்லாம் இருக்கீங்க.. உங்ககிட்ட புத்தகம் எழுதிக்கிட்டு வந்து குடுத்தா.. என்ன குடுப்பீங்கனு நீங்க கேக்கறீங்க.. நாங்கதான் புத்தகம் கொடுக்கறமே. அப்போ நாங்கள்ல அந்தக் கேள்வியைக் கேக்கணும்... பாருங்க.... கொடுத்திருக்காங்க... ஏன்னா... இது ஒரு முதலாளியுடையது அல்ல.. இவரு முதலாளி கிடையாது. தயவுசெய்து கூலியாவது கொடுங்க.. காகிதம் வாங்கி எழுதற கூலியாவது கொடுங்க. அப்புறம் இவுங்ககிட்டயும் சொன்னேன். என்னோட விட்றாதீங்கன்னு. இவுங்க ... புத்தகம் எழுதும்போதே பத்திரம் போட்டறாங்க. விற்பனை விலையில் பத்து பெர்செண்ட். அப்புறம் காப்பி ஆறு கொடுத்துட்டு இருந்தாங்க. நான் சண்டை போட்டு பத்துக் காப்பியா மாத்துனாங்க.

சில பதிப்பகங்களைத் தவிர ஆயிரம் காப்பி போடறேன்னு சொல்லி இருநூறு காப்பி போட்டு நூறை எழுதறவனுக்குக் கொடுத்து மீதியை விக்க விக்க காசு தர்றோம்னு சொல்ற மோசடி நடந்துகிட்டுத்தான் இருக்கு.


**ஒரு படைப்பாளி மொழிபெயர்ப்பாளராக மாறும் மனநிலை குறித்துக் கூறுங்கள்....!**

நல்ல புத்தகங்கள் படிக்கும்போது அய்யோ... இது எல்லாருக்கும் தெரிஞ்சா நல்லா இருக்குமே அப்படிங்கற ஆசை இருந்தது. பள்ளியில் படிக்கும்போது என் வகுப்புத் தோழன் ஒருவன் சின்ன சைஸ் துப்பறியும் நாவல இங்கிலீஷ்ல படிச்சிட்டு வந்து எனக்குக் கதை சொல்வான். எதுலடா இருக்குன்னா... இதுல இருக்கு பாருன்னு சொல்வான். நாம வாங்கிப் படிப்போம்.. நமக்கு ஒன்னும் புரியாது. அப்புறம் கல்லூரி போனோம்.. அங்க நல்ல ஆங்கில ஆசிரியர் ஒருவர் ஷேக்ஸ்பியர்க்கு வந்தார். ஒன்னும் புரியாம ஐயோன்னு திருதிருன்னு முழிச்சிட்டு உக்காந்துட்டு இருக்கறோம். சாதாரணமாப் பத்தாங்கிளாஸ் பையனுக்குப் புரியற மாதிரிதான்பா இருக்கு. நமக்குத்தான் புரியமாட்டேங்குதுனு தமிழ்ல சொல்லி க்ராமட்டிக்கா, இலகுவா சொன்னாரு.

அத அப்பவே, "போங்கள் போங்கள் இங்கேன் கூட்டம் போதும் கூச்சல் ஏதும் அறியேன்"னு ஆசிரியப்பா எழுத ஆரம்பிச்சேன். அது நடக்கற வரைக்கும் எழுதிட்டே இருந்தேன். அதன் தூண்டுதலின் பேரில் நமக்கு மொழிபெயர்ப்பு ஆசை வந்தது. அப்புறம் இடையில் விட்டுட்டேன். அப்புறம் வெளிய வந்த பிற்பாடு ரீடர்ஸ் டைஜஸ்ட்ல வந்த ஆன்டி கம்யூனிஸ்ட் மேட்டர் கட்டுரைகள் நிறைய மொழி பெயர்த்தேன். அப்புறம்தான் கம்யூனிஸ்ட் தோழர்கள்லாம் பார்த்து எங்கப்பாகிட்ட (எங்கப்பா சோஷலிஸ்டு) பையன் ஏதோ தப்பாப் போய்ட்டு இருக்கான்.. கவனிங்க.. ரொம்பப் போயிடப் போறான்னாங்க. அப்புறம்தான் எனக்குப் புரிஞ்சுது. நாம் தப்பாச் செஞ்சுட்டு இருக்கோம்ன்னு அத நிறுத்திட்டேன். ஆனா மொழிபெயர்ப்பு நிறைய செஞ்சிருக்கேன் கோவையில வந்த பத்திரிக்கைகள்ல. ஒரு ஆர்வம்தான். அடடா.. நல்ல விஷயமா இருக்கே.. இதை எப்படியாவது சொல்லணுமேங்கிற ஆசைதான்...

**ஒரு சிறந்த நாடகாசிரியர் நீங்கள்.. தற்கால நாடகங்களை மதிப்பிடுங்களேன்....**

தற்காலத்தில் நாடகங்களே இல்லாமப் போச்சு. நவீன நாடகங்கள் கொஞ்சம் வளர்ந்திருக்கு. ஆனா அதுவும் பெருசா இல்ல. தமிழ்நாட்டுல இப்போ நாடகமே இல்ல. நானும் திலீப்குமாரும் காலேஜ் காலேஜாப் போய்ச் சொல்லிக் கொடுத்தோம். நிறைய டேலெண்டெட் இருக்காங்க. இதுல அதிசயம் என்னனா முப்பது நன்ஸ்களுக்கு நாங்க நாடகம் சொல்லிக் கொடுத்தோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்துல முகாம். வேற யாரும் கூட வரக்கூடாதுன்னு சொல்லிட்டோம். நான் தியரி எடுப்பேன். திலீப்குமார் பிராக்டிகல் எடுப்பார். நல்லா ஆர்வத்தோட கத்துக்கிட்டாங்க. அப்புறம், எழுத்தாளர் அரவிந்தன் பாதல் சர்க்கார் கிட்ட ட்ரைனிங் எடுத்தவர். அவரும் நானும் சேர்ந்து நவீன நாடகப் பயிற்சி மூணு நாள் கொடுத்தோம்... ஹிந்துஸ்தான்ல. அப்போ என்ன நிபந்தனைனா.. யாரும் கூட வரக்கூடாது. கிளாஸ் ரூம்ல வைக்கல. பக்கத்துல இருக்கற தோப்புலதான்



நடந்துச்சு. நாய் மாதிரி கத்துவோம். க்கி கிக்கீன்னு கத்தறது... ப்பா..ன்னு கத்தறது.... பூனை மாதிரி இப்படி வாய்ஸ் கல்ச்சர். அது மற்றவர்களுக்கு டிஸ்டர்ப் ஆகும்னு யாரையும் வரக்கூடாதுனு சொல்லிட்டோம். பயிற்சி போய்க்கிட்டிருக்கும்போதே இடைவேளையில நீங்களா ஒரு அஞ்சு நிமிசம் பத்து நிமிசத்துக்குக் கற்பனை பண்ணி நாடகம் போடுங்கன்னு சொன்னோம். ஆச்சரியங்க.... ரொம்ப ஆச்சரியங்க... பிச்சு உதர்றானுங்க. நிர்மலா காலேஜ்ல பண்ணும்போது.. அந்தப் பொண்ணுங்க.. அப்பப்பா.... வெளுத்து வாங்குதுங்க.. பிரமாதமாப் பண்றாங்க. நாம சொல்லிக் கொடுத்தது பேஸ். ஆனா அதுக்கு மேல பண்றதெல்லாம் அவுங்கதான். பஸ் ஸ்டாண்ட் மாதிரி, சந்தைக்கடை மாதிரி அச்சுஅசலாப் பண்ணி அசத்தறாங்க. அசாத்தியமாப் பண்றாங்க. வெளிய நாடகம் போடும்போது கூட நீங்கள்லாம் வரணும்னு சொன்னோம். அருமையான டேலண்ட்டா இருக்காங்க நம்ம மாணவர்கள். ஆனால் அவங்களால தொடர்ந்து செய்ய முடியறது இல்ல. அதேமாதிரி பொதுவெளில காமெடி நாடகம் போட்டவங்க எல்லாம் போய்ட்டாங்க. கட்டுப்படி ஆகறதில்ல. தாக்குப் பிடிக்க முடியறது இல்ல. வெறும் பத்தாயிரம் கொடுத்தா ஒரு நாடகக் குழு எப்படி சமாளிக்கும்...? போக்குவரத்து சாப்பாடு குடுத்தறோம்னு வையுங்க.. ஆனாலும் பத்தறதில்ல. எப்படி பிரிச்சுக்குவாங்க... பத்தாயிரத்தை? கஷ்டம். எங்களுக்கும் அதுக்கு மேல கொடுக்க முடியாது. வேற வழி இல்ல. இப்போது மேடை நாடகங்கள் செத்துப்போய் விட்டன. மீண்டும் பிழைக்க வேண்டும்.. அவ்வளவுதான்.

**உங்களது கவிதைகள் பிற மொழிகளில் பெயர்க்கப்பட்ட அனுபவங்கள்.....**

என்னுடைய கவிதைகளை நேரிலேயே உட்கார்ந்து கன்னடத்தில் மொழிபெயர்த்தாங்க. மலையாளத்துல மொழிபெயர்த்திருக்காங்க. மலையாளத்துல வந்து 'நரமேதயாகம்' அப்படினு ஒரு கவிதை. குஜராத் கலவரம் பத்திதான். அத கேரளாவுல பெரிய கவிதையாப் போட்டாங்க. அதுக்கு ஒரு பாராட்டு விழா இங்க நகராட்சி கலையரங்கத்துல நடத்துனாங்க. ரொம்ப ஆச்சரியமா இருந்தது. அவுங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்ல. மலையாளத்தில் வந்த ஒரு கவிதை. அவ்வளவுதான். பெரிய பாராட்டெல்லாம் பண்ணிக் கேரளா புரஸ்கார் விருது கொடுத்தாங்க. பலமுறை கேரளாக்காரர்கள் அதற்கு மரியாதை பண்ணியிருக்காங்க. போலந்து கவிதை ஒன்னை மொழிபெயர்த்தேன். அதுக்காக நம்ம கவிதையை அவுங்க மொழிபெயர்த் தாங்கன்னு சொன்னாங்க. ரஷ்யால மொழிபெயர்த் திருக்காங்க. ஆங்கிலம் ஹிந்தியில கூட வந்திருக்கு. 'கையொப்பம்' (சாகித்திய அகாதெமி விருது பெற்ற கவிதை நூல்) ஆங்கிலத்துல வந்திருக்கு. ஆனா இதுவரைக்கும் ஒரு காப்பி கூட எனக்குக் குடுக்கல.

**(இன்னும் திராவிட அரசியல்.. விருதுகள்.. கமலின் அரசியல்.. தஸ்தயேவ்ஸ்கி போன்ற பல தளங்களில் கவிஞர் புவியரசு உரையாடியிருக்கிறார். அவை அடுத்த இதழில்)** ■

• கவி : கனிமொழி.ஜி
சித்திரம் : கொ.வடிவேல்



# நேசம்

நினைவில் அலையும் கடலருகே இதுபோல் அரிதாய் வருவதுண்டு
.
கசடுகளை நகர்த்திப் போகும்
நதியெனச் சில காலம்
.
குழுமிய உறவுகள் ஒவ்வொன்றாய்க் கரைய, மீதம் இரு உயிர் சிநேகம்
.
முன்னந்தி மழுங்கல் நிலவு
அலையடிக்கும் காற்றும் மென்மணலும்
.
பொழுதில் சுமந்த சுமைகள் தள்ளிப்
பிடரியைப் புரட்டுகிறதோர் வெண்புரவி
.
நீரில் மிதக்கும் அகலொளி?
தூரத்து மீன் படகுகள்
.
இளநீலக் கடலை மூடிய கண்களுக்குள் பார்க்கிறேன்..
செவிபொத்துகிறான் சிநேகன்
இன்னிசை நுழைய
பொன்வானம் பன்னீர்த்தூவுது அந்நேரம்..........
.
இப்பொழுதும் ...
இந்நிலமும்...
முடியும் இக்கரையில்
முடிந்து போதல் பேறன்றி வேறென்ன. ■

• ஜி. ராஜன்

# செம்மண்ணின் மைந்தன் சூர்யகாந்தன்






"வாழ்க்கையில் கசப்புக்களை இதயம் முட்டக் குடிக்கிறோம்;
இதயம் முட்டக் குடிப்பதால் தலைநிமிர்ந்து நிற்கிறோம்;
தலைநிமிர்ந்து நிற்கும் நம் தேக்குமர தேகங்களில்
மகிழ்ச்சிப் பூக்கள் பூக்கிற நாள் வரும் !"

**கொ**ங்கு நாட்டின் மேற்குத்தொடர்ச்சி மலையடிவாரத்தில் வானம் பார்த்த உழவுத்தொழிலை வாழ்வாதாரமாய்க் கொண்ட ஒரு சிறு கிராமத்திலிருந்து எழுபதுகளின் மத்தியில் கோவை அரசுக் கலைக்கல்லூரியில் இளங்கலை பயிலவந்த இளைஞன் தனது வாழ்க்கை கற்பித்த பாடங்களின் அரிச்சுவடியாய்க் குறித்து வைத்த வாசகங்கள்தாம் மேலே குறிப்பிடப்பட்டவை.

ஒரு விவசாயக் குடும்பத்தில் 1955ஆம் ஆண்டு பிறந்து மண்ணின்மீதும் மண்ணின் மக்கள் மீதும் அதீத அன்புகொண்ட மருதாசலம் எனும் பெயர்கொண்ட அந்த இளைஞன் "சூர்யகாந்தன்" எனும் பெயரால் தமிழ் இலக்கிய உலகம் அறிய பிற்காலத்தில் பல்வேறு இந்திய மொழிகளின் இலக்கிய வீதிகளிலும் பேசப்பட்டவர். கோவை பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் பள்ளி வாழ்க்கை அந்த இளைஞனை




வார்த்தெடுத்தது. ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தின் வாழ்க்கை கற்றுக் கொடுத்த அனுபவங்களையும் விளிம்புநிலை மனிதர்களின் வாழ்வியலையும் அன்றாடம் கண்ணுற்று வளர்ந்த அவரது உணர்வுகள் கதைகளாகவும் கவிதைகளாகவும் பரிணமிக்கத் துவங்கின.

1974இல் “தாமரை” இதழில் வெளியான “தண்டிக்கப்படாத குற்றவாளிகள்” என்னும் அவரது சிறுகதைதான் அச்சிலேறிய முதல் சிறுகதை. அதற்குப் பின்னர் அவரது இலக்கிய வேட்கை மென்மேலும் வளர வானம்பாடி, தீபம், தாமரை, நீலக்குயில், சிவந்த சிந்தனை, வேள்வி போன்ற அன்றைய நாட்களின் புகழ்பெற்ற இலக்கிய இதழ்கள் உரமிட்டன. கல்லூரி நாட்களில் அவரது தமிழ்ப் பேராசிரியராக இருந்த கவிஞர் மு. மேத்தா அவர்கள் அவரது இலக்கிய ஆர்வத்தை இனம் கண்டுகொண்டு ஊக்குவிக்க சூர்யகாந்தனின் முதல் கவிதைத் தொகுப்பு “சிவப்பு நிலா” வெளியானது. அந்த நாட்களின் இலக்கியவானில் பறந்து திரிந்த “வானம்பாடி” கவிஞர்கள் வரிசையில் அவரும் ஒருவரானார். இவரது படைப்புகளை ஜனரஞ்சகப் பத்திரிக்கைகளான குங்குமம், கல்கி, அமுதசுரபி, தினமணி போன்ற இதழ்களும் வெளியிட்டன. “தாய்” வார இதழின் ஆசிரியர் குழுவிலும் சிலகாலம் பணியாற்றிய சூர்யகாந்தன் பின்னர் முதுகலை, ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டங்களை முடித்துத் “தற்கால இலக்கியத்தில் நாவல்கள்” என்ற தலைப்பில் முனைவர் பட்டத்தையும் பெற்றார்.

சூர்யகாந்தனின் இலக்கியப் படைப்புக்கள் எண்பது தொண்ணூறுகளில் அகில இந்திய அளவில் பெரிதும் பேசப்பட்டன. செவ்வந்தி மனிதர்களாய்க் கொங்கு வட்டார வழக்கில் உரையாடி வாசிப்பவர் கண்முன்னே நடமாடும் கதாபாத்திரங்கள் நிறைந்த அவரது “மானாவாரி மனிதர்கள்”, “பூர்விக பூமி” எனும் நாவல்கள் கொங்கு மண்ணின் இரட்டைக் காப்பியங்கள் எனத் தமிழ் இலக்கிய உலகின் விமர்சகர்களால் கருதப்பட்டன. உழவுத்தொழில் வாழ்வியலைப் பேசும் அவரது படைப்புக்கள் பிற்காலத்தில் “செம்மண் இலக்கியம்'' என்கிற ஒரு மண்சார்ந்த இலக்கிய வகைமைக்கு வித்திட்டன.

நகரமயமாதலால் விவசாயம் சார்ந்த விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை எவ்வாறு



பாதிக்கப்படுகிறது என்பதை ஒரு அருமையான நாவலாக 1989ல் வெளிக்கொணர்ந்த அவரது “மானாவாரி மனிதர்கள்” இலக்கிய உலகில் பெரிதும் பேசப்பட்டு அதற்காக அமரர் அகிலன் நினைவு விருதினையும் ஆண்டின் சிறந்த நாவலுக்கான இலக்கியச் சிந்தனை விருதினையும் பெற்றிடக் காரணமானது. இந்த நாவல் மலையாளம், கன்னடம், தெலுங்கு, இந்தி போன்ற நமது பாரத நாட்டின் மொழிகளில் மட்டுமல்லாது “Sons of the Red Soil” என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்யப்பட்டது. அந்த நாவல் ருஷ்ய மொழியில் மொழியாக்கம் செய்வதற்கான பணிகளும் துவங்கப்பட்டிருக்கின்றன. இப்போதும் பல பதிப்புக்களைத் தாண்டிய இந்த நாவல் நூற்றுக்கணக்கான எம்.ஃபில், பிஎச்.டி. ஆராய்ச்சிகளுக்கு மையப்பொருளாயிற்று. “பூர்விக பூமி” “Ancestor’s Land” என்ற தலைப்பில் மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியாகியுள்ளது.

ஆங்கிலம், மலையாளம் மற்றும் இந்தி மொழி எழுத்தாளர்களின் படைப்புக்களோடு ஒப்பிலக்கிய ஆய்வுகளும் நடத்தப்பட்டுள்ளன. இந்திய இலக்கிய வானில் சுடர் விடும் பெரும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல... தமிழ்த் திரைத்துறையைச் சேர்ந்த பிரபல இயக்குனர்களான பாரதிராஜா, பாலு மகேந்திரா, கே. பாலசந்தர், நடிகர் சிவகுமார் போன்றவர்கள் பல்வேறு மேடைகளில் சூர்யகாந்தனின் இலக்கியப் பணியினைப் பாராட்டியுள்ளார்கள். சூர்யகாந்தனின் இலக்கியப் படைப்புக்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகளை நியு செஞ்சுரி புத்தக நிறுவனம் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டுள்ளது. அவரது படைப்புக்களைத் தமிழகப் பல்கலைக்கழகங்களும் பிற மாநிலப் பல்கலைக்கழகங்களும், தன்னாட்சிக் கல்லூரிகள் பலவும் தமிழ் இலக்கியம் பயிலும் மாணாக்கர்களுக்கான பாட நூல்களாக்கியுள்ளன. பல்வேறு இந்திய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் இவரது பல படைப்புக்கள் மொழியாக்கம் செய்யப்பட்டு இலக்கிய உலகினரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளன.

இதுவரை முப்பத்தைந்து நூல்களை எழுதியுள்ள இவர் அகில இந்திய வானொலியின் கோவை ரெயின்போ பண்பலையில் “மயிலிறகு” நிகழ்ச்சி வாயிலாகக் கணக்கற்ற வானொலி நேயர்களின் பேரபிமானத்தையும் பெற்றுள்ளார். இவரது படைப்புக்கள் சில வானொலி மற்றும் தொலைக்காட்சித் தொடர்களாகவும் பரிணமித்துள்ளன. இன்றைய நாட்களிலும் சில வலைதள வானொலிகளில் இவரது பணி தொடர்கிறது. இவரது கதாபாத்திரங்களைப் போலவே இன்றும் நடமாடும் விளிம்பு நிலை மனிதர்களோடு செம்மண்ணின் மைந்தனாகக் கோவை அருகே ராமசெட்டிபாளையத்தில் குடும்பத்தோடு வசித்துக்கொண்டு பேராசிரியர் பணியில் ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து தனது எழுத்துப் பணியில் ஈடுபட்டுவருகிறார் சூர்யகாந்தன்.

• சூர்யகாந்தன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# ஒரு மனிதன்: ஒரு வீடு: ஒரு தோட்டம்

அந்த ஊருக்குள் இந்த வீட்டை யார் அடையாளம் சொல்வதென்றாலும், முன்புறமுள்ள தென்னை மரங்களைக் குறிப்பிட்டுத்தான் வழிகாட்டுவார்கள்.

அப்படிக் கச்சிதமாக வீட்டிற்கு முன்னால் சின்னதாகத் தோட்டம் ஒன்று அமைந்திருந்தது. கொய்யாச் செடிகளும், எலுமிச்சை வகையறாக்களும், ரோஜா முதலான சில பூச்செடிகளும் அதில் இருந்தபோதிலும் வரிசைக்கிரமமாகப் பச்சை மட்டைகளைச் சுமந்துகொண்டு, யானைகள் நிற்பதைப் போன்ற வளமையோடு நின்றுகொண்டிருந்த நான்கைந்து தென்னை மரங்கள்தான் முக்கியத்துவத்தோடு எடுப்பாகக் களையூட்டின.

இந்த வீட்டுத் தோட்டம், அப்பாவின் நிர்மாணிப்பில்தான் உருவாகியிருந்தது. அவரது அக்கறையும் ஆர்வமுமே அந்தத் தாவரங்களுக்கு நீராகவும் உரமாகவும் அமைந்தன. செடிகளின் பசுமையிலும் பூக்களின் நறுமணத்திலும் உறவு கொண்டு ஒவ்வொரு நாளும், காலை வேளையில்



வந்து போகிற வண்ணத்துப் பூச்சிகளையும்; தேனீக்களையும் பார்த்துக்கொண்டிருப்பதில் அவருக்கு அலாதியான பிரியம் இருந்தது.

தென்னம்பாளைகள் வெடித்து, அதிலுள்ள முத்துக்கள், தங்கமணிகளைப் போல் புன்னகைத்திருக்கிற அழகுக்கும், அப்போது எழுகிற வாசனைக்கும், தெற்கு மலைகளில் இருந்தும்கூட தேனீக்கள் வந்து போகும் என்று அவர் சொன்னதைச் சிலாகித்துக் கேட்டிருக்கிறோம்.

குழந்தைகளுக்குக் குளிப்பாட்டும்போது உபயோகப்படுத்தும் துவளைக் குளுமைக்கு அக்கம்பக்கத்துத் தாய்மார்கள் இங்குதான் சரளமாக வருவார்கள். திருநீர்ப் பத்திரி, மாசிப்பத்திரி என மூலிகைச் செடிகளும் பாத்திகளின் ஓரத்தில் அங்கம் வகித்தன. இது தவிர, நாகலிங்கச் செடி கூட வைக்கப் பட்டிருந்தது. தேள்களோ, மற்ற விஷ ஜந்துக்களோ மட்டுமின்றிச் சர்ப்பங்கள் எதுவும்கூட இங்குத் தலைகாட்டாது என்ற முறையிருந்தது.

இவர், ஊருக்குத் தெற்கே மலை அடிவாரத்தில் இருந்து, தோட்டத்துப் பூமியை விற்றுவிட்டு வந்ததற்குப் பின்னால் சில மாதங்கள் ஆறுதல் இல்லாமல், ரொம்பவுமே இடிந்துபோய்த்தான் உட்கார்ந்துவிட்டார். பிறகு கொஞ்சங் கொஞ்சமாகத் தேறுதல் அடைந்தது இந்தத் தென்னங்கன்றுகளை, வீட்டிற்கு முன்னால் நட்டதற்குப் பின்னால்தான் எனலாம். மனதில் உண்டாகியிருந்த வெறுமையும் வெப்பமும் படிப்படியாகத் தணியலாயின.

மலைக்காற்றின் விறுவிறுப்பிலும், பனிப் பதத்திலும் இவருடைய உடம்பு எந்தச் சூழலிலும் நொம்பலப்பட்டதேயில்லை. மாறாக, தெற்குத் தோட்டத்துப் பூமியின் ஈடுபாடு உடலுக்கு ஏற்ற பலத்தையே தந்துவந்தது. அறுவடைக் காலங்களிலும் காய்கறிகள் நிறைந்திருக்கும் தருணங்களிலும் கட்டாயம் இரவுத் தங்கலுக்கு அங்கேயே இருந்துகொள்கிற வழக்கம் இவரிடமிருந்தது.

சாயங்காலம் வரை, செடிகளுக்கும் இதர பயிர்களுக்கும் பாய்ந்த கிணற்று நீர், மோட்டார் பம்பு செட்டை நிறுத்தியதற்குப் பின், வாய்க்காலில் தேங்கி நின்று நிலாக் கால இரவுகளில் இளைப்பாறும். தெற்குப்புறமுள்ள மலைகளின் பிம்பம், நிலா வெளிச்சத்தோடு சேர்ந்து, அந்தத் தண்ணீரில் முகம் பார்க்கும்.

தக்காளி, கத்திரி, அரசாணி, பீர்க்கைச் செடிகள் பாத்திகளுக்குள் இருந்தவண்ணம் உறக்கம் கொள்கிறதை வரப்பில் நடந்தபடி பார்த்து ரசிக்கிற மனப்பாங்கே அப்பாவிடமிருந்து கேட்டதுண்டு.

கார்த்திகைத் தீப நாட்களில் ஊர் முழுக்க விளக்குகள் கண் விழித்திருப்பது போல் காடுகளில் தானியமடிக்கும் களத்து மேடு, தோட்டத்தில் கிணற்றுமேடு இங்கெல்லாம் கூட விளக்குகள் வெளிச்சமுகம் காட்டுவதுண்டு. என்றாலும் வானத்து நட்சத்திரங்கள் எல்லா இரவுகளிலும் இந்தச் செடி கொடிகளுக்காக விழித்திருப்பதை நினைத்தபோது வியப்பாகத்தான் இருந்தது.

பகல் முழுக்க உழைத்துவிட்டுச் சென்றவர் களின் பாதச் சுவடுகளை, அந்த நட்சத்திரங்கள் அப்படிப் பூஜிக்கின்றன என அம்மா சொன்னது நினைவில் அணையாமல் ஒளிர்ந்தது.

அந்தத் தெற்குப் பூமியை விற்றுவிட்டு வந்ததற்குப் பிறகு அப்பாவின் நெஞ்சம் பட்ட வருத்தம் வெம்மையாக மாறி, உடலெங்கும் கொப்புளங்களாக வந்து சில நாட்கள் வரையிலும் இம்சைப்படுத்தியது.

தென்னங்கன்றுகளுக்கு நீர் ஊற்றி அவை பசுமையாக உயிர் பிடித்து வளரத் தொடங்கிய பிறகுதான் இவரது உபாதை நீங்கியது என்பார். உண்மைதான். உழைத்துப் பழகிய திரேகத்தை வெறுமனே வைத்திருக்க இயலாமல் வீட்டிற்கு முன்னால் சிறிய அளவில் இதை உருவாக்கி அது தினமும் பராமரிக்கிற பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு, உள்ளூர அமைதியும் ஆறுதலும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டோம்.

வீட்டின் வலதுபக்கமாய் இருக்கிற சாளை சில காலமாகவே புழக்கத்தில் இல்லை. விவசாயம் பண்ணிக்கொண்டிருந்தபோது ஒரு ஜோடி

எருதுகள், இதர பண்டம்பாடிகள் என இருந்தன. அவைகளைக் கட்டிய கட்டுத்தரை, அந்தச் சாளையை அடுத்தே இருந்தது.

நாள் தவறாமல், வருஷம் முழுவதும் நம்மோடு ஒன்றாய்ச் சேர்ந்து பாடுபட்ட அந்த எருதுகளுக்குத் தைப் பொங்கலின்போது குளிப்பாட்டலும், கொம்புகளுக்கு வர்ணமும் கொப்பி வெண்டையமும் சலங்கைகளுமாய் அலங்கரித்து நன்றி தெரிவித்த தருணங்கள் கரும்பை விடத் தித்திப்பாயிருந்தன. சர்க்கரை பழத்தோடு இனிப்பும், தேங்காயும் கொடுத்து அவைகளைத் தின்ன வைக்கும்போதும், கழுத்து மணி ஓசையோடு தலையை அசைத்து அந்தச் சுவையை ருசித்துத் தின்கிற எருதுகளின் ஆனந்தமும், விரல்களை நாக்கால் நக்கி உள்ளங்கைகளுக்கு முத்தம் கொடுக்கிறபடியான செயலும் சிலிர்ப்பை உண்டாக்கக்கூடியனதான்.

விவசாயம் நின்று போனதால், எருதுகளை விற்றுவிட வேண்டியதாயிற்று. அதைத் தொடர்ந்து வண்டியும் சொற்பமான விலைக்கு இடம் மாறிப் போயிற்று.

சாளையின் மேல் கூரைத் தொடுகிறபடியாய் உயரமாய் நின்றிருக்கும் அந்த எருதுகளும், எத்தனையோ சுமைகளைச் சுமந்து உறுதி குறையாமல் உடன் உழைத்த அவைகளின் வாத்சல்யமும் ஞாபகத்தை விட்டுப் பெயர்ந்து விடாது.

கட்டுத்தரையும், வண்டி நிறுத்தியிருந்த இடமும் சும்மா கிடந்தன. அவைகளைப் பார்க்கப் பார்க்க வேளாண்மை விளைச்சல் என ஐக்கியமாகியிருந்த வாழ்க்கையின் பின்புலம்.. விற்றுவிட்டு வந்த பூமியின் நினைவை மீண்டும் மீண்டும் கண் முன் கொண்டு வந்து நிறுத்துவதாய் வாட்டின.

இந்தச் சின்னத் தோட்டமானது அந்த வாட்டத்தை நீக்குகிற ஒன்றாக அப்பாவுக்குத் தட்டுப்பட்டிருக்க வேண்டும். வேஷ்டியைத் தார்பாச்சிக் கட்டிக்கொண்டு இரண்டு கைகளிலும் பக்கெட்டுகளைச் சுமந்துகொண்டு போய்த் தென்னைகளுக்குத் தண்ணீர் ஊற்றுகிறபோது இவரின் தள்ளாமை, வயது முதிர்ச்சி எல்லாமே விலகிப்போய் விடுகின்றன. புதியதொரு பலம் கூடி வந்தது போலத் தெரிகிறது.

தகப்பனிடம் சுற்றி நின்று தின்பண்டங்களை வாங்கிக் கொள்கிற பிள்ளைகளின் குதூகலத்தோடு அந்தத் தென்னைகள் இவருக்காகக் காத்து நிற்கிறன என்று எண்ண வேண்டியிருந்தது.

'இதுக மரமாகி நம்பளுக்குப் பலன் கொடுக்க நாளாகலாம்! ஆனா ஆகட்டும், நம்ப பயங்க, பேரன்மார்களுக்குக் கண்டிப்பா இதுகளோட பலன் கெடைக்குமே! அது போதும்' எனக் கூறுவதை அந்த மரங்களே கூட அசையாது நின்று பொறுப்போடு கேட்பது போலிருக்கும்.

இந்தத் தென்னைகளுக்குப் பிறகுதான் மற்றவைகளெல்லாம் ஒவ்வொன்றாக வந்து சேர்ந்தன. அப்பாவின் அண்ணன் முறை ஆகிற பங்காளி ஒருத்தர் இரண்டு மூன்று வாழைக் கன்றுகளைக் கொண்டு வந்து கொடுத்தார். அவைகளும் நடப்பட்டன.

"வீட்டுக்கு முன்னால் இதுபோல மங்கலமான மரங்கள் இருக்கிறது ரொம்பவும் நல்லது. காலையில் எழுந்திருச்சதுமே இதுகளோட பசுமையில் எல்லோரும் விழிக்கிறது சிலாக்கியமானது" என்கிற அவரது வார்த்தைகளில் அப்பாவுக்கும் நிறையவே உடன்பாடு உண்டு.

தென்னைகள் உற்சாகமாக வளர்ந்து மூன்றாவது வருஷத்தைத் தாண்டும்போது பாளைகள் விட ஆரம்பித்தன. முதல் பாளையைப் பார்த்தபோது பேரக்குழந்தை பிறந்ததைக் கண்ட தாத்தாவின் சந்தோஷம் இவருக்குத் தோன்றியதை நாங்களெல்லாம் கண்டோம்.

"தெற்கே ஜல திசையைப் பார்த்து இந்தத் தென்னம்புள்ள பாளைவுட்டிருக்கு. அமோகமாய்க் காய்க்கும்," என்றார்.

"தென்னை தெற்கே பார்த்து பாளைவுட்டாப் பிடியே வாழையும் வடக்கே பார்த்துக் குலை தள்ளட்டும்," என்று பெரியப்பாவும் சொன்னதைக் கேட்டுக்கொண்டு நின்றிருந்தோம்.

"இந்த மாடு இப்பிடி சுபாவம் உள்ளதா இருக்கும். இந்த எருது இன்னவிதமாகப் பாடுபடும்" என அவைகளின் உடம்பிலுள்ள சுழி, மச்சம் போன்றவைகளைக் கொண்டு கணித்துச்

சொல்கிற மாதிரி மரங்களின் வளர்ச்சியையும் அவை தருகிற முதல் மகசூலையும் வைத்து எதிர்காலத்தில் தரவிருக்கிற பயன்களைக் கணக்குப் போட்டு, திட்டமிட்டுக் கொள்கிற இவர்களின் அனுபவம், ரசமாகவேபட்டது.

"இதுகெல்லாம் சீமைத் தென்னம்புள்ளை ரகத்தைச் சேர்ந்ததுக. முப்பது வருஷக் கெடுவு வரையிலும்தான் காய்ப்பிருக்கும்."

"அதுக்குள்ள வேற புள்ளகள வெச்சுப் பயிர் பண்ணிக்கலாமில்லே! இதுக காய்ப்பு ஓயறபோது அடுத்ததுகள காய்ப்புக்குக் கொண்டு வந்துறலாம்."

"ம்..அப்பிடிச் செய்யிறதுண்டு. இடவசதி போதலீனாக் காய்ப்பு நின்னதுக்குப் பொறகு மரங்களை வெட்டிப்போட்டு அடுத்த மரங்களுக்கு எடம் பண்ணிக்கலாம்." இவர்களின் பேச்சுத் தொடர்ந்து கொண்டிருந்தது.

அந்த இடத்தை விட்டு நகர்ந்து வந்து தனியாக ஒதுங்கியபோதும் எனக்கு ஏகோபித்த நெருடலாக மனசெங்கும் படபடத்தது.

இவ்வளவு அக்கறையாகவும் பாசமாகவும் வைத்து அப்பா வளர்த்த இந்த மரங்களை, எதிர்வரும் நாட்களின் ஒரு சூழலில், வெட்டிவிடுவதா? அதை நம்மால் செய்ய இயலுமா? மனம் ஒத்துக் கொள்ளாதே! நினைக்க நினைக்கத் தூக்கம் பிடிக்கவில்லை.

தெற்கே மலை அடிவாரத்திலிருந்த தோட்டத்துப் பூமியில் நின்றிருக்கும் தென்னைகளைப் பற்றி அப்பா நினைவுகூர்ந்து சொல்லும்போது,

"என்னோட தாயும் தகப்பனும், இன்னமும் அந்தப் பூமியிலே அந்த மரங்களோட ரூபத்திலே நின்னுகிட்டிருக்கிறது போல மனசு அழுந்துது," என்பதுண்டு! இதைப் போலவே அம்மாவும், தன்னுடைய பெற்றோர்களை அந்த பூமியிலுள்ள தென்னைகளின் ஞாபகார்த்தமாய்க் குறிப்பிட்டதுண்டு.

நாட்களின் ஓட்டத்தில் நான் சொந்த ஊரைவிட்டு வெளியூருக்குப் பணி புரியச் செல்ல வேண்டி வந்தது. அந்த இடைவெளியில் என்னென்னவோ தோன்றி மறைந்து போய்விட்டன. ஆனால் மனதில் எங்களுடைய வீட்டு முன்னால் இருக்கும் அந்தத் தென்னை மரங்களின் நினைவு மட்டும் பசுமை மாறாமல் வளமான குலைகளைச் சுமந்து கொண்டு நிற்கும்.

ஒரு விசேஷத்தின் நிமித்தமாக அன்றைக்கு ஊருக்கு வந்திருந்தேன். சற்றுத் தூரத்தில் வரும்போதே தென்னைகளின் உச்சந்தலைகளும், ஓலைகளின் அசைவும் என்னை வாஞ்சையோடு அழைத்தன.

வீட்டிற்கு முன்னால் உள்ள அந்தத் தோட்டம் எத்தனையோ மாற்றமடைந்திருந்தது. முன்பிருந்த சில செடிகளைக் காணவில்லை. அதற்குப் பதிலாக வேறு சில செடிகள் நடப்பட்டிருந்தன. ஆனால் அப்பா வைத்த அந்தத் தென்னைகளும், பெரியப்பா தந்த வாழைகளும் நிரந்தரமாக நின்றிருந்தன.

நிலாவெளிச்ச இரவில் அப்பாவின் நினைவு வர, வாசலுக்கு வந்து மீண்டும் அந்தத் தென்னை மரங்களையே நெகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு நின்றேன். புதிதாகக் குழி வெட்டி நாலைந்து தென்னங்கன்றுகளையும், அதற்கு அடுத்துச் சில வாழைக்கன்றுகளையும் நட்டிருப்பது தெரிந்தது.

இவை இருக்கும்போதே இவற்றின் வாரிசுகளையும் நட்டு, வளர்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் போலிருக்கிறது. எதிர்வரும் நாட்களில் எப்போதாவது, அப்பா வைத்த அந்தத் தென்னைகளைக் கூட வெட்டி விடவும் செய்வார்களோ என எண்ணும்போது உள்ளூர ஒருகணம் அதிர்ச்சியும் கலக்கமும் பரவின.

காற்றுக்குத் தென்னங்கீற்றுக்கள் அசைந்த போது, அகலமாய் மட்டைகளை விரித்துக் கொண்டு அவை நின்றிருப்பதைப் பார்த்தபோது என்னைத் தூக்கித் தோளில் வைத்துக் கொள்ள அப்பா தன்னுடைய கைகளை நீட்டுவது போலிருந்தது.

அந்த மரங்களின் நிழலில் இருந்தபடி அவர் பறித்துத் தந்த இளநியின் நீரை ருசித்துக் குடித்த நாட்கள் கண்களில் ஈரமாய்த் தேங்கின. அந்த நிர்மலமான நினைவின் கூர்மை நெஞ்சில் பாய்ந்து என்னை அசைத்தது.

அதன் பிறகு அதிக நேரமாய் அந்த இடத்தைவிட்டு நகராமல் நின்றுவிட்டேன். ■

• நிருபர்குழு

# அசாம் இலக்கிய விழாவில் கவிதை வாசித்த தமிழ்க் கவிஞர் மு.முருகேஷ்




**வ**ந்தவாசியை அடுத்த அம்மையப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவர் கவிஞர் மு.முருகேஷ். இவர் மத்திய அரசின் சாகித்திய அகாதெமியின் சார்பில் நடைபெறும் 'அபிவ்யக்தி' விழாவில் கவிதை வாசிக்க, அசாம் மாநிலம் கவுகாத்திக்குச் சென்று வந்துள்ளார்.

மத்திய அரசின் இலக்கிய அமைப்பான சாகித்திய அகாதெமி ஆண்டுதோறும் ஒவ்வொரு இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும் சிறந்த நூல்களுக்குச் சாகித்திய அகாதெமி விருதினை வழங்கி வருகிறது. 2017 ஆம் ஆண்டிற்கான மொழிபெயர்ப்புச் சாகித்திய அகாதெமி விருது வழங்கும் விழா ஜூன் 22, வெள்ளிக்கிழமை மாலை அசாம் மாநிலம் கவுகாத்தியிலுள்ள விவேகானந்தா கேந்திரா மையத்தில் நடைபெற்றது.

இதனையொட்டி, 'அபிவ்யக்தி' எனும் இந்திய மொழிக் கவிஞர்களின் கவிதை வாசிப்பும் கட்டுரை வாசிப்பும் ஜூன் 23,24 இரு நாட்கள் அசாம் மாநிலத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தமிழ்க் கவிஞர்கள் சார்பில் கவிஞர் மு.முருகேஷ் சென்று, தனது கவிதைகளை வாசித்துள்ளார். நிகழ்வு குறித்து அவரிடம் கேட்டபோது, "இரண்டு மாதங்களுக்கு முன்பு




சாகித்திய அகாதெமியின் தமிழ்நாடு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் சிற்பி அவர்கள், என்னை அலைபேசிவழி அழைத்து, "சாகித்திய அகாதெமி நிகழ்வொன்றில் கவிதை வாசிக்கச் செல்ல முடியுமா..?" என்று கேட்டபோது, எங்கே, எப்போது, என்ன நிகழ்வு என்று எதுவும் தெரியாது.

"அவசியம் செல்கிறேன்... அய்யா!" என்று என் ஒப்புதலை மட்டுமே சொன்னேன். கடந்த ஒரு மாதத்திற்கு முன்புதான், 'அபிவ்யக்தி' குறித்தும் அதில் கவிதை வாசிக்க அழைக்கப் பட்டிருப்பதாகவும் சாகித்திய அகாதெமியிடமிருந்து எனக்குக் கடிதம் வந்தது.

இந்தியாவின் பல தென்மாநிலங்களுக்குச் சென்றுள்ளேன். ஆனால், வட மாநிலங்களில் டெல்லி, மேற்கு வங்கம், ஆக்ரா என ஓரிரு இடங்களுக்குத்தான் சென்றுள்ளேன். வடகிழக்கு மாநிலமான அசாமை 'ஏழு சகோதரி மாநிலங்களுள் (Seven Sister States)' ஒன்றென அழைக்கிறார்கள். உற்சாகத்தோடு பயணத்தைத் திட்டமிட்டேன். சென்னையிலிருந்து கவுகாத்திக்கு நேரடி விமானப் பயணம் வாய்த்ததில் நேரம் நிறையவே மிச்சமானது.

ஜூன்23, சனிக்கிழமை காலை 5.10க்குச் சென்னை விமான நிலையத்திலிருந்து கிளம்பி, காலை 8 மணிக்கெல்லாம் கவுகாத்தி சென்றுவிட்டேன். கவுகாத்தி விவேகானந்தா கேந்திராவில் நடைபெற்ற 'அபிவ்யக்தி' நிகழ்வில், பெங்காலி, காஷ்மீரி, குஜராத்தி, பஞ்சாபி, போடோ, டோக்ரி, தெலுங்கு, உருது உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட மொழிகளைச் சேர்ந்த கவிஞர்களோடு நானும் தமிழ்க் கவிஞர்கள் சார்பில் பங்கேற்று, எனது 4 ஆங்கில மொழிபெயர்ப்பு கவிதைகளையும் (மொழியாக்கம்: டாக்டர் கே.எஸ்.சுப்ரமணியன்), தமிழ்க் கவிதை ஒன்றையும் வாசித்தேன். தீண்டாமை குறித்தும் குழந்தைகள் மனவுலகினைப் பற்றியும் பேசும் கவிதைகளுக்கு நல்ல வரவேற்பும் பாராட்டும் கிடைத்தன.

**ஒன்றே குலம்**

எங்களூரில்
கீழத்தெரு, மேலத்தெரு கிடையாது
டீக்கடைகளில்
இரட்டை கிளாஸ் இல்லை
தேரோடும் வீதியில்
செருப்பணிந்து செல்லலாம்
பொதுக்கிணற்றில்
நீரெடுக்கலாம்
எங்களூரில்

வேறு யாருமில்லை...
எங்க சாதி சனத்தைத் தவிர.

## அற்ற வீடு

உட்கார்ந்தே பேசுகிற
உயரத்தில் தொலைபேசி
குட்ட நாற்காலியில்
மீன்கள் அலையும்
கண்ணாடித் தொட்டில்
கிறுக்கல்கள் ஏதுமற்ற
வெள்ளைச் சுவர்
தரையிலேயே கிடக்கிற
விரித்த புத்தகம்,
திறந்த பேனா, பேப்பர்
பார்த்த கணத்திலேயே
உணர முடிகிறது...
குழந்தைகள் ஏதுமற்ற
வீடு இதுவென.

முதல்நாள் நடைபெற்ற மொழிபெயர்ப்புக்கான விருது வழங்கும் விழாவில், தமிழில் மொழிபெயர்ப்பிற்கான விருதினைப் பெற்ற கவிஞர் யூமா வாசுகி, மலையாளத்தில் விருதுபெற்ற திரு.கே.எஸ்.வெங்கிடாசலம் இருவரும் அடுத்த நாளும் என்னுடன் இருந்தது கூடுதல் மகிழ்ச்சியைத் தந்தது. சாகித்திய அகாதெமியின் தலைவர் எழுத்தாளர் சந்திரசேகர் கம்பார், செயலாளர் கே.சீனிவாசராவ் ஆகியோரையும் சந்தித்துப் பேச முடிந்தது. பல மொழிகளைச் சேர்ந்த கவிஞர்களோடும் கை குலுக்கிக்கொள்ளும் இனிய வாய்ப்பாகவும் இது அமைந்தது.

கரை புரண்டோடும் பிரம்மபுத்திரா ஆற்றில் படகு பயணம் செய்தது மறக்க முடியாத அனுபவம். தேவி காமாக்யா கோயில் திருவிழா என்பதால் பெருங்கூட்டமாக இருந்தது. அதனால் மலைக்கோயிலுக்குச் செல்ல முடியவில்லை.

அதிகாலை 4 மணிக்கே விடிந்துவிடும் அசாமில், எனது தமிழ்க் கவிதைகளையும் காற்றோடு கலக்கச் செய்து வந்த மனநிறைவோடு, தமிழகம் திரும்பினேன்...“ என்று கூறினார்.

தமிழ்க் கவிதை இந்தியாவெங்கிலும் மட்டுமல்லாது, உலகின் திசையெங்கும் வலம் வரும் காலம் வெகுதூரமில்லை.

■



• ஆரூர் தமிழ்நாடன்

# வண்ணம் கெடாத வானவில்!



அது ஒரு செப்டம்பர் மாதத்துக் காலை நேரம். மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகம். இனிய இளவல் திருவாரூர் ஜெயகாந்தன் பரபரப்பாக ஓடியாட, நண்பர்கள் மருதவாணன், வெற்றிப்பேரொளி, திருமதி வெற்றிப்பேரொளி, திருவாரூர் ஈ.வே.ரா. ஆகியோரோடு சுகனும் அங்கே இருந்தார். இனம்புரியாப் பதட்டமும் பரபரப்பும் என் மனதில் மெல்லிய அதிர்வை ஏற்படுத்தின. அப்போது என் கைகளை மென்மையாகப் பற்றிக்கொண்டார் சுகன். அவர் முகத்தில் பூரிப்பும் உற்சாகமும் பொங்கின.

சுகன் உள்ளிட்ட நண்பர்கள் முன்னிலையில் நானும் அமுதாவும் பதிவேட்டில் கையெழுத்திட்டோம். உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் ஊரறிய எங்களுக்குத் திருமணம் நடப்பதற்கு நான்காண்டின் முன், இப்படி எங்கள் வீடுகளுக்குத் தெரியாமல் அரங்கேறிய பதிவுத் திருமணத்திற்குச் சாட்சிக் கையெழுத்துப் போட்டவர் சுகன். அந்த நாளின் நெகிழ்வான ஈரம், இமைகளில் துளிர்க்கிறது. திருமணத்திற்கு முன்பே நாங்கள் சுகனின் அம்மாக் கையால் உணவு உண்டிருக்கிறோம். அவர் என் மகிழ்வை மட்டுமல்லாது துயரத்தையும் பகிர்ந்துகொண்டவர். எங்கள் இல்லத் துக்கமொன்றிலும் இரங்கல் கவிதை பாடியவர் அவர்.

சுகன், என் அந்தரங்க நண்பர்களில் மிகவும் அந்தரங்கமானவர். அகத்தில் மலரும் எண்ணங்களை என் விழிகளிலேயே படித்து விடக்கூடியவர். அவரற்ற வெறுமையில் அவர் நினைவுகள் கோலோச்சி நெகிழவைக்கின்றன.

‘எழுதுகோலால் எண்ணக் கண் திறப்போம்’ என்ற மந்திரச் சொல்லுக்குச் சொந்தக்காரர் சுகன். காதல் கவிதைகளிலும் செனாய் வாசித்துச் செயலிழக்க வைப்பவர். போராட்டக் கவிதைகளில் நெருப்பு எரியும்.

‘புனையினும் புல்லென்னும் நட்பு’ என்பார் வள்ளுவர். இதன் பொருள், நட்பை வெளிப்படையாகச் சொன்னால் கூட, அதன் மதிப்பு குறையலாம் என்பதாகும். ஆனால், இவ்விலக்கணம் சுகனுக்குக் கொஞ்சமும் பொருந்தாது. சுகனைப் பற்றி, எப்படிச் சொன்னாலும், எத்தனை முறை சொன்னாலும் அந்நட்பு, மேலும் மேலும் தன்னைப் பட்டைத் தீட்டிக்கொண்டே ஒளிரும்.

*

90களின் தொடக்கத்தில் தஞ்சையில் என் தலைமையில் கவியரங்கம். அங்கேதான் சுகனை முதன்முதலாகப் பார்த்தேன். அடுத்த நாளே, என் உள்ளம் தேடி, திருவாரூர் இல்லம் வந்தார். அப்போது பற்றிக்கொண்ட நெருப்பு, ஆழ்மனதில் அணையா விளக்காய் எரிந்துகொண்டே இருந்தது. காதலைப் போல் அடர்ந்த நட்பு அது.

கவியரங்கம், பட்டிமன்றம் என எத்தனையோ இலக்கிய நிகழ்வுகள்... இலக்கிய இரவுகள்.. இப்போதும் நினைவுச்சாரலாய் மனதை நனைக்கின்றன. சுகனின் அம்மா, அன்பின் பெருமழை. தஞ்சையில் நிகழ்ச்சி என்றால், அன்றைய இரவு உணவு அவர் கைகளால்தான். அன்பு குழைத்த அவரது உபசரிப்பில் மனம் நிறைந்து திணறும். சுகனின் தாத்தா திருஞானமும் பாட்டியும் அப்போது சுகனின் இதயதேசத்தைக் கட்டியாண்ட பொழுதுகளை நான் நன்கறிவேன். சுகன் ஒரு தாத்தாதாசர்.

*

இளம்பருவத்தில், அப்பருவத்திற்கான வேட்கைகள் எதுவும் இல்லாமல் கவிதை,



இலக்கியம் என்றே அன்பில் கரைந்து கொண்டிருந்தார் சுகன். தஞ்சையில் ஒரு பெரும் இலக்கியக்கூட்டம் அவரை மொய்த்தபடியே இருக்கும். தஞ்சையில் தமிழ்த்தாய் இலக்கியப் பேரவையைத் தொடங்கினார் சுகன். மாமன்னன் ராஜராஜன் பூங்காவில் திங்கள்தோறும் நடக்கும் கூட்டத்திற்கு என்னையும் அழைப்பார். விருத்தத்தில் பேசச் செய்து, அதைக் குறிப்பெடுத்து, ‘சுகனில்’ வெளியிட்டு என்னை முன்னிறுத்துவார்.

எத்தனையோ நினைவுகள் முண்டியடிக்கின்றன. எதைத் தொடுவது? எதை விடுவது?

அவர் தங்கையின் திருமணத்திற்காக மறைந்த நண்பர் பாடலாசிரியர் தஞ்சை வாசனோடு மதுரைக்குச் சென்றதும், அங்கே விடியவிடிய நிகழ்ந்த ஆனந்த அரட்டைகளும் இப்போதும் உள்ளே எதிரொலிக்கின்றன. அதே மதுரையில், வைரமுத்து சமூக இலக்கியப் பேரவை, தஞ்சை செழியன் போன்றோரால் தொடங்கப்பட்டபோது, வைரமுத்துவின் அழைப்பால் சுகனோடு சென்றேன். கூட்டம் நடந்துகொண்டிருந்தபோதே எங்களைக் கவனித்துவிட்ட வைரமுத்து, அன்போடு வரவேற்று, அப்போது துயர்கொடுத்த நண்பன் பாநலவேந்தன் மறைவு குறித்து நெகிழ்ச்சியாக விசாரித்ததும், அதைப் பார்த்த சுகனின் விழிகளில் ஈரம் கசிந்ததும் என் ஞாபகத்தை நனைக்கின்றன.

கலைஞரோடு உடன்படாதவர் சுகன். கலைஞர் கைகளால் தரப்படுகிறது என்பதற்காகவே, சுரதாவின் உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை வழங்க இருந்த 'கவிமாமணி' பட்டத்தை ஏற்கமறுத்தார். அதேசமயம், நானும் வெற்றிப்பேரொளியும் அந்த விருதை, முதல்வராக இருந்த கலைஞரிடம் பெறுகிறோம் என்பதற்காகவே எங்களோடு தருமபுரிக்கு வந்தார். இதுதான் சுகனின் பேரியல்பு.

*

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாய், சுகன் இதழை அவர் கொண்டு வந்த துணிச்சல் வேறு எவருக்கும் வராது. தனது மனைவி மக்களோடு 'சௌந்தர சுகனுக்காக'ச் சுகன் வீரியமாய் வியர்வை பெருக்கினார். ஆறு வருடங்களுக்கு முன், சிற்றிதழ் குறித்த ஆவணப்படம் தயாரித்த சுகன், எங்கள் ஆசிரியர் நக்கீரன் கோபாலின் நேர்காணல் வேண்டும் என்று சென்னை வந்தார். ஆசிரியரிடம் அறிமுகப்படுத்தியபோது '25 ஆண்டுகளுக்கும் மேலாய் ஒரு சிற்றிதழைக் கொண்டு வருவது என்பது இமாலயச் சாதனை' என்று ஆச்சரியத்தோடு சுகனை அவர் மனம்திறந்து பாராட்டினார்.

அதேபோல் கடைசியாகச் சுகன் சென்னை வந்தபோது, புத்தகக் கண்காட்சிக்குச் சென்றோம். அங்கே எங்கள் ஆசிரியர், நான் எழுதிய புத்தகங்களுக்கான காசோலையை வழங்கி, எனக்குச் சால்வை போர்த்தியதை ஆசை ஆசையாய்ப் படம் பிடித்தார். அன்று என்ன உணர்ந்தாரோ? அடம்பிடித்து என்னிடம் நேர்காணல் கண்டு, அதைச் சுகனில் வெளியிட்டார். அது நட்புக்கு அவர் பதித்த கடைசி முத்தம் என்பதை அப்போது நான் அறியேன்.

*

அடுத்த சில நாட்களில் தஞ்சையில் செழியன் ஏற்பாட்டில் கவிஞர் வைரமுத்துவின் பிறந்தநாள் விழா அரங்கேறியது. அதில், என் தலைமையில் கவியரங்கம். அதற்காகத் தஞ்சை சென்றிருந்தேன். அன்று மதியம் நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார் சுகன். உரிமையோடு வீட்டிற்கு அடம்பிடித்து அழைத்தார். என் தம்பியோடு சென்றேன். காரைச் சுகனின் துணைவியார் சகோதரி வதனா இயக்கினார். புதிதாகப் புனரமைக்கப்பட்ட வீட்டை ஆசையாய்ச் சுற்றிக்காட்டிய சுகன், மணக்க மணக்க பிரியாணியை அன்போடு பரிமாறினார். பழைய நினைவுகளைப் பரிமாறிக்கொண்டு நெகிழ்ந்தோம். அதுதான், கடைசிச் சந்திப்பு என்பதும், கடைசி கடைசியாக எனக்கு விருந்துகொடுத்து சுகன் விடைபெறுகிறார் என்பதும் அப்போது எனக்குத் தெரியாமல் போய்விட்டது.

*

அன்று அலுவலகப் பரபரப்பிற்கு நடுவிலும், ஏதனாலோ சுகனின் முகம் மனதில் சுழன்றுகொண்டே இருந்தது. அவரை 'இனிய உதயத்தில்' உடனடியாகக் கௌரவிக்கவேண்டும் என்று உள்ளுக்குள் தோன்றியது. நண்பர் கவிஞர் பூவை.சாரதியைத் தொடர்புகொண்டு, சுகன் வீட்டிற்குச் சென்று, அவரைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, ஒரு கட்டுரை எழுதும்படி கேட்டுக்கொண்டேன்.

அந்தக் கட்டுரை 'இனிய உதயத்தில்' வெளியானது. அப்போது அவர் உடல் நலத்தோடுதான் இருந்தார். அதுதான் அவரைப் பற்றிக் கடைசியாக வெளிவந்த கட்டுரை.

*

ஓர் அறுவை சிகிச்சை முடிந்து நான் வீட்டில் இருந்தேன். அதே நேரம் சுகனுக்கும் நலமில்லை. அவரும் அறுவை சிகிச்சை செய்துகொண்டு வீடு திரும்பியிருந்தார். அந்த நிலையிலும் என்னைத் தொடர்புகொண்டு, 'உங்களை நினைச்சாக் கவலையா இருக்கு தமிழ். கவனமாக உடலைப் பார்த்துக்கங்க தமிழ்' என உருகி உருகிப் பேசினார். நானும், உடல் நலன் பேணச் சொன்னேன்.

மறுநாளே, தஞ்சை மீனாட்சி மருத்துவமனை யில் சுகன், மீண்டும் சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற தகவல் வந்தது. மனம் பதைத்தேன். மருத்துவமனை மக்கள் தொடர்பு அதிகாரியைத் தொடர்புகொண்டு, சுகனைப் பற்றி எடுத்துச் சொல்லி, தீவிர முயற்சி எடுக்கும்படி




கேட்டுக்கொண்டேன். சுகனின் துணைவியாருக்கு ஆறுதல் சொல்லி, அவரிடமும் நண்பர் வெற்றியிடமும் சுகனின் உடல் நிலையை விசாரித்தபடியே இருந்தேன்.

எனினும், மீண்டுவிடுவார் என்ற நம்பிக்கை, அந்த கொடிய இரவில் பொய்த்துப்போனது. சுகனைக் காலம் கணத்தில் கொள்ளையடித்துச் சென்றுவிட்டது. கடைசியாக அவரது முகத்தைக்கூடப் பார்க்கமுடியாமல் செய்து விட்டது, அப்போதைய என் உடல்நிலை.

*

மரணம் ஒரு அழையா விருந்தாளி.

'முகந்திரிந்து நோக்கினாலும்' நம்மோடு வந்து ஒட்டிக்கொள்ளும் விருந்து அது. அது யாரை நோக்கி எப்போது வரும் என்று தெரிவதில்லை. சுகனை நோக்கி வந்துசேர்ந்தது. அது, ஒற்றை நொடியில் சுகனைச் சூறையாடிவிட்டுப் போய்விட்டது. சுகனின் சுவாசம், இதயத்தின் கவிதைத் துடிப்பு, அடர்ந்த நம்பிக்கை, இலக்கிய விருப்பம், லட்சிய வேட்கை, அன்பு கசியும் கனவு, ஆறாக் காதல், எழுதுகோலால் உலகைப் புரட்டும் ஆசை, எதிர்நாள் திட்டங்கள் என எல்லாவற்றையும் ஒரேயடியாக வாரிச் சுருட்டிகொண்டு போய்விட்டது மரணம்.

'சாதலும் புதுவது அன்றே' என அப்போது ஆறுதல் ஊட்டிக்கொள்ள முடியவில்லை.

கவிஞராக, எழுத்தாளராக, பேச்சாளராக, இதழாளராக, சிறுகதையாளராக, ஆவணப்படக் கலைஞராக, ஆசிரியராக, ஆய்வாளராகத் திகழ்ந்த சுகன், 'மானுடம் பயனுற' தன் எழுதுகோலை உயர்த்திப் பிடித்தவர். தன்னை வண்ணங்கெடாமல் வைத்திருந்த வானவில் அவர். அவரைக் கண் மறைத்திருக்கிறது காலம். தஞ்சை பிரகாஷ், தஞ்சை வாசன், மூவரையனார், புத்தகன் வரிசையில் தஞ்சை தவறவிட்ட பொக்கிசங்களில் ஒன்றாக ஆகிவிட்டார் சுகன்.

*

கடந்த 2ந் தேதி, அவரது மூன்றாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சி தஞ்சையில் அரங்கேறியது. சுகனின் குடும்பத்தினர், கண்ணீர் கசிய இந்த நிகழ்வை வழக்கம்போல் நடத்தினர். அன்று கவிக்கோவின் நினைவு நிகழ்ச்சியில், இங்கே நான், சுகன் நினைவிலும் கரைந்துகொண்டிருந்தேன். காலத்தின் ஆட்டுவிப்பில் எல்லோரும் தூர தூரங்களில் ஆடிக்கொண்டிருக்கிறோம்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை
என்னும்
சிறுமை உடைத்திவ் உலகு.

எங்கள் வலி எங்களுக்குத்தான் தெரியும். வள்ளுவரே, சற்றே பொறுத்தருள்வீர்!.

• கட்டுரையாக்கம் : கி.காவேரி

# எனக்குப் பிடித்த புத்தகம்



சென்னை கிருஷ்ணசுவாமி மகளிர் கல்லூரியின் ஆங்கிலத்துறையில் இளங்கலை மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி இர.முத்துமாரி தனக்குப் பிடித்த நூல் குறித்து நம்முடன் பகிர்ந்துகொள்கிறார்.

உன் நண்பன் யாரென்று சொல் நீ யாரென்று சொல்கிறேன் என்ற பழமொழிக்கிணங்க நாம் வாசிக்கும் ஒவ்வொரு புத்தகமும் ஒரு வகையில் நம்மை மாற்றி அமைக்கின்றது. திருக்குறள் முதல் நவீன இலக்கியங்கள் வரை நாம் நேசித்து வாசித்து மகிழும் புத்தகங்கள் நம் சிந்தனையைக் கட்டமைத்துக் கொண்டேயிருக்கின்றன.

ஒரு சிறந்த நண்பன் ஒரு புத்தகமாகத்தான் இருக்க முடியும். அவ்வாறு இந் நண்பனை ஏற்றவர்கள் புகழ் உச்சியில் அமர்ந்திருக்கிறார்கள். எகா. காரல்மார்க்ஸ், டாக்டர் அம்பேத்கர். உலகில் சாகாவரம்பெற்ற பொருள்கள் புத்தகங்களே-கதே.

இவ்வாறு சாகாவரம்பெற்ற புத்தகங்களில் நான் படித்ததில் பிடித்தது என்றால் வெ. இறையன்பு எழுதிய ‘சாகாவரம்’ என்ற நாவலாகும். இந்நாவலின்வழி, தன்னை மீண்டும் ஒரு சிறந்த படைப்பாளியாக ஆசிரியர் நிரூபித்துள்ளார். இந்நாவல் சிறந்த மொழி நடையும், இலக்கிய வளமும் கொண்டு திகழ்கிறது.

இந்நூலைப் படிக்கத்துவங்கும் முன் ஒரு இறவா வாழ்க்கை கிடைப்பின் எப்படி இருக்கும் என்பது பற்றிய சிந்தனையில் மூழ்கி வாசிக்கத் துவங்கினேன்.

நாவலைப் படிக்கப் படிக்க கீழே வைக்க முடியாமல் அடுத்து என்ன நிகழும் என்ற எதிர்பார்ப்புகள் காத்துக்கிடக்க ஒரேமூச்சில் படித்துமுடித்தேன். இந்நாவல் மரணத்தைப் பற்றிய தேடலாகும். மரணம், பயணம், சலனம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாக இது அமைந்துள்ளது.

கதையின் நாயகன் நசிகேதன் ஒரு பள்ளி ஆசிரியர். முப்பத்தைந்து வயதாகியும் திருமணமே வேண்டாம் என்று பிரம்மச்சாரியாக வாழ்ந்து வருபவர். இவரின் இனிமையான வாழ்வியல் பயணத்தில் நெருங்கிய நண்பர்கள் நான்கு பேர் ஒவ்வொருவராக அடுத்து அடுத்து மரணமடைந்தது நசிகேதனுக்கு ஒருவித பய உணர்வினை ஏற்படுத்தியது. எனவே மரணத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள தன் பயணத்தைத் துவங்கினான். நானும் பயணிக்கத் துவங்கினேன், ஒருவித எதிர்பார்ப்புடன். இறுதியில் ஒரு ஞானியைச் சந்தித்து ஓலைச் சுவடிகளின் வாயிலாக “இறவா வரத்தினை” அறிந்தான். அடைந்தான். அங்குதான் எதிர்பாராத முடிவினை நான் கண்டேன்.

நசிகேதன்போல் நிறையபேர் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். ஒரேமாதிரியானவையாக இருந்தன அங்கிருந்த சூழ்நிலைகள். அசையா காற்று, மங்கா ஒளி, சூழா இரவு, நிர்வாண ஆட்கள் என அங்கு எதுவும் மகிழ்வூட்டும் விதமாக இல்லை. மேலும் மரணம் மட்டுமே உண்மையானது என்று அந்தத் தீவு அவனுக்கு உணர்த்துவதாக நாவல் முடிவடைந்தது. வாழ்வில் பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பு என்று ஒன்று இருந்தாக வேண்டும். வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்தால் மட்டுமே நாம் பக்குவப்பட முடியும்.

இந்நூலின் வழியாக நான் அறிந்தது வாழ்வில் மரணம் ஏற்படவில்லை என்றால் அதுதான் உண்மையான நரகமாக இருக்க முடியும். எனவே வரும் துன்பத்தினைக் கண்டு துவளாமல், எதிர்த்து நின்று வெற்றி காண வேண்டும். இறப்பு(சாவு) என்பதே ஒரு வரமாகும். “ஊர்செல்லக் காட்டும் வழிபோல் வாழ்வுக்கு நேர்ப்பாதை சொல்வதே நூல்” சாமிசிதம்பரனார். வாழ்வு சிறக்க... நூலைக் கற்போம்.

# குரல்

• கவி : ராம் வசந்த்
சித்திரம் : கொ.வடிவேல்



பத்து வயதுச் சிறுவனை
ஒரு புத்தகப் பையோடு
வரைகிறீர்கள்
அல்லது கையில் ஒரு
பந்து வைத்திருப்பதாக
வரைகிறீர்கள்
பட்டம் விடுவது போலும்
நீங்கள் வரைந்திருக்கலாம்
அவன் ஏழையாய் இருப்பின்
சட்டையைக் கிழித்து விடுவீர்கள்
அல்லது தீப்பெட்டி செய்வதாகக்
காட்டுவீர்கள்
அனாதையாய் இருப்பின்
முழங்கால் மீது
தலை கவிழ்த்து விடுவீர்கள்
ஆப்பிரிக்கக் குழந்தையை
ஒரு தட்டு ஏந்தச் செய்வீர்கள்
வெள்ளையர் குழந்தை எனில்
கோட் அணிய வைப்பீர்கள்
கிருஸ்துவை இஸ்லாமை
இந்துவை சீக்கியச் சிறுவர்களை
அவரவர் அடையாளம் கொண்டும்
தெரியப்படுத்துவீர்கள்
நீங்கள் இப்போது ஒரு சிறுவனை
வரைய வேண்டும்
அவன் முதல் படத்தில்
அப்பாவியாக உதடுகளைச் சுழித்துக்கொண்டு
தெரிந்த முகங்கள் தென்படுகிறதா
எனப் பார்க்க வேண்டும்
அடுத்த படத்தில்...
உங்களுக்குக் கைகள் நடுங்கும்
தூரிகையை இறுகப் பற்றி
நீங்கள் வரைந்து முடிக்கும்போது
ஒரு குரல் உங்களைக் கேள்வி கேட்கும்
அது உங்கள் மூளையை மோதிச் சிதறடிக்கும்!
நீங்கள் பதில் சொல்வீர்களா?
சரி விடுங்கள்
எதிரிகளுக்குத் தெரியும்
நீங்கள் ஒரு இந்திய இறையாண்மையர் என்றும்
நான் ஒரு இரங்கற்பா எழுதுபவனென்றும்.

# பிராக்ஸிமா பி


• முரளி
ஓவியம் : கொ.வடிவேல்

**ஆகஸ்ட் 24, 2016**

இந்திய விஞ்ஞானிகள் அளவில்லா மகிழ்ச்சியில் ஆனந்தக் கூத்தாடினர். ஆம், நம் பூமியைப் போல் ஒரு கிரகம் உண்டு என்று அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன் அறிந்ததை இன்று அமெரிக்க விஞ்ஞானிகள் உறுதிப்படுத்திய நாள். துல்லியமான இலக்கையும் அறிந்தாகி விட்டது.

இஸ்ரோவின் இரகசிய ஆராய்ச்சியில் தூரத்தில் உள்ள கிரகங்களுக்குச் செல்லும் விண்கலம் தயாரிப்பதில் வெகுவாக முன்னேற்றம் அடைந்து கிட்டத்தட்ட தயார் நிலையில் இருப்பதில் கூடுதல் சந்தோஷம். இதுபோன்ற தூரப் பயணத்தைத் தாங்கும் திறன் ஆப்பிரிக்கா நாட்டில் உள்ள மக்களுக்கு அதிகம் உள்ளது என்பதும் அவர்கள் ஆராய்ச்சியில் அறிந்தது. சமீபத்தில் ஆப்பிரிக்கா சென்ற இந்தியப் பிரதமரால் அவர்கள் நாட்டு மக்களை இதுபோன்ற நெடுந்தூர விண்வெளிப் பயணம் மேற்கொள்ள அனுப்புவதற்கான இரகசிய ஒப்பந்தம் கையெழுத்தாகி இருந்தது.

முதல்கட்டத் தேர்வாக ஐம்பது ஆப்பிரிக்கப் பழங்குடியைச் சேர்ந்த பதினைந்து வயது உள்ள சிறுவர் சிறுமிகள் இந்தியா வந்து, பெங்களூரில் உள்ள பயிற்சி நிலையம் அடைந்தனர். இவர்களில் நால்வர் தேர்வாகி, பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டு அடுத்த ஆண்டுக்குள் இவர்களில் இருவர் விண்கலத்தில் பயணம் செய்யத் தயார் ஆவர். (இவை மிக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன, யாரிடமும் சொல்லிவிடாதீர்கள். சொன்னால் ஒரு சமுதாயக் கொந்தளிப்பு ஏற்படும் இங்கு).



## பிப்பிரவரி 2, 2017

முதல்முறையாக இந்தியப் பட்ஜெட்டை ஜனவரி மாதம் அறிவித்தபின், இந்தியாவின் மிகப் பெரிய முயற்சியான விண்வெளி வெகுதூரப் பயணத்தின் அறிவிப்பை வெளியிட பாரதப் பிரதமர் தயாரானார். அனைத்துக் கட்சித் தலைவர்களும், இந்திய ஊடகங்களும் நிரம்பிய அரங்கில் ஆப்பிரிக்கப் பழங்குடி இனத்தைச் சேர்ந்த சூலுவும், சோலோவும் நம் இந்திய விண்கலத்தில், 'பிராக்ஸிமா பி' செல்ல இருக்கும் தகவலை அறிவித்தார். அனைத்துத் தரப்பினரும் கைதட்டி வரவேற்க, மனதுள் நல்ல அவல் கிடைத்தது என சந்தோஷப்பட்டனர்.

அடுத்த சில நாட்களில் நாடு அமளிதுமளிப் பட்டது. எப்படி நம் நாட்டவரை அனுப்பாமல் வெளிநாட்டவரை அனுப்பலாம் என்ற முதல் கேள்வியில் ஆரம்பித்து, ஒவ்வொரு ஜாதி/மதத்தினரும் அவரவர் ஜாதி/மதக்காரரை அனுப்பக் கோரிக்கை எழுப்பியதுடன் இதை உடனே நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர். ஜாதி நம்பிக்கை இல்லாதவர்களும் அவர்கள் ஆட்களை அனுப்ப வேண்டும் என்று போராடத் துவங்கினர்.

முகநூலிலும், ட்விட்டரிலும் வாள்வீசி வீரியமாகச் சண்டை நடந்தது. இந்தியா இருக்கும் நிலையில் இது தேவையா என்ற வினாவும் எழுப்பப்பட்டது. யாருக்கும் ஒரு சரித்திர நிகழ்வின் முன்னோடி அது என அன்று புரிந்திருக்க வாய்ப்பில்லை.

உலக நாடுகளும் இந்தியா அவர்களை முந்திக் கொண்டதில் கடுப்பாகி அவர்கள் பங்குக்கு ஏசினர். பாகிஸ்தான் காஷ்மீரில் தரும் குடைச்சலைக் கூடுதலாக்கியது. சீனாவும் சிக்கல் கொடுத்தது.

* * *

## இதற்கிடையில்...

சூலுவும், சோலோவும் இதைப் பற்றி எதுவும் தெரியாமல், இரகசிய இடத்தில் தீவிரப் பயிற்சியில் ஈடுபட்டனர். அவர்கள் உலக சாதனை புரிய இருக்கிறார்கள் என அறிந்திருந்தார்கள். நீண்ட நாட்கள் அவர்களால் தனிமையும், குறைந்த அளவு உணவில் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் திறனும் இருந்தது. அதை மேலும் வலுப்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு விண்கலத்தில் உள்ள உணவைத் தவிர வேறு எதையும் உண்ணக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

விண்கலத்தைப் பற்றிய அடிப்படையும், தேவையான தகவலும் போதிக்கப்பட்டன. அவர்கள் ஆட்டோ ஸ்லீப்பில் இருந்துகொண்டு பயணம் செய்வார்கள். அவர்களுக்குத் தேவையான உயிர் சத்துக்கள் ஊசி மூலம் நரம்புவழி செலுத்தப்படும். குறிப்பிட்ட மாதங்களுக்கு ஒருமுறை விழித்து, ஒரு சில நாட்கள் கழித்து மீண்டும் ஆட்டோ ஸ்லீப் மோடிற்குச் செல்வர். மிக நவீன விண்கலம், ஒளியின் இருபது சதவிகித வேகத்தில் செல்லக்கூடியது தயார் நிலையில்..

* * *

## ஆகஸ்ட், 24, 2017

'பிராக்ஸிமா பி' இருப்பது உறுதி செய்யப்பட்டு ஓராண்டு நிறைவான நாள்... இஸ்ரோவின் தும்பா விண்கல ஏவுதளத்திலிருந்து விண்கலம் "ஆப்ரிக்கா" புறப்படத் தயார் நிலை.. ஆப்பிரிக்கா நாட்டினர் பயணம் செல்வதால் விண்கலத்துக்கு "ஆப்ரிக்கா" எனப் பெயர் சூட்டியது இஸ்ரோ. சூலுவும், சோலோவும் சுற்றியிருந்தவர்களுக்குக் கை ஆட்டி விட்டு விண்கலம் உள்ளே சென்றனர்... அவர் நாட்டைச் சேர்ந்த சுமார் நூறு நபர்களும், இந்தியாவின் முக்கியப் பதவி வகிப்பவர்களும், விஞ்ஞானிகளும் சூழ்ந்திருக்க, மற்ற நாட்டினரும் தொலைக்காட்சியில் பார்த்திருக்க...

9, 8, 7, 6, 5, 4, 3, 2, 1, 0 கௌண்ட் டௌன் முடிய விண்கலம் வானத்தில் வர்ண ஜாலமிட்டு 'பிராக்ஸிமா பி' நோக்கிப் பயணமிட்டது.

துல்லியக் கணிப்பால் எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் பயணம் செல்ல.. சூலுவும், சோலோவும் தாங்கள் நலமாக இருப்பதாகத் தகவல் அனுப்பினர். இரண்டு நாட்கள் கலத்தில் உள்ள எல்லா உபகரணங்களும் சரியாக இயங்குகிறதா என உறுதி செய்த பிறகு அவர்கள் ஆட்டோ ஸ்லீப் மோடுக்கு மாறினர்.

தொடர்ந்து அவர்கள் பயணம், பெங்களூர் தரை நிலையத்திலிருந்து கண்காணிக்கப்பட்டது. அனைத்தும் எதிர்பார்த்தபடி இருந்தது. எந்தச் சிக்கலும் இல்லை.

## அக்டோபர், 2, 2027.. சுமார் 10 ஆண்டுகளுக்குப் பிறகு..

இன்னும் சில நாட்களில் விண்கலம் பிராக்ஸிமா பி சென்று அடையும் நேரம் நெருங்கிவிட்டது.. இஸ்ரோவின் முக்கிய விஞ்ஞானி, தலைமை விஞ்ஞானியின் முன் தயங்கித் தயங்கி...

“ஐயா ஒரு சிறு பிரச்சினை... ஏதோ சதி நடந்திருக்கிறது..”

“என்ன..?”

“பிராக்ஸிமாவில் இறங்கினால் திரும்பிவர இயலாமல் ஏதோ மாற்றம் செய்யப்பட்டுள்ளது.”

திடுக்கிட்டவர், “இது எப்படி சாத்தியம்? நாம் எல்லாம் சரி பார்த்து அல்லவா.. அனுப்பினோம்?”

“இல்லை.. இது நாம் வெற்றி பெற்றுவிடக் கூடாது என வேண்டுமென்றே யாரோ தாமதமாகத் தவறு உண்டு பண்ண வைத்துள்ளனர் (Delayed Error Inducer). நான் எல்லாம் சரியாக இயங்குகிறதா என்று சரிபார்க்கும்போது தெரிய வந்தது.”

பதட்டமான தலைமை விஞ்ஞானி உயர்மட்டக் குழுவைக் கூட்டி ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். “நாம் வேறு நாட்டுப் பிரஜையை நம் கலத்தில் அனுப்பியுள்ளோம். அவர்கள் பத்திரமாகத் திரும்ப வேண்டியது நம் கடமை. ஆதலால் அவர்களுக்குத் தகவல் தெரிவித்து விண்கலத்தைப் பூமிக்குத் திருப்பக் கட்டளை பிறப்பியுங்கள். நம் முயற்சி தோல்வி அடைந்தாலும் பரவாயில்லை. அவர்கள் உயிர் வாழ்வதுதான் முக்கியம்” என்றார் நிலையத்தின் தலைவர் திரு. பிரம்மா.

சூலுவுக்கும் சோலோவுக்கும் இதில் விருப்பம் இல்லையென்றாலும் இதை மீற முடியாததால், சென்ற வேலை நிறைவேறாமல் திரும்புவதில் மிக வருத்தம் கொண்டனர்.

அக்டோபர் 15, 2027, விண்கலம் பூமி நோக்கிப் பயணம் தொடங்கியது..

* * *

## அக்டோபர் 15, 2027 முதல் – டிசம்பர் 31, 2036 வரை (9 ஆண்டுகளுக்கு மேல்)

இந்திய வல்லரசின் அசுர முன்னேற்றத்தைப் பொறுக்க முடியாத சில நாடுகளாலும், மேலும் பல உள்நாட்டு, வெளிநாடுகளில் ஏற்பட்ட புகைச்சல்களாலும், நாடுகளுக்கிடையே சில சண்டைகள் உருவாகிப் பெரிய போராக மாறிக் கொண்டிருந்தது. 2035ஆம் ஆண்டு அவை உச்சகட்டத்தை அடைந்தன. ஒருவித அதி நவீனப் போர் கருவியால் உலகில் உள்ள அனைத்து மனிதர்களும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட அனைத்தும் மர்மமான முறையில் அழிக்கப் பட்டது. டிசம்பர் 31 அன்று பூமி மனிதனும் மனிதச் சுவடும் அற்றதாகிவிட்டது.

விண்வெளியில் ஆட்டோ ஸ்லீப்பில் இருந்து கண்விழித்தபோது ஜனவரி 15, 2037ல் சூலுவுக்கும் சோலோவுக்கும் ஒரு பெரிய ஜோதி பூமியில் தோன்றி மறைவது தெரிந்தது.

* * *

## ஆகஸ்ட் 24, 2037

சரியாக ‘பிராக்ஸிமா பி’ இருப்பது உறுதி செய்து இருபத்தியோரு ஆண்டுகள் முடிவடைந்த நாள். சூலுவும், சோலோவும் இருந்த விண்கலம் ஆப்பிரிக்கக் காட்டின் இடையே ஒரு ஏரியில் வந்திறங்கியது. சுற்றிலும் காடு, சில விலங்குகள், மனித நடமாட்டமே இல்லை. விண்கலப் பயண உடைகளைக் களைந்தவுடன், அவர்கள் மிகக் குறைந்த அளவு ஆடையே அணிந்திருந்தனர்.

அவர்கள் இருவரும் காட்டைச் சுற்றிப் பார்க்க, சோலோவுக்குப் பசித்தது.

அங்கே கண்ட ஒரு மரத்தில் உள்ள கனியைக் காண்பித்துப் பறித்துத் தரக் கேட்க, சூலு “நாம் விண்கலத்தில் உள்ள உணவுதான் உண்ண வேண்டும். வேறு எதுவும் உண்ணக் கூடாது.. இது நம்மை அனுப்பியவரின் கட்டளை’’ என்றான்.

“இப்பொழுது நாம் விண்கலம் உள்ளே செல்ல இயலாது. எனக்கு மிகவும் பசிக்கிறது, பறித்துத் தா...” என்று சோலோ அடம் பிடித்தாள்.


சூலுவும் வேறு வழியில்லாமல் ஒரு பழத்தைப் பறித்துக் கொடுத்து, தானும் ஒரு ஆப்பிள் பழம் எடுத்துக் கடித்தான்.

• மானசீகன்
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# வசந்தாக்கா

வசந்தாக்கா கெட்ட வார்த்தை பேசுவது அவ்வளவு அழகாக இருக்கும். கெட்ட வார்த்தையை அவ்வளவு ஸ்டைலாக யாரும் பேசி நான் கேட்டதே இல்லை. மேல்தட்டுப் பெண்கள் உதடுகளை ஒட்டகத்தைப் போல் குவித்துக் கொண்டு ஆங்கில வார்த்தைகளில் திட்டிக் கொள்வார்கள். அப்போது வெளிப்படும் அவர்கள் உடல்மொழியின் விகாரம் அவ்வளவு அருவருப்பாய் இருக்கும். வசந்தாக்கா சிரித்துக் கொண்டே ...மகனே என்று சொல்லும். தூங்கி எழும்போதும் பூஜைக்குக் கிளம்புவதைப் போன்ற பாந்தமான முகம் அக்காவுக்கு. இத்தனைக்கும் அக்கா படு ஸ்டைல். சேலை கட்டி யிருப்பதே அவ்வளவு அழகாக இருக்கும். சமயங்களில் மிடி கூட போடும்.

அக்காவின் கணவர் குமரேசன் மாமா நல்ல மனிதர். பெண் பார்த்துவிட்டு அக்கா போட்ட எல்லாக் கண்டிஷனுக்கும் ஒத்துக் கொண்டவர். அக்கா தனியாகப் பேச வேண்டும் என்று சொல்லி யிருக்கிறது. மாமா ஆசையோடு மொட்டை மாடிக்குப் போயிருக்கிறார். 'குமரேசா! நீ அப்பாவியா இருக்க. நா உனக்கு சரிப்பட்டு வர மாட்டேன். நீ வேற ஏதாவது ஒரு குத்துவிளக்குக்குத் தாலி கட்டு'ன்னுருக்கு. மாமா ஏன்னாராம். 'உன்னைப் பார்த்தா அம்பி மாதிரியே இருக்கு. உன்ன மாதிரி ஆள விக்ரமன் படத்துல நடிக்க வச்சு ரசிக்கலாம். கூடவெல்லாம் படுத்துப் புள்ளை பெற முடியாது'. அப்போதுதான் மாமா அதிர்ச்சியோடு பார்த்திருக்கிறார். 'இதுக்கே பயந்தா எப்டி? நான் நிறைய கெட்ட வார்த்தை பேசுவேன்', என்று ஏழெட்டு சாம்பிள்ஸை எடுத்து



விட்டிருக்கிறது. மாமா நெஞ்சைக் கையில் பிடித்தபடி கீழிறங்கியிருக்கிறார். 'கொஞ்சம் யோசிக்கனும்'னு சொல்லிட்டு அவுக அப்பா அம்மாவோட விசுவிசுன்னு போயிட்டாராம். அக்கா வீட்டில் யாருக்கும் நம்பிக்கை இல்லை. இது பத்தோ, பதினொன்னோ.

ஒரு வாரம் கழித்து மாமா சம்மதம் சொல்லியிருக்கிறார். 'அது பேசறப்ப எனக்கு பயமாதான் இருந்தது. ஆனா கண்ணப் பாத்தேன். அதுல அவ்வளவு உண்மை தெரிஞ்சது. இது பேசற வார்த்தையோட எந்தத் துளியும் அந்தக் கண்ணுல இல்ல. நான் வேறடா! இந்த உடம்பப் பூமிக்குச் சுத்திக் காட்ட வந்திருக்கேன்னு என்கிட்ட சொன்ன மாதிரி இருந்தது'. இந்த பதிலிலேயே அக்கா விழுந்துருச்சு. 'முருகேசன் மனசு வச்சா எல்லாப் பொம்பளையையும் பேசியே படுக்க போட்ருவான். ஆனா செய்ய மாட்டான். அதான் முருகேசன் லவ் யூ மாமோவ்' என்று அக்கா அடிக்கடி சொல்லும்.

மாமா சென்னையில் உள்ள ஒரு பெரிய பள்ளியில் முதல்வராக இருந்தவர். நல்ல சம்பளம். அக்காவுக்காகவே வேலையை விட்டுட்டார். அக்காவுக்கு இங்கே நர்ஸ் வேலை. அதற்குப் பிறகு இப்பவரை மாமாவுக்கு நல்ல வேலை இல்லை. எந்த வேலைக்குப் போனாலும் ஒரு மாசத்துல அக்கா நிப்பாட்டி விடும். அக்காவுக்குத் தோதா அந்த வேலை இல்லன்னா அவ்வளவுதான். 'குமரேசா போக வேணாம்'னுரும். மாமா மறுபேச்சு பேச மாட்டார். நான் ஒரு தடவை கேட்டேன் 'அது ஏன்க்கா பெரும்பாலான நர்ஸ் புருஷனுக சும்மாவே இருக்காங்க?' 'பெரிய ஆராய்ச்சி மணி' என்று அதற்கும் ஒரு கெட்ட சைகை செய்துவிட்டுச் சிரித்துக்கொண்டே போய்விட்டது.

சொத்து பிரித்ததில் மாமாவுக்கு உள்ள பங்கு வாடகையாக வருகிறது. அக்கா சம்பளத்தை வாங்கி மாமா கைல கொடுத்துட்டுச் செலவுக்கு வாங்கிக்கும். 'அவ்வளவு பதிபக்தியா?' 'ஒரு ......மில்ல. என்கிட்ட இருந்தா சாமிகிட்ட இருக்கிற மாதிரி. எவன் கேட்டாலும் தந்துருவேன். குமரேசன்கிட்ட இருக்கிறது பேங்க்ல இருக்கிற மாதிரி. எம்புள்ளைகளுக்காக இந்த ஏற்பாடு'.

அக்கா சொல்வது நிசம்தான். ஆஸ்பத்திரியில் பார்த்த யாரோ ஒருத்திக்காக, புள்ளயோட ஸ்கூல் ஃபீஸ தந்திட்டு ஒரு வாரம் 'ஸாரி குமரேசா ஸாரி குமரேசா'ன்னு மாமாவைக் கொஞ்சிட்டு இருந்தது. அக்கா செய்யும் பல விஷயங்கள் மாமாவுக்குப் பிடிக்காது. ஆனால் ஒன்றுமே சொல்ல மாட்டார். நைட்டிக்கு சால் போடாமல் வெளியே வந்து காய்கறி வாங்கும். பக்கத்து வீட்டுக்காரன் புல்லட்டை ஓட்டிப் பார்த்துக் காலில் அடிபட்டு வரும். நீச்சலே தெரியாமல் ஆற்றில் இறங்கிவிடும். அசால்ட்டாப் பாம்பு புடிக்கப் போகும். டீக்கடைக்குப் போய்க் கால் மேல் கால் போட்டு டீ குடித்துவிட்டு வரும்.

ஒருதடவை எவனோ கேலி பேச, வேண்டுமென்றே சிகரெட்டும் வாங்கியிருக்கிறது. 'பஞ்சு வச்ச சிகரெட்டாக் கொடு'. வீட்டுக்கு வந்து 'ஆம்பளதான் சிகரெட் அடிக்கனுமாமே! இந்தா அடி. நீ ஆம்பளதானே' மாமா மீது வீசி எறிந்தது. ஏதோ ஒரு நியூ இயரில் எல்லோரும் பார்க்க மொட்டை மாடியில் பீர் அடித்துவிட்டு டான்ஸ் ஆடியது.

எதிர் வீட்டுக்குக் குடி வந்த சதீஷ் பெரிய பொறுக்கி. அவன் பெண்களுக்குக் கண்கள் கூட அவர்கள் மார்பில் இருப்பதாக நம்புகிறவன். மாமா பிள்ளைகளை விட்டுட்டு வர லேட்டாகி விட்டதென்று அவன் பின்னால் உட்கார்ந்து அக்கா பலதடவை ஆஃபிஸ் போனது. நான் சொல்லியும் கூட அதைப்பற்றி மாமா எதுவும் கேட்கவில்லை. ஒருநாள் மூஞ்சி முகரையெல்லாம் பேந்து அவன் வீடு திரும்பினான். அக்காவை விடப் போனவன்தான். அக்காதான் பைக் ஓட்டிக்கொண்டிருக்கும்போதே டக்கென்று குதித்து அவனைக் கீழே தள்ளி விட்டதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அக்கா அதைப் பற்றி யாரிடமும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.

அக்கா அமைதியாக இருப்பது சாமி வருவதற்கு அடுத்த சில நாட்களில் மட்டும்தான். அக்காவுக்கு அடிக்கடி சாமி வரும். இத்தனைக்கும் கோவிலுக்குப் போகாது. 'ஏன்க்கா?'ன்னா 'அவனவன் அவன் பொண்டாட்டியோட இருக்கான். நாம போயி எதுக்கு அவங்கள டிஸ்டர்ப் பண்ண?சரி ஒங்க சாமி ஃபிரீதானே

பாக்க வரலாம்னு பாத்தாக்க.. மசூதிக்கு வெளிய கம்பத் தூக்கிக்கிட்டு ஒங்க ஆலிம்சாமாருக நிக்கிறானுக' என்று டபுள் மீனிங்கில் பேசும். புள்ளையார் கோவிலுக்கு மட்டும் போயிட்டு வரும். ஆனா கும்புடாது. 'தொந்தியக் குறைச்சாதான் இந்தாளுக்குக் கல்யாணம் ஆகும்'ன்னு ஒருதடவை சொன்ன ஞாபகம். 'சாமி கும்புட்டதே இல்லையாக்கா?' 'கல்யாணத் தன்னிக்குக் கும்புட்டண்டா ராமமரை! குமரேசன் என்ன விட்டுட்டு ஓடிரக் கூடாதுன்னு வேண்டிக்கிட்டேன். பரவாயில்லடா.. இது வரைக்கும் அந்தாளு எங்கூடத்தான் இருக்கான். அப்பன்னா ராமர் பவர்ஃபுல் சாமிதானே. ராமருக்காக இன்னொரு மசூதியக் கூட இடிக்கலாம்'.

அக்கா சாமி வந்துவிட்டால் அதிகம் பேசாது. ஆனால் வீட்டை விட்டு வெளியே வந்துவிடும். வந்த அடுத்த நிமிஷம் சேலையை அவுத்துத் தூக்கி எறிஞ்சிரும். வேற எதுவுமே பேசாது. மாமாவக் கண்டபடி திட்டும். ஆனா ஒரு கெட்ட வார்த்தை வராது. யாராவது கிட்டக்கப் போனா 'நீ போ ராசா! உன்ன இல்ல'ங்கும். பெண்ணாக இருந்தால் 'ஆமாடி! நா கெட்டவதான். குமரேசன்தேன் யோக்கியன் போதுமா?'. காட்சிகள் மாறினாலும் இந்த டயலாக் மட்டும் மாறாது. சில நேரம் நாய் மாதிரி முழங்காலை மடிச்சு மாமாவைப் பாத்து நாக்கைத் தொங்கப்போட்டு உக்காந்திருக்கும். சில நேரம் ஊள போட்டு ஒன்னு அழுகும். போறப்ப மட்டும் 'ஆத்தா வர்றண்டி வசந்தா! குமரேசன நம்பாதன்னு சொல்லிட்டுக் கிளம்பும். அதுதான் புறப்பாட்டுக்கான சிக்னல். கொஞ்ச நேரம் குத்த வச்சு உக்காந்துட்டு ஓடிப் போயி சேலைய எடுத்து மேல போட்டுக்கிட்டு உள்ள ஓடிரும். உள்ள போன பிறகு ஒரே அழுகைதான்.

ரெண்டு நாளைக்காவது யார் மூஞ்சியயும் பாக்காது. மூணாவது நாள் வேதாளம் முருங்கை மரம் ஏறிடும். கிளம்பும்போதே ஆரம்பித்துவிடும். 'குமரேசா! சந்தையில போயி முருங்கக்கா வாங்கிட்டு வா! இன்னிக்கு நைட் டூட்டி இல்லை. ஒரு கை பாத்துருவோம்.' காலில் செருப்பை மாட்டிக்கொண்டே கத்திப் பேசும். காம்பவுண்ட் வீட்டின் பிற குடித்தனங்கள் ஒரு நிமிஷம் அக்காவுக்காகக் கையை நொடித்துவிட்டுப் பிறகு உப்புபுளிக்காகக் கவலைப்பட ஆரம்பிக்கும்.

அக்காவுக்கு எப்போதிருந்து சாமி வருகிற தென்று மாமாவிடம் கேட்டிருக்கிறேன். அக்கா அதைப் பற்றி யாரிடமும் பேச விரும்பாது. மாமாவிடம் கூட. அழும்தான். ஆனால் மாமா எதுவும் சொல்லக்கூடாது. சொல்ல மாட்டார். 'ரோகினி பிறந்தப்பறம்தான். கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு தடவை வந்ததா மாமா சொன்னாங்க'ன்னு குமரேசன் மாமா சொன்னார். அக்கா அப்படி நடந்துகொள்ளும்போதும், பிறரிடம் மாமா அதைப் பற்றிப் பேசும்போதும் அப்படி அழுவார். ஆனால் அக்கா முன்னாடி ஒரு துளி தண்ணீ வராது. சிரித்துக்கொண்டே சமாதானப்படுத்துவார்.

அக்காவுக்கு டைரி எழுதும் வழக்கம் உண்டு. அக்கா நைட் டூட்டி போயிருந்தபோது மாமா கூடத் துணைக்குப் படுத்திருந்தேன். பிள்ளைகள் பாட்டி வீடு போயிருந்தார்கள். டயரி வெளியில் கிடந்தது. 'என்ன மாமா ? அக்கா டைரி வெளில கிடக்கு?' 'எழுதிட்டு அப்படியே போட்ருவா' அலமாரியில் வைத்தார். 'நீங்க படிக்க மாட்டீங்களா?' 'மாட்டேன்' தலையசைத்தார். ஆனால் அதற்கடுத்த எந்த வழமையான டயலாக்கும் அடிக்கவில்லை. 'நீங்க கிரேட் மேன் மாமா!' மெல்லச் சிரித்தார். 'தூங்குடா' என்னைச் சொல்லிவிட்டுத் தூங்கிப்போனார். என்னால் தான் தூங்க முடியவில்லை. எனக்குள் இருந்த நவீன மனிதனும், ஆதிகால மனிதனும் சண்டை போட்டுக் கொண்டதில் ஆதிகால மனிதனே வெற்றி பெற்றான்.

அந்த டயரி சுவாரஸ்யமில்லாமல்தான் இருந்தது. எல்லாமே எனக்குத் தெரிந்த அக்காவின் திருவிளையாடல்கள். அக்கா ஒரு டாக்டரின் பின்புறத்தை அப்படி வர்ணித்திருந்தது. வாயைப் பொத்திக்கொண்டு சிரித்தேன். டயரி முடிந்திருந்தது. ஏதோ ஒரு பொறி தட்ட மீண்டும் அலமாரிக்குப் போனேன். ரோகினியின் வயதைக் கணக்குப் போட்டு அவள் பிறந்த வருடத்து டயரியை எடுத்தேன். இதே கதைதான். ஹவுஸ் ஓனர் பற்றி அக்கா எழுதியிருந்தார். அக்காவின் குசும்பே குசும்பு.

நவம்பர் 14ஆம் தேதி இப்படி எழுதியிருந்தது. 'இன்று அதைச் சொல்லப் போகிறேன். ஆமாம் சொல்லியாக வேண்டும். குமரேசனிடம் போய் எப்படி மறைப்பது ச்சீ! ச்சீ' என்று முடிந்திருந்தது. மீண்டும் அதே பக்கத்தில் 'சொல்லி விட்டேன். பயந்த மாதிரி எதுவும் இல்லை. லவ் யூ குமரேசா!' இரண்டும் ஒரே நாளின் வெவ்வேறு தருணங்களில் எழுதப்பட்டிருக்கவேண்டும். டிசம்பர் 6 ல் இப்படி எழுதப்பட்டிருந்தது. 'முதல் முறையாக என் மனதும் உடைந்திருக்கிறது. குமரேசன் கண்களில் எத்தனை கெட்ட வார்த்தைகள்! அடக் கடவுளே! அழுகை வருகிறது...முதல்முறையாக'. அதற்குப் பிறகு டிசம்பர் 31 வரை எதுவுமே எழுதவில்லை. ஏதோ ஒரு பொறி கிடைத்துவிட்ட உணர்வில் பழைய டயரிகளைப் புரட்டிப் பார்த்தேன். எவ்வளவு தேடியும் எதுவுமே சிக்கவில்லை. அலுத்துச் சலித்தபோது மணி பார்த்தேன். மூணாகியிருந்தது. மாமா நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தார்.

அக்கா ஒரு டிரெயினிங்கிற்காக நாற்பது நாட்கள் பெங்களூர் போயிருக்கும்போது அக்காவின் தங்கை லட்சுமி இங்கே வந்தது. லட்சுமி பிளஸ்டூதான். கல்யாணம் முடிந்து ஒரே வருடத்தில் விதவையாகி விட்டது. வீட்டுக்காரர் தோட்டத்தில் கரண்ட் அடித்துப் போய்ச் சேர்ந்துவிட்டார். இயன்றவரை மறுமணத்திற்காக வரன் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஒன்றும் சரியாய் அமையவில்லை. அக்கா, பிள்ளைகளைப் பாத்துக்க தங்கச்சிய வரச் சொன்னது. அவுங்க அம்மா ஒத்துக்கொள்ளவேயில்லை. தானே வருவதாகச் சொன்னது. அக்கா சம்மதிக்கவில்லை. 'உன்னய குமரேசனுக்குப் புடிக்காது. நீ வர வேணாம்மா!'.

அக்காவின் அம்மா சுத்தமாகப் பிடிக்காமல் ஆயிரம் அறிவுரைகளுடன் மகளை அனுப்பி வைத்தாள். விதை எப்போது விழுந்ததென்று தெரியாது.

ஆனால் அவள் எதை நினைத்துப் பயந்தாளோ 'அது' சரியாக முப்பத்தெட்டாவது நாளில் நடந்துவிட்டது. ஜமீலாக்காதான் வேவு பார்த்துச் சரியாகக் கண்டுபிடித்து, கதவை மூடி வைத்துக் கையும்களவுமாகப் பிடித்து வைத்தபடி எல்லோரையும் அழைத்து வந்தது. கூட்டமாகத் தட்டியவுடன் மாமா தலையைக் குனிந்து கொண்டு வெளியே போய்விட்டார். அந்தப் பெண்ணோ யாரிடமும் எதையும் சொல்லாமல் பாத்ரூம் போய்விட்டது.


இரண்டு நாட்கள் எல்லோரும் சாடை பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப் பெண் கதவையே திறக்கவில்லை. புள்ளைகளையும் வெளிய விடல. மாமா எங்கேயோ கோவில், குளம்னு போய்விட்டார். அக்கா வந்தவுடன் ஜமீலாக்கா போலியாக அழுதபடி எல்லாத்தையும் ஒப்பித்தது. அக்கா ஒரே ஒரு கேள்விதான் கேட்டாள். 'குமரேசன் உன்னயவா.......? மூடிட்டுப் போடி!' காம்பவுண்டே மூர்ச்சையாகி நின்று விட்டது. அக்கா எதுவுமே நடக்காதது போல் உள்ளே போனாள்.. என்னையும் கூட்டிக் கொண்டே. அந்தப் பெண் நெடுஞ்சாண் கிடையாக அழுதுகொண்டே அக்காவின் காலில் விழுந்தது. 'ஏய் லூசு! எந்திரிடி. இந்த சேல உனக்குப் புடிச்சிருக்கா?' ரொம்பக் கேசுவலாகப் பேசத் தொடங்கியது.

அன்று மாலையே தங்கச்சியோடு திண்டுக்கல் போய்விட்டது. அதற்கடுத்த ரெண்டே வாரத்தில் தங்கச்சிக்குக் கல்யாணம் முடித்துவிட்டுதான் ஊருக்கு வந்தது. அக்கா வந்து நாலைந்து நாளைக்குப் பெறகு மாமா காவி வேட்டியோடும், பலநாள் தாடியோடும் வந்து சேர்ந்தார். ஏதோ சொல்லப் போனவரை அக்கா கையமர்த்தியது. 'ஒன்னுஞ் சொல்ல வேணாம் குமரேசா. முதல்ல தாடிய சிரைச்சிட்டுக் கடையில போயி முருங்கக்கா வாங்கிட்டு வா! நைட்டு முடி குத்தும்' வேண்டுமென்றே இரைந்து கத்தியது.

காம்பவுண்ட் தன் இயல்புபடி கூடிப் பேசித் தலையில் அடித்துக்கொண்டது. அதுக்குப் பிறகு அக்காவும்,மாமாவும் முருங்கக்காயின் துணையோடு அடிக்கடி கொஞ்சிக் குலாவிக் கொண்டார்கள். அக்கா எப்போதும் போல் அவளும், கெட்ட வார்த்தைகளுமாய் வளைய வந்தாள். அந்த பெங்களூரில் என்ன மாயம் மந்திரம் நடந்ததோ?அங்கு போய் வந்ததிலிருந்து அக்காவுக்குச் சாமி வருவதே இல்லை.

■

• முகம்மது பாட்சா



# பாஷோவின் பழைய குளம்

பத்தாயிரம் சண்டைகளின் பதாகைகள்
விதி பற்றியே பேசுகின்றன
வான், நீர், நிலங்களின் நிறம் சிகப்பு.

ஓ சமாதான நேரங்களே
போரோய்ந்து காத்திருக்கிறோம்
கல்லறைகள் கனக்கின்றன.

– சாமுராய் கவிதைகள்

ஹைக்கூ என்றாலே நாம் பாஷோவிடமிருந்து மட்டுமே தொடங்கிவிடுகிறோம். இதன் வேர்களாக இருந்த சாமுராய்களைப் பற்றித் தெரிந்துகொள்வதேயில்லை. பாஷோவே கூட சாமுராய் இனத்தவர்தான். சங்கத்தமிழ்க் காலத்தில் போருக்காகப் பாடப்பட்ட போர் கவிதைகளைப் போல்தான், சாமுராய்களிடமும் போர்க் கவிதைகள் உற்சாகத்தையளித்தன. என்னவொரு வித்தியாசமென்றால், இங்கு வீரர்களுக்காகப் புலவர்கள் பாடினார்கள் அங்கு வீரர்களே பாடினார்கள்.

தொழில்மயமாக்குதலுக்கு முன்பு இருந்த ஜப்பானியப் படைத்துறையில் இருந்துவந்த, ஒரு வீர இனத்திற்கான பட்டம்தான் சாமூராய் என்பதாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து, பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை சாமூராய்கள், பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டங் களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். புஷிடோ (BUSHIDO) என்று அறியப்படும் இந்தச் சட்டம், சாமூராய் என்பவர்கள் எப்படியெல்லாம் வாழவேண்டும், அவர்களுடைய ஒழுக்க நெறிமுறைகள் எப்படிப்பட்டவை என்பதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகின்றன.

ஆரம்பக்காலத்திலிருந்து புத்த மதக்கொள்கை மற்றும் ஜென் கொள்கைகளை மட்டுமே பின்பற்றி வந்த சாமூராய்கள், அதேசமயம் மிகக்குறைவாகக் கன்பூஷியஸ் மற்றும் ஷின்ட்டோவின் கோட்பாடுகளையும் பின்பற்றத் தொடங்கினார்கள்.

சாமூராய்கள் கலைநுட்பங்களின் இரசனையாளர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் ஆயுதங்களும், முகக் கவசங்களும் அவர்களாலேயே வடிவமைக்கப்பட்டிருந்தன. அவர்களில் ஒரு சிலர், சிறந்த ஓவியர்களாகவும் இருந்தது வியப்பை அளிக்கிறது. சண்டையின் போது எதிரிகளின் பலவீனத்தைத்தான் முதலில் படிக்க வேண்டும் என்பதே அவர்களின் முக்கியக் கோட்பாடாகவிருந்தது.

சாமூராய்களைப் பற்றிய கதைகளைப் போலவே, அவர்களுடைய ஆயுதங்களைப் பற்றிய கதைகளும் இங்கு அதிகம். புஷிடோவின் வழிகாட்டுதலில், சாமூராய்களின் ஆத்மாவானது அவர்கள் பயன்படுத்தும் 'கடனா' என்ற முக்கியமான வாளில் இருப்பதாகவே சொல்லப்படுகிறது. அதேபோல் சாமூராய்களும், அந்த வாளுக்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்களை வழிப்படுத்துவதின் ஒரு முக்கியப் பங்கு அந்த வாளிற்கு இருப்பதாக அவர்கள் பெரிதும் நம்பினார்கள்.

ஹியான் காலத்தில்தான் (794-1185) சாமூராய்களுக்கான தேவை மிக அதிகமாக விருந்தது. நிலச்சுவான்தார்களும், தனவந்தர்களும் தங்களின் தேவைகளுக்காக, இவர்களை வேலைக்கு அமர்த்திக் கொண்டார்கள்.

நாளடைவில் இவர்களின் பணி, நாட்டின் பாதுகாப்பிற்கும், இராணுவத் தேவைக்குமாக விரிந்தது. கொலைக்கான ஆயுதங்கள் பொதுமக்களிடம் தடை செய்யப்பட்டிருந்த போதும், இவர்களுக்கு மட்டும் அவை அனுமதிக்கப்பட்டன. இவர்கள் கொடியவர் களைக் கொலை செய்வதற்கு யாருடைய அனுமதியையும் பெறத் தேவையில்லை. மன்னர்களின், மிக முக்கியப் பாதுகாவலர் களாகவும் இருந்தது இவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

போரில் தோல்விகளைச் சந்திப்பதென்பது, இவர்களுக்கு அனுமதிக்கப்படாத சட்டமாகும். அப்படியொரு சூழல் உருவாகும்பட்சத்தில் , அவர்களுக்கான ஹராக்கிரி (harakiri) மற்றும் செப்புக்கு (seppuku ) என்ற சட்டங்களின்படி ஆண்களாக இருந்தால், அவர்கள் தங்களின் வாளால் வயிற்றை இடமிருந்து வலமாகக் கிழித்துக்கொண்டும், பெண்களாக இருந்தால் வாய் வழியே வாளைச் சொருகிக்கொண்டும் மரணித்துவிட வேண்டும்.

இவர்களின் பயிற்சிகளும் மிகக் கடுமையாகவே இருந்தன. மனதை நிலைப்படுத்த, இவர்களுக்குத் த்யானம் மட்டுமே மிக முக்கியமான ஒன்றாகவிருந்தது. த்யானத்தின் ஒழுக்கங்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. இவர்களைப் பொறுத்தவரை த்யானம் என்பது உடலை வருத்திக் கொள்வதல்ல... இரசிப்பது.

ஆரம்பக்காலங்களில், இவர்கள் வேறு எந்த வேலைகளுக்கும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதனால், சமாதானக் காலங்களில் அவர்கள், தங்களின் வீரப் பிரதாபங்களைப் போர்க் கவிதைகளாகப் பாடத் தொடங்கினார்கள். அதுவே அவர்களின் பொழுதுபோக்காகவும் அமைந்தது. பெரும்பாலும் அவர்களின் வாழ்வியலைப் பற்றிப் பேசுவதாகவே அவர்களின் கவிதைகள் முழுவதும் அமைந்தன. கல்லறை களைப் பற்றியும், காதலைப் பற்றியும் அவர்களின் கவிதைகள் அதிகம் பேசியதைக் காண முடிகிறது. இயற்கையை அதிகம் நேசித்தார்கள்.



ஜப்பானியர்களின் கவிதை வளர்ச்சியும், சாமூராய்களின் தொடக்கக் காலமும் ஏறக்குறைய ஏழாம் நூற்றாண்டென்றே சொல்லப்படுகிறது.

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொகுக்கப்பட்ட 'மான்யோஷு' Man'yoshu (பத்தாயிரம் இலைகளின் சேகரிப்பு) என்கிற கவிதைத் தொகுப்பே ஜப்பானியர்களின் மிகப்பெரிய முதல் கவிதைத் தொகுப்பாகும். இந்தத் தொகுப்பு, இருபது வால்யூம்களைக் கொண்டதாக அமைந்தது. இதனைத் தொகுத்தவர்களும் சாமூராய் இனத்தவர்கள்தான் என்றாலும் இதை எழுதிய எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புகள், நமக்குச் சரிவரக் கிடைக்கவில்லை. இதை எழுதியவர்களாக, நாடோடிகள், குடும்பப் பெண்கள், சாமூராய்கள், விவசாயிகள் மற்றும் புலவர்களென்று பின்னர் வந்த வரலாற்று ஆசிரியர்களின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகுப்பின் கவிதைகள், சிற்றின் பங்களைப் பற்றியும் மிக நுண்மையாகப் பேசுவது ஆச்சரியமளிக்கிறது. இந்தத் தொகுப்பு மூன்று உள்ளடக்கங்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

1. பங்கா (BANKA): நேசிப்பிற்குரிய மன்னர்கள் மீது பாடப்படுவது

2. சோமன் (SOMON): காதல் சிற்றின்பங்களைப் பற்றிப் பாடுவது

3. சோக்கா (ZOKA): இயற்கை, வாழ்வியல், வேட்டை இவற்றைப் பற்றியெல்லாம் பேசுபவை. இப்படிப்பட்ட கவிதைகள் கற்பனைகளை விட உள்ளுணர்வுகளைப் பற்றி அதிகம் பேசுபவையாக அமைந்தன.

**'உன்னை வெறுத்தால்**
**யார்தான் இங்கு அழகு**
**நானுன்னை மிகவும் நேசிக்கிறேன்**
**நீயென்ன வேறொருவன் இணையா?'**

**- மான்யோஷு**

'அவன் யாரென்று காணவேண்டாம்;
அவன் எனக்களித்த புன்னகை
கரடுமுரடான மலைகளைக் கடந்த
மேகம் போன்றது'

**- மான்யோஷு**

'தீண்டக்கூடாத புனித மரத்தை
ஆண்கள் தொடலாமென்றால்
நான் தொட்டாலென்ன ?'

**- மான்யோஷு**

'செர்ரி மலர்கள்
பனியால் மூடப்பட்டிருக்கின்றன
நானும் கூட;
நானுன்னைப் பார்க்க முயல்கிறேன்
அஃது என் கைகளில் உருகுகிறது'

**- மான்யோஷு**

'மலைத் தடைகளைக் கடந்த உடல்
உண்மையில் இங்குதான் இருக்கிறது
இதயம் மட்டும்
என் இணையாளினருகில்'

**- மான்யோஷு**

ஆரம்பத்தில், ஜப்பானியர்களுக்கான கவிதை புலமையைச் சீனர்கள்தான், அங்குக் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள் என்பதை அவர்களின் வரலாற்றுக் குறிப்புகளே நமக்குச் சொல்கின்றன. ஜப்பானிலிருந்தும் புலமை பெறுவதற்காகவே கவிஞர்கள், சீனா சென்று கல்வி கற்றதற்கான குறிப்புகளையும் நாம் காணமுடிகிறது.

கவிதைகளின் வரலாற்றில் சீனர்களும், பாரசீகர்களும் மிகவும் தொன்மை வாய்ந்தவர்கள். சீனர்களின் முதல் மாபெரும் கவிதைத் தொகுப்பு 'ஷீ சிங்' என்பதாகும். இது கிமு 11-7ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதாக அறியமுடிகிறது. ஷீ என்றால் கவிதையென்றும் சிங் என்றால் தொகுப்பு என்றும் பொருளாகும். கின் அரசரின் காலத்தில் பழமையான நூல்கள் எரிக்கப்பட்டபோது இதுவும் எரிக்கப்பட்டுள்ளது. பின்னர் வாய்மொழியான நினைவுகளிலிருந்து இவை மீண்டும் தொகுக்கப்பட்டதில் 305 கவிதைகள் மட்டுமே எஞ்சி நின்றன.

இதிலுள்ள கவிதைகள் பெண்களின் உரிமைகளைப் பற்றி அதிகம் பேசுபவையாக இருந்திருக்கின்றன. இதனைத் தமிழில் 'பயணி' என்ற புனைப்பெயரில் எழுதிவரும் எழுத்தாளர் எம்.ஸ்ரீதரன் என்பவர் 'கவித்தொகை - வாரிச் சூடினும் பார்ப்பவரில்லை' என்ற பெயரில், நூலாக நேரடி மொழிபெயர்ப்பில் தமிழுக்குத் தந்துள்ளார்.

அந்தக் காலகட்டத்தில் ஜப்பானியில் எழுதப்பட்ட கவிதைகள் பொதுவில், வாக்கா (Waka) என்றே அழைக்கப்பட்டன. சாமூராய்கள், தங்களின் கவிதைகளை, முதலில் ஒருவர் ஹொக்கு என்றழைக்கப்பட்ட 3 வரிகளில் 5-7-5 என்ற அசைகளில் கவிதையைப் படிக்க, மற்றவர் 7-7 என்ற அசைகளில் இரண்டு வரிக் கவிதையாகத் தொடர்வார் (இது டங்கா என்பதாகும்). சில நேரங்களில் இதுவே ஒருவர் 5-7-5 என்று தொடங்க, அடுத்தவர் 7-7 அதற்கடுத்தவர் 7-7 என்று நீண்டுகொண்டே போவதுமுண்டு. இந்த அமைப்பிற்கு Bussokusekika அதாவது 'புத்தப் பாதை' என்று பெயர். பின்னர் இவைதான் நாளடைவில் படிப்படியாகச் சுருங்கி பாஷோவின் காலகட்டத்தில் ஹொக்கு என்பது, ஹைக்கூவாக 5-7-5 என்ற அசைகளோடு மட்டுமே நின்றுவிட்டது.

சாமூராய்களின் முக்கியப் பங்களிப்பில் த்யானமும் ஒன்றென்பதால் அதையொட்டியே ஹொக்கு, டங்கா மற்றும் ரங்கா கவிதைகளின் வெளிப்பாடுகள் அமைந்தன. இயற்கைச் சூழலின் பிணைப்பு அவர்களின் கவிதைகளைப் பற்றிச் சிந்திக்கவைத்தது. உலக மக்களின் பரவலான ஆதரவைப் பெறுவதற்கும் இதுவே மிக முக்கியக் காரணியாகவும் அமைந்தது.

13, 15ஆம் நூற்றாண்டுகளில் சாமூராய்களின் தேவைகள் படிப்படியாகக் குறையத் தொடங்கின. அரசாங்கமே இவர்களுக்கு நிலங்களை ஒதுக்கிக் கொடுத்து விவசாயம் செய்துகொள்ள அனுமதியையும் தந்தது. அவர்கள் விவசாயம் மட்டுமல்லாமல் தங்களுக்குப் பிடித்த தச்சுப்பணிகளையும் சேர்த்துச் செய்து தங்களின் வாழ்வியல் அம்சத்தைப் படிப்படியாக மாற்றிக்கொள்ளத் தொடங்கினார்கள்.




உலகப் புகழ்பெற்ற இயக்குநர் அக்கிரா குரோசோவின் திரைப்படங்கள் இந்தக் காலத்தை மய்யமாக வைத்தே சாமூராய்களின் வரலாற்றைப் பதிவு செய்துள்ளதென்பதை நாம் அறியலாம்.

16ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலாக, உலகமயமாக்கல் மற்றும் கால மாற்றங்களின் பின்னணியால் போருக்கான வடிவங்கள் துப்பாக்கிகள், பீரங்கிகள் என நவீன அம்சங்களுக்கு மாறிவிட்ட சூழலில் 18ஆம் நூற்றாண்டில் இவர்களின் வம்சமும் முடிவிற்கு வந்ததென்றே சொல்ல வேண்டும்.

இங்கிருந்து அடுத்த நகர்வாகத் த்யானமும் ஹைக்கூவும் என்ற பள்ளத்தாக்கிற்கு நகர்வோம். அதற்கு முன்பாக இங்குள்ள சில குறிப்புகள்.

தமிழில் முதன்முதலில் ஹைக் கூவைப் பற்றி ஆய்வு நூலாக வெளியிட்டவர் முனைவர் தி.லீலாவதி என்பவர். 1990இல் முனைவர் R.H. பிளித் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தரவுகளின் அடிப்படையில் 'இதுதான் ஹைக்கூ' என்ற அந்த நூலை எழுதியிருந்தார். அதன் அமைப்பில் கவிக்கோ அப்துல் ரகுமானின் பங்களிப்பும் இணைந்திருந்தது.

1972இல், தீபம் இதழில் தமிழ் நாடன் எழுதிய 'ஜப்பானியக் கவிதை வடிவங்கள்' என்ற கட்டுரையும், அதே காலக்கட்டத்தில் கண்ணதாசன் இதழில் வெளிவந்த 35 ஹைக்கூ கவிதைகளின் மொழிபெயர்ப்பும் மக்களின் இரசனையை இதன்பால் ஈர்த்தன.

நெல்லை சு.முத்து அவர்களின் ஆய்வுக்கட்டுரையான 'பத்தாயிரம் ஹைக்கூ' (1994) மற்றும் கவிஞர் நிர்மலா சுரேஷின் 'ஹைக்கூ கவிதைகள்' (1997) தொகுப்பும் தமிழ் ஹைக்கூ ஆய்வு நூல்களில் மிக முக்கியமான தொகுப்புகளாகும்.

தமிழ்நாட்டில் ஹைக்கூவிற்கென்றே பங்காற்றிய ஒரு சில முக்கியமானவர் களையும் மறந்துவிட முடியாது. அவர்களையும் நாம் இக்கட்டுரையில் குறிப்பிடுவது மிக முக்கியம். அதில் கன்னிக்கோவில் ராஜா, ந.துறைவன், ந.விச்சுவநாதன் மற்றும் இரா. ரவி இவர்களின் பணிகளும் மிக முக்கியமானவை (இந்தப் பட்டியல் அடுத்தடுத்தும் தொடரும்).

கவிஞர் நிர்மலா சுரேஷின் ஓர் அழகிய ஹைக்கூ -

**படுக்கையறை சன்னல்**
**ஓயாமல் கம்பிகளை உரசுகிறது**
**தென்னங்கீற்று.**

**- இன்னும் தூர்வாருவோம்** ■

• கவி: ரோஷான் ஏ.ஜிப்ரி
சித்திரம்: கொ.வடிவேலன்

# மண் புழுவின் இருப்பு!



ஒருவர் மீது ஒருவர் கொண்ட
மோகப் பாய்ச்சலில்
எச்சிலாய்த் தெறித்த
ஈரத்திலிருந்துதான்
விளைந்திருக்க வேண்டும்
காலைப் பிடித்து
சுத்திக் கிடக்கும்
இம் மண்புழுவின் பிறப்பு

சுயமென்று நகரும் இலக்கு
நேர் கோடன்றி
விசித்திரங்களின் வளைவுகளாலானது

திட்டுகளில் வசிப்பதான
மமதையில்
இறங்கிக் கொண்டிருப்பது
பள்ளத்தாக்குகளில்
என்றறியாப் பாவப் புழு
ஊர்ந்து திரிகிறது இப்போதும்

போர்க் குணத்தின்
அம்சங்களோடான
சிக்கல்களின் வழுவழுப்பு
மேனியெங்கும்
மின்னித் துலங்க
மரணம் தன் பங்குக்கு
வாழ்வென்னும் பெயரில்
இன்னும் திமிராக்கிச்
சவால்களைக் கடக்கவிட்டு
சாதுர்யமாகக் கடத்திச் சென்று
சாம்பல் மேட்டில் சரித்து
மக்கி மண்ணோடு மண்ணாக்க
உயிர்ப்பென்று
ஒரு தசைக் கூட்டைக்
கட்டி வைத்திருக்கிறது
காலம் தன்னில்!

• கார்த்திக் திலகன்

# ‘ஆனந்தியின் பொருட்டு தாழப் பறக்கும் தட்டான்கள்’ – கதிர்பாரதி






இந்தக் கதிர்பாரதிக்குப் பந்து போடும்போது மட்டும் காலதேவன் ஏன் ஃபுல் டாஸாகவே வீசிவிடுகிறான்... அவன் அடிக்கிற ஒவ்வொரு பந்தும் ஆடுகளத்திற்கு வெளியே அல்லவா விழுகிறது என்று என்னைத் தனது முதல் கவிதைத் தொகுப்பிலேயே சற்று பொறாமைப்பட வைத்த கவிஞன் கதிர்பாரதி. "ஆனந்தியின் பொருட்டு தாழப் பறக்கும் தட்டான்கள்"என்கிற தனது இரண்டாவது கவிதைத் தொகுப்பிலும் சதமடித்து என்னை அதிகம் பொறாமைப்பட வைத்திருக்கிறார் அவர்.

நஞ்சு கலந்த நீரில் செத்து மிதக்கும் மீன்களாகப் பெருகிக்கிடக்கும் கவிதைத் தொகுப்புகளுக்கு மத்தியில், இரத்தமும் சதையுமாக நம்மோடு அந்தரங்க உரையாடலை நிகழ்த்துகிற கவிதைகள் கதிர்பாரதியுடையவை. இழப்பின் வலிகளை, இயல்பின் கொடூரங்களை, நொதிக்கும் மௌனங்களை, ஓயாமல் அதிரும் உலகின் மையச்சரடை இசை லயத்தோடு பதிவு செய்திருப்பவை அவரது கவிதைகள்.

சமுதாயத்தின் அற உணர்ச்சிகளை மேய்ந்து கொழுக்கும் எருமைகளாக மாறிவிட்ட அரசியலையும் நீதிமுறைகளையும் எள்ளலோடு கடந்துபோகின்றன இத்தொகுப்பின் பல கவிதைகள்.

"அன்பின் நிமித்தம் படர்ந்த கொடியின் வேரில்/ஆழ ஊன்றி நின்ற/ உங்கள் வாளின் கூர்முனைக்கு எதிர் நிற்கவே/ உலகத்தின் நீதிக்குத் தொடைகள் நடுங்குகின்றன/"

என்கிறது ஒரு கவிதை .

தன் கண்கட்டுகளை அவிழ்த்துவிட்டு லஜ்ஜை இன்றி அதிகாரத்தின் ஆட்டத்தை ரசித்துக்கொண்டிருக்கிறாள் நீதி தேவதை. வன்முறைகள் உலகமயமாகி விட்ட இன்றைய சூழலில் உண்மையில் நீதியின் தொடைகள் நடுங்கிக்கொண்டுதான் இருக்கிறது இல்லையா?

கதிர்பாரதியின் கவிதைகளில் இரண்டு விதமான பாதங்கள் மீண்டும் மீண்டும் காட்சிப்படுத்தப்படுகின்றன. ஒன்று உழுகுடியானவனின் பாதம், இரண்டு உலகத்தின் இரு துருவங்களுக்கிடையே இழுத்துக் கட்டப்பட்ட சந்தைப்பொருளாதாரம் எனும் தந்தியின் மீது நடந்து செல்லும் கார்ப்பரேட்டுகளின் கழைக் கூத்தாடும் பாதம். மாடமாளிகையின் சிகப்புக் கம்பள விரிப்புகளில் நடக்கும் பாதங்களை விட, வரப்புகளிலும் வயல்களிலும் நடந்து செல்கிற பாதங்கள் தொழுகைக்குரியன. உழவனின் பாதங்களில் சிறு கீறல் விழுந்தாலும் உலகத்தின் கண்களில் நீர் வரவேண்டும். அப்போதுதான் இந்த உலகம் உருப்படும்.

"நடக்கும்போது பெயர்ந்துவிட்ட கால் பெருவிரல் நகத்தில்/சிக்கும் அருகம்புல் சொடுக்கிய வலி"

என்று கவிஞர் எழுதுகிறபோது உயிரின் குருத்தில் ஒரு முள் இறங்கியது போல நமக்கும் வலி எடுக்கிறது.

இரண்டாம் வகை பாதமொன்றைப் பனிச்சறுக்கு விளையாட்டின் பின்னணியில் விளக்குகிறார் கவிஞர்:

"திருப்பமொன்றில் கவனம் பிசகியவன்/ முழங்கால் முறிந்து வீழ்கிறான்/அவன் தொண்டைக்குழிக்குள் உந்துகுச்சை ஊன்றி/ முன்னேறுகிறான் பின்வருபவன்/"

உண்மையாகச் சொல்லுகிறேன்.. எனது மனசாட்சியின் அடிப்புறத்தை அதிரவைக்கிற இதுபோன்ற கவிதையை இதற்கு முன்பு நான் படித்ததில்லை.

வேகம் வேகம் எதிலும் வேகம் எங்கும் வேகம். ஓட்டமும் நடையுமாக இங்கு ஓடுகிற மனிதர்களைப் பார்த்தால் உலகத்தின் கதவுகளை உடைத்துக்கொண்டு வெளியே ஓடிவிடுவார்களோ என்று பயமாக இருக்கிறது. இந்த அவசர மனிதனின் ஒவ்வொரு இதய அறையிலும் இருந்து உறுமுகிற நால்வகை மிருகங்களின் ஒற்றைக் குரலாக ஒலிக்கிறது இந்தக் கவிதை வரிகள்.

கதிர்பாரதியின் ஒரு கவிதையைப் படிக்கிற போது காரிருளுக்கு அடியில் சிக்கிக்கொண்டு அழுதுகொண்டிருந்த ஒளியைக் காப்பாற்றி வெளிக்கொண்டுவந்த ஆசுவாசம் உண்டாகிறது. மறுகவிதையைப் படிக்கிறபோது இயற்கையின் இந்திரியம் போல ஓடிவரும் அருவி ஒன்று கடலென்னும் மகாயோனியில் கலந்ததைப் போலப் பேரானந்தம் உண்டாகிறது.

"வலது புறங்கை மடக்கி/ சிதைந்திருக்கும்/ இளங்குருத்தின் தலைமீது/ விழுந்து வெட்டியது வேறொன்றுமில்லை/ நமது வெள்ளைப்புறா அலகில் ஏந்திய/ ஆலிவ் இலை"

என்ற கவிதையைப் படித்தால் உங்களுக்கு என்ன உணர்வு தோன்றுகிறதோ தெரியவில்லை. ஆனால் எனக்குத் தோன்றுவது என்னவென்றால், இந்தக் கவிதையைப் பாரதி படித்திருந்தால் பத்துமுத்தம் கொடுத்திருப்பான் அதை எழுதிய கைகளுக்கு என்று தோன்றியது.

ஆங்காரம்தனை அடக்கி, ஐம்புலனைச் சுட்டெரித்து, தூங்காமல் தூங்கிச் சுகம்பெற நினைக்கிற சித்தர்களின் தவம் போலத்தான் இந்தக் காதலும்.

"பெருந்தூரலுக்கு நனைந்த/ வைக்கோல் போரின் நடுப்புற வெப்பம் போல/ சுட்டுப் பொசுக்கும் லௌகீகம் தாக்கி வீழ்ந்தவனுக்கு/ மடி ஈந்து மார்புகள் ஈந்த முதிரிளம் பெண்" எனத் தொடரும் கவிதை

"உச்சந்தலையில் மையமிட்டு/

புலன்களைத் திரும்பிப் படுக்க வைத்தாள்/" என்பதாக நீள்கிறது.

புலன்களைச் சுட்டெரிக்கிற தவமில்லை இது.. புலன்களைத் திரும்பிப் படுக்க வைக்கிற தவம். இந்தப் புலன்களின் தியானத்தில் வெடித்துச் சிதறும் காமத்தின் வேர்பலாக்கள்தான் எத்தனை ருசி மிக்கவை! இது போல இதயத்தின் உள்பிரதேசங்களை ஒளியூட்டக்கூடிய வரிகளை நான் சமீபத்தில் படித்ததாக நினைவில்லை.

சுழற்பந்து வீச்சாளரானஅவரின் பந்துகள் சிலநேரம் எதிர்பாராமல் உள்நோக்கிச் சுழன்று விக்கெட்டை வீழ்த்திவிடுகிறது.

'மோப்பக் குழையும் அனிச்சம் பூவான/ உங்கள் தனபாரம்/ தாழ்ந்துயர்ந்ததிர்ந்து/ என்னுயிரின் குரல்வளையில் கிடந்து/ அழுத்துவதை அறியீரோ'

என்ற வரிகளை வாசிக்கிறபோது நம் மனம் என்னும் பூக்களில் மகரந்தச்சேர்க்கை நடந்து முடிந்துவிடுகிறது.

'மலரினும் மெல்லியது காமம் சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்' என்று ஒரு காதல் பெருந்தலைவன் எழுதுகிறான். மெல்லிய மலர் கூட பெரும்பாரமாகக் கனத்துவிடுவது இந்தக் காதலில்தான். காதலிக்குப் பரிசளிக்க ஒரு சின்னஞ்சிறு மலரை உள்ளங்கையில் ஏந்தி இருந்து பாருங்கள். அவள் வந்து பெற்றுக் கொள்ளும்வரை அதன் பெரும்பாரத்தை உங்களால் தாங்கவியலாது தவிப்பீர்கள்.

"சொத்தெனத் தலையில் விழுகிற புளியம் பழத்துக்கு/ உன் கீழுதட்டின் சுவை/ ஆகவே/ பழந்தின்று கைமீந்த புளியங்கோதுக்கு/ உன் பெண்ணந்தரங்கத்துப்/ பொன்னிற முடிகளின் சுவை"

என்ற வரிகளைப் படிக்கத் தொடங்கும்போதே கொதிக்கிற மனதுக்குள் விழுந்து அப்பளம் போலப் பொறிந்து விடுகிறது நம் காமம்.

ஆற அமர சாப்பிட அவகாசமின்றி அள்ளி விழுங்கவேண்டி இருக்கிறது கவிதையின் அத்தனைச் சொற்களையும்.

கவிதை என்பது வேறொன்றுமில்லை.. அது மொழியைக் கட்டி அணைத்துக் காலம் இடுகிற முத்தம். இந்தக் கவிதையின் ஈரம்தான் இளநுங்கைச் சுவைக்கிற லாவகத்தோடு வாழ்வைச் சுவைக்க நமக்குக் கற்றுத்தருகிறது. இத்தொகுப்பின் கவிதை ஒன்றில் ஒரு அணில் வருகிறது. அந்த அணில் கிளைகளின் தாய்மையை உணர்ந்த அணில். ஒளியின் நீர்மையை அனுபவிக்கிற அணில்.

"அந்தப் பூங்காவில் அங்கிங்கெனாதபடி/ எங்கும் தாவிக்குதித்தோடும் அணிலொன்று/ ................................ /கிளை இடுக்கிலிருந்து ஊடுருவும்/ சூரியக் கற்றை ஒன்றை/ தன் குட்டி வாய் திறந்து குடிக்கிறது"

என நீள்கிறது கவிதை. இந்தக் கவிதையைப் படித்து முடித்ததும் நம் உதிரத்தடமெங்கும் ஓராயிரம் அணில்கள் ஓடிக்களிக்கின்றன அல்லவா? தன் கதிர் கச்சையைத் தளர்த்தி அணில் குட்டிக்குப் பாலூட்டுகிற சூரியத் தாயையும் வணங்கத் தோன்றுகிறது அல்லவா ?

அதுதான் கவிஞனாகக் கதிர்பாரதியின் வெற்றி.

கவிதை எழுதுவது ஒரு மெஜீஷியன் கூட்டத்தின் நடுவே தன் பிள்ளையை வாளால் வெட்டிப் பிளப்பது போன்றது... வாளில் குருதி படியாதவரை கைத்தட்டல் கிடைக்கும் என்கிறார் கவிஞர் கரிகாலன். கதிர்பாரதியின் வாளோ ரத்தமில்லாமல் மனங்களை இரண்டாக வெட்டுகிறது. அடுத்த நொடியே அவற்றைச் சத்தமில்லாமல் ஒட்டியும் தருகிறது.

எழுதி முடிக்கப்படாத ஒரு கவிதையைப்பற்றி இப்படி எழுதுகிறார் கதிர்பாரதி:

"எழுதி முடிக்காத கவிதையொன்று/ வன்மையாகக் குப்புறப் படுத்திருக்க/ அதன் புட்டத்தை ஆதூரமாகத் தடவி/ செல்லம் கொஞ்ச வேண்டி இருக்கிறது"

எழுதி முடித்து அழகிய அச்சில் வெளிவந்திருக்கும் இக்கவிதைத் தொகுப்பிலுள்ள பல கவிதைகளை அப்படித்தான் செல்லம் கொஞ்ச வேண்டி இருக்கிறது.

ஆனந்தியின் பொருட்டு மட்டுமல்ல, நம்பொருட்டும் தாழப்பறக்கின்றன கதிர் பாரதியின் கவிதைத்தட்டான்கள், மொழியின் மாயவிளையாட்டில் மினுங்கும் கண்ணாடிச் சிறகுகளோடு. ■

தொடர் - 1

• புலவர் இரெ. சண்முக வடிவேல்

# கற்றது தமிழ்



**25.08.1937**இல் நாகூரில் பிறந்தவன் நான். நாகூரில் தேசிய உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்த சமயம். என்னுள் தமிழ்மீதான விதையைப் பள்ளிக்கூடத்து நாட்களிலேயே உணர்ச்சிப்பூர்வமாக நடத்திய தமிழாசிரியர் தில்லை கோவிந்தன் விதைத்தார். அதனால் பள்ளிப்பருவத்து நாட்களில் தமிழ்மீது கலைத்தாகம் உருவாக ஆரம்பித்தது.

நாகூரில் அப்பா ஜவுளிக்கடை வைத்திருந்தார். அப்பாவுக்கு அந்தக் கடையைப் பார்த்துக் கொண்டாலே போதும். இன்னொருத்தர்கிட்ட கைகட்டி சம்பளம் வாங்க அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனால், எனக்குத் தமிழ்கிட்ட கைகட்டி நிற்கவேண்டும் என்று ஆசை. திருவையாறு போகவேண்டும், இல்லை என்றால் கரந்தை போய்த் தமிழ் படிக்கவேண்டும். ஏனென்றால், அப்போது அவைதான் தனியிடத்தைப் பெற்றிருந்தன. அங்கே போய்ப் படிக்கவிடமாட்டேன் என்று அப்பா சொல்லிவிட்டார். சரியென்று, ஆசிரியர் பயிற்சி முடித்திருந்ததால் நாகூர் முனிசிபல் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியிலமர்ந்தேன். இருப்பினும், என் ஓய்வு நேரமெல்லாம் அப்பாவுக்காகக் கடையிலேயே கழித்தேன்.

அப்போதெல்லாம் ஆசிரியர்களுக்கு மாதாமாதம் ஆசிரியர் சங்கக் கூட்டம் நடக்கும். புதிய அரசாணை, புதிய பயிற்சிகள் எல்லாம் சொல்லித் தருவார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு தலைப்பு கொடுத்துப் பேசச் சொல்வார்கள். வேலைக்குச் சேர்ந்த புதிதில் எனக்கும் ஒரு தலைப்பு கொடுத்துப் பேசச் சொன்னார்கள்.

ஐக்கிய நாடுகள் சபை பற்றி என்னைப் பேசச் சொன்னார்கள். அது பற்றின விவரங்கள் சேகரித்து, பேசத் தொடங்கினேன். அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பள்ளிகளுக்கான துணை ஆய்வாளர் வியந்தார். அவர் தலைமையின்கீழ் வரும் பல சங்கங்களிலும் பரிந்துரைத்துப் பேச வைத்தார். அப்போது ஆசிரியர்களுக்கிடையில் பேச்சாளராக அறியப்பட்டேன்.

அப்படித்தான், சிக்கலில் பேசும்போது, கோவை இளஞ்சேரன் என்ற தமிழாசிரியரின் அறிமுகம் கிடைத்தது. தமிழாசிரியர்க்கான இலக்கணத்தோடு இருப்பார். 'நல்லாப் பேசுறீங்க, தமிழ் படிங்களேன்'ன்னார். 'படிக்க ஆசைதான், ஆனா, சொல்லிக் கொடுக்க யாரு இருக்கா?' என்றேன். 'நான் நாகை தமிழ்ச்சங்கத்திலே புலவர் பட்ட வகுப்பு ஆரம்பிக்கப் போகிறேன். கத்துக்கறீங்களா?'ன்னார். அந்தப் படிப்பு நான்கு வருடம், முடிவில் புலவர் பட்டம் பெற்றிடலாம். நானும் சீனி சண்முகமும் பள்ளி விட்டதும் சைக்கிளில் தினமும் நாகூரிலிருந்து நாகை சென்று தமிழ் கற்று வந்தோம்.

தினமும் இரவுதான் வீடு திரும்புவதால், அப்பாவிற்குக் கடையைப் பார்த்துக் கொள்ள நான் வரவில்லையென்று கோபம்.. என்னமோ பண்ணிக்கோ!!ன்னு விட்டுட்டார். அது எனக்கு அதிகப் படியான சுதந்திரத்தைக் கொடுத்தது. இப்ப உள்ள முதுகலை, முனைவர்லாம் அதுக்கு இணையாக முடியாது. தொல்காப்பியம், நன்னூல் எல்லாம் மனனம் செய்து தேர்வெழுத வேண்டும். மேலோட்டமாகப் படித்தால், தேற முடியாது. ஆழமாக வேரூன்றிப் படிக்க வேண்டும். அப்படித் தான், கோவை இளஞ்சேரன் ஐயாவும் பாடம் நடத்தினார்.

அதனால், கல்லூரியில் படித்தவர்களை விட எங்களுக்குத் தமிழ் பற்றி அதிகம் தெரிய ஆரம்பித்தது. அவரது பாடத்திட்டத்தில் மேடைத் தமிழுக்கும் ஒரு பிரிவு இருந்தது. வெறும் பேசுவதற்கு மட்டுமல்ல, மேடையில் நடந்து வருவது, மேடையில் நிற்பது, எந்தக் கூட்டத்தில் எவ்வளவு ஒலியில் பேசவேண்டும், வரவேற்புரை, நன்றியுரை எப்படி சொல்லணும், ஏன் சொல்கிறோம்? மேடையில் தலைமை வகிப்பவரின் பொறுப்பு என்ன? முதன்மைப் பேச்சாளரின் பேச்சு எவ்வாறு அமையணும்? எல்லாவற்றிற்கும் இலக்கணம் வரையறுத்து, அவற்றைச் செய்யுட் சூத்திரமாக எங்களுக்கு அறிமுகம் செய்தார். பேச்சாளரை எத்தனை நாளுக்கு முன் தொடர்பு கொண்டு பேச அழைக்கவேண்டும் என்பதற்குக் கூட அவர் சூத்திரம் எழுதி வைத்திருந்தார். அவ்வளவு நுணுக்கமான பாடத்திட்டம் அது.

1963இல் தஞ்சையில் அண்ணா பேச வருகிறார். இராமநாதன் செட்டியார் அரங்கில் அவரின் பேச்சு. தமிழ்நாட்டின் தலைசிறந்த பேச்சாளரான அண்ணாவின் பேச்சைக் கேட்க மூன்று பேரை அனுப்பினார். மூவருக்கும் மூன்று வேலைகளைப் பிரித்துக்கொடுத்தார். 'ஒரு செய்தியிலிருந்து அடுத்த செய்திக்கு எப்படி செல்கிறார்' என்பது எனக்குக் கொடுத்த வேலை. அடிக்கடி பயன்படுத்தும் சொல் என்ன? அரசியல் எதிரிகளைப் பற்றிப் பேச என்ன மொழிநடையைப் பின்பற்றுகிறார்? என்பது பிற இருவரின் பணி.

அண்ணாவின் பேச்சை முழுதும் கூர்செவியில் கேட்டு முடித்தேன். ஒரு முறைகூட, அடுத்தபடியாக, இறுதியாக, ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன் என்பது போல் சொல்லவே இல்லை. ஆற்றொழுக்காகக் கருத்தாழமிக்க செய்திகள் வந்துகொண்டே இருந்தன. இவற்றையெல்லாம் குறிப்பெடுத்து வந்தோம்.



எங்கள் விமர்சனப் பேச்சு எப்போதும் வகுப்புத் தோழர்களிடம்தான் அமையும். அண்ணா பேசிய பேச்சை நாங்கள் விமர்சனம் செய்கிறோம் என்றதும் நாகையில் கூட்டம் வெகுவாகக் கூடிற்று. வெகுஜன மக்கள் கூடி "எங்களுக்குக் கேட்கவில்லை'' எனக் கூச்சலிடத் தொடங்கினர். உடனே, எதிரில் இருந்த தென்னவன் ஒலிபெருக்கி நிலையத்தினர் ஒலிபெருக்கி கொடுத்தனர். அப்போது தமிழ்ச்சங்கத்திற்கு வெளியே திரண்டிருந்த மக்கள் முழுமைக்கும் நாங்கள் பேசிய கருத்துக்கள் போய்ச் சேர்ந்தன. அது தமிழ்ச்சங்கத்திற்கும் தமிழ் வகுப்பிற்கும், கோவை இளஞ்சேரன் ஐயாவுக்கும், எங்கள் பேச்சுக்கும் கிடைத்த வெற்றியாக அமைந்தது.

ஒருமுறை நாகைத் தமிழ்ச்சங்கத்தில் ஜஸ்டிஸ் மகாதேவன் அவர்கள் பேசி முடித்ததும், நன்றி சொன்னேன். அந்தக் கூட்டம் முடித்து வழக்கறிஞர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில், வழக்கறிஞர்கள் எல்லாம் அவரிடம் போய்ப் பேசக் கற்று வாருங்கள் என்று சொன்னார். அதிலிருந்து என் பேச்சு தனித்தன்மையாக மாறத்தொடங்கியது.

எடுத்தவுடனே, பெரியவர்களுடனான அறிமுகம் கிடைத்தது. என் முதல் பட்டி மண்டபமே குன்றக்குடி அடிகளாருடன் அரங்கேறியது. கம்பனடிப்பொடி சா. கணேசன், பேராசிரியர் இராதாகிருஷ்ணன் போன்ற பேரறிஞர்களுடன் பேசத் தொடங்கியது பரந்துபட்ட தமிழ்ப்பரப்பின் அறிமுகத்தைக் கொடுத்தது.

**தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

படிப்பதனால், நான் மகிழ்ச்சி அடைகிறேன். நான் மகிழ்ச்சி அடைவதைப் பார்த்து உலகம் மகிழ்ச்சி அடைகிறது. வேறெதிலும் அம்மகிழ்ச்சி கிடையாது. அதனால், மேலும் மேலும் படிக்கத் தொடங்கிப் பேசலாகினேன்.

இப்படியாக, தமிழாசிரியர் தில்லை கோவிந்தனால் தமிழார்வ விதை நடப்பட்டு, கோவை இளஞ்சேரன் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு, பல்வேறு தமிழ்ச் சான்றோர்களால் விருட்சமாக்கப்பட்டு, கடல் கடந்தும் தமிழ்ப் பேசி பல்வேறு அமைப்புகளினால் பலகோடி மக்களை உளம் மகிழச்செய்தது தமிழ் எனக்குக் கொடுத்த பேறல்லவா!

நாட்டுப்புற
மொழிபெயர்ப்புச் சிறுகதை

• ஆங்கில மூலம் : ஏ.கே.இராமானுஜன்
தமிழில் : சிறுமேதாவி
ஓவியம் : கொ.வடிவேல்

# திருவாத்தான்



ஒரு ஊர்ல ஒரு திருவாத்தான் இருந்தான். அவனுக்கு அண்ணன்மார் ரெண்டு பேரு இருந்தாங்க. அவனுக்கு உண்மையான பேர் இருந்தாலும், அதைச் சொல்லிக் கூப்பிட்டால் அவன் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டான். 'திருவாத்தா' என்று கூப்பிட்டால்தான் அவன் 'என்னான்னு' கேட்பான். அதனால், அந்தப் பேரே அவனுக்கு நிலைத்துவிட்டது. அவன் ஒன்னும் தெரியாத அப்பாவியாக இருந்தான். அவனுக்குப் பொய் சொல்லவோ, ரகசியத்தை மனசுல வெச்சுக்கவோ தெரியாது. அந்த ஊர்ல இருக்கும் குறும்புக்கார மனிதர்கள் ஒரு விஷயத்தை ஊர்முழுதும் பரப்ப வேண்டுமென்றால், அந்த விஷயத்தைத் திருவாத்தானிடம் சொல்லிவிட்டு, “இது ரகசியம், யார்கிட்டேயும் சொல்லக்கூடாது” என்று சொல்லிவிடுவார்கள். திருவாத்தான் அதை ஊரிலுள்ள அனைவரிடமும் சொல்லிவிட்டு, தன் அண்ணன்மாரிடமும் வந்து சொல்வான். பிறகு, சத்தமாக “ஞாபகம் வெச்சுக்கோ.. இத யாருக்கும் சொல்லக்கூடாது'' என்பான். அவ்வளவு திருவாத்தான் அவன்.

அவனுடைய அப்பா அம்மா இருவரும் நிறைய சொத்துக்களை விட்டுவிட்டுச் செத்துப் போய்விட்டனர். மூத்த அண்ணன்மார் இருவரும் திருமணம் ஆனவர்கள். அவர்கள் இருவரும் இருந்த சொத்து முழுவதையும் தங்களுக்குள் சரிபாதியாகப் பங்கு போட்டுக் கொண்டனர். திருவாத்தானும் தம்முடன் பிறந்தவன், தம்மில் ஒருவன் என்று அவர்கள் நினைக்கவில்லை. அவனை விரட்டிவிட்டனர்.

ஆனால், அவன் அழுதான். "நானும் அப்பாவோட பையன்தான். எனக்கும் சொத்துல பங்கு வேணும்" என்றான்.

"சரி.. சரி.. இப்ப உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டனர் அண்ணன்மார். என்ன முடிவெடுத்தாலும் திருவாத்தானுக்குப் பிரச்சனையாகி விடும். பலமுறை பேசியபின், திருவாத்தான் தயங்கித் தயங்கி, "ஒரு எருது வேணும்" என்றான்.

அவனுடைய அண்ணன்மாரும் வயதான, ஒன்றுக்கும் உதவாத நோஞ்சானாக இருந்த எருது ஒன்றைக் கொடுத்தனர். அவர்கள் மகிழ்ச்சியுடன் அதை அவனுக்குக் கொடுத்தனர். அவன் அண்ணன்மாருடன், அவர்கள் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுத் தங்கியிருந்தாலும், இப்போது, தானும் ஒரு எருதுக்குச் சொந்தக்காரன் என்று நம்பினான். அந்த எருதின் மீது அன்புகாட்டி, அது கட்டப்பட்டிருக்கும் தொழுவத்துக்குச் சென்று, அதனுடனேயே இருந்து பொழுதைக் கழிக்கத் தொடங்கினான். ஆற்றங்கரை ஓரமாக எருதைக் கூட்டிச் சென்று, புல் மேய விட்டு, நன்கு தேய்த்துக் கழுவி குளிப்பாட்டி விடுவான். ஒரு குழந்தையைப் போல நன்கு கவனித்துப் பார்த்துக் கொண்டான். நாள் முழுவதும் தன் எருதுடனேயே பேசிக் கொண்டிருந்தான். அந்த எருது தலையை ஆட்டினாலோ, ஈக்களை விரட்டக் காதுகளை அடித்தாலோ, வாலைச் சுழற்றி அடித்தாலோ அதற்குள் அர்த்தம் இருப்பதாகக் கண்டு பேசுவான் திருவாத்தான். அதற்கு வயிறு பசித்தால் அவனுடைய முகத்தை நக்குவதற்கு வரும். அதைக் கண்டு மெய்சிலிர்த்துப் போய் அங்கு வருவோர் போவோரிடமும் "பார்த்திங்களா.. என் தங்கம்.. என் மேல எவ்வளவு பிரியமா இருக்குது'' என்பான்.

அவன் அதற்கு 'எருது ராசா' என்று பெயர் வைத்தான். அவன் அதை ஒரு அம்மாவைப் போலிருந்து ஒவ்வொன்றுக்கும் கவலைப் பட்டான். "என் ராசா இன்னிக்குச் சுத்தமாத் தண்ணியே குடிக்கலியே.. இன்னிக்கு முழுசும் வால அசைக்கவேயில்ல.. எப்பவும் கத்தற மாதிரி இன்னிக்குக் கத்தவே இல்லியே.. எனக்குத் தெரியும்.. இன்னிக்கு இதுக்கு ஏதோ ஆயிடுச்சு" என்று ஒவ்வொருவிதமாகச் சொல்லிக் கொண்டேயிருப்பான்.

அந்த எருதால் திருவாத்தான் பேசுகின்ற எந்த ஒரு வார்த்தையையும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒருமுறை அந்த எருதின் வாலைக் கையில் பிடித்து முறுக்கிவிட்டு, "என் ராசா.. ஏன் உன் வால அசைக்கவே இல்ல'' என்று கேட்டுக்கொண்டிருந்தபோது, அந்த எருது தன் வலிமை முழுவதையும் திரட்டி, அவனை ஒரு உதை உதைத்தது. உதை பட்டவுடனே அந்த விலங்கின் மீது இருந்த ஆர்வம் அவனுக்குப் போய்விட்டது.

ஒருநாள், அவனுடைய அண்ணன்மார் பணத்தேவைக்காகத் தாங்கள் வைத்திருந்த பசுக்களில் இரண்டை விற்கலாம் என்று பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டு, திருவாத்தான் தன் எருதையும் விற்கலாம் என்று நினைத்தான். உடனே, தன் எருதைப் பிடித்துக்கொண்டு அருகில் சந்தை இருந்த ஒரு ஊருக்குப் புறப்பட்டான். அவன் போன நாளில் அங்கு சந்தை கூடவில்லை. அந்த எருதோ, வயதான நோஞ்சானாக இருந்தது. அதை யார் விலை கொடுத்து வாங்குவார்? பல நாட்களாக வெயிலில் நின்று பொழுது சாயும் வரை அவன் இருந்தாலும் தன் எருதை விற்க முடியாமல் திரும்ப வீட்டுக்கே இழுத்துக் கொண்டு வந்தான்.

இப்படியே பலமுறை அதைக் கொண்டு செல்வதும், இழுத்துக்கொண்டு வருவதுமாக இருந்தபோது, ஒருநாள் வழியில் நன்கு முற்றிக் காய்ந்து போன மரம் ஒன்று 'க்ரிக் க்ரிக்' என்று காற்றுக்கு அசைந்தவாறு இருந்தது. க்ரிக் க்ரிக் என்ற சத்தம் பேசுவது போல இருந்தது. திருவாத்தான் அதைக் கூர்ந்து கேட்டான்.

"அய்யோ.. மரச்சாமி என்கூடவா பேசறீங்க?"

"க்ரிக்.. க்ரிக்"

"இந்த எருதுக்கு நான் என்ன வெல கேட்பேன்னு உனக்குத் தெரியணுமா?"

"க்ரிக்.. க்ரிக்" என்றது மரம்.

“இங்க பாரு.. இது நல்ல எருது. இருபத்தஞ்சு ரூவாய்க்குக் கொறைஞ்சு இத நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன்”

“க்ரிக்..க்ரிக்”

“உனக்கு இந்த எருது வேணுமா? சரி.. எனக்குப் பணம் கொடுத்தா நீயே வெச்சுக்கலாம்”

“க்ரிக்..க்ரிக்”

“நாளைக்கா? உன்கிட்ட நாளைக்குத்தான் பணம் இருக்குமா?”

“க்ரிக்.. க்ரிக்”

“சரி.. சரி.. பணத்தைக் கையில வச்சுகிட்டு யாரு பொறக்குறா? நாளைக்கு வந்து நான் பணம் வாங்கிக்கிறேன்..” என்று சொன்ன திருவாத்தான் எருதை அந்த மரத்தில் கட்டிப் போட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றான்.

இரவு எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, அண்ணன்மார் “உன்னோட எருது என்னாச்சுடா திருவாத்தா?” என்று கேட்டனர்.

“அத நான் வித்துட்டேன்”

“என்ன விலைக்கு?”

“இருவத்தஞ்சு ரூவாய்க்கு”

‘பரவாயில்லையே.. நம்ம பையனும் கொஞ்சம் புத்திசாலியா இருக்கிறானே..’ என்று நினைத்த அண்ணன்மார், ஒன்றுக்கும் உதவாத எருதைக்கூட இருபத்தஞ்சு ரூபாய்க்கு வித்துட்டானே என்று நினைத்தனர்.

“சரி.. அந்தப் பணம் எங்கே?”

“அவன் பணம் நாளைக்குத் தர்றேன்னு சொன்னான்” என்று திருவாத்தான் சொன்னான். அதைக் கேட்ட அண்ணன்மார் ‘உண்மையிலேயே வித்துட்ட மாதிரிதான் தெரியுது’ என்று நினைத்தனர்.

அடுத்தநாள் காலை மீண்டும் மரத்திடம் சென்றான் திருவாத்தான். அவன் கட்டி வைத்த எருது அங்கிருக்கவில்லை. அந்த வழியாக வந்த கசாப்புக் கடைக்காரர்கள் யாரோ அதை ஓட்டிச் சென்றுவிட்டனர்.

“மரமே.. ஏ.. மரமே.. என் பணத்தைக் கொடுத்துடு” என்று மரத்திடம் கேட்டான் திருவாத்தான். அன்றும் அந்த மரம் “க்ரிக். க்ரிக்..” என்ற சத்தத்தை மட்டுமே கொடுத்தது.

“என்ன.. என்ன சொல்றே? நாளைக்கா? கண்டிப்பா நாளைக்குக் கொடுக்காம இருக்கக் கூடாது! என்ன? நாளைக்கு நாளைக்குன்னு சொல்லிட்டிருக்கக்கூடாது. அது நல்ல வியாபாரத்துக்கு அழகில்ல. என்ன சரியா? சரி. இந்த ஒரே ஒரு தடவைதான். நாளைக்கு வந்தவுடன் பணம் கொடுத்துடணும். நாளைக்கெல்லாம் நான் நின்னுட்டிருக்க மாட்டேன்” என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு வீட்டுக்குப் போய்விட்டான் திருவாத்தான்.

அந்த நாளும் திருவாத்தானின் அண்ணன்மார் எருது வித்த பணம் குறித்துக் கேட்டபோது, “இன்னிக்கு அவன் கையில பணம் இல்லியாம். நாளைக்குக் கண்டிப்பாத் தர்றேன்னு சொன்னான்” என்றான்.

“சரிடா.. அந்த எருதை யாருக்குத்தான் வித்தே? அதையாவது சொல்லேன்” என்று வற்புறுத்திக் கேட்டனர் அண்ணன்மார்.

“அந்த இட்டேரி ஓரமாப் பெரிய காய்ஞ்ச மரம் ஒண்ணு இருந்ததில்லே.. அந்த மரத்துக்குத்தான் எருத வித்தேன்”

“ஏண்டா ஏதாவது தெரிஞ்சுதான் இதையெல்லாம் செய்யறியா?” என்று திருவாத்தான் மீது நம்பிக்கையில்லாமல் கேட்டனர் அண்ணன்மார்.

ஆனால், திருவாத்தான் விளக்கமாகச் சொன்னான். “இந்த எருது அவனுக்கு ரொம்பப் புடிச்சிருந்தது. என் நெஞ்சே கரையற மாதிரி கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டான். அதனால, சரி.. இந்தான்னு கொடுத்துட்டேன். ஆனால், நாளைக்கு மட்டும் எனக்கு அவன் பணம் கொடுக்காம இருக்கட்டும், அவனுக்குச் சரியான பாடம் கத்துக் குடுத்து நான் யாருன்னு அவனுக்குக் காட்டறேன். நீங்க வேணாப் பாருங்க” என்று விளக்கிச் சொன்னான் திருவாத்தான்.

ஆனால், அண்ணன்மாருக்கு இது பெரிய விஷயமாக இருக்கவில்லை. எலும்புந் தோலுமான ஒரு நோஞ்சான் எருது நம்ம கைய விட்டுப் போனாப் போதும் என்பது மாதிரி அவர்களுக்கு ‘அப்பாடா’ என்றிருந்தது. இதை அண்ணன்மார் இருவரும் அவர்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அடுத்த நாள் கையில் கோடாலியுடன் மரத்தடிக்குப் போனான் திருவாத்தான்.

“என்ன மரமே.. எனக்குத் தர வேண்டிய இருவத்தஞ்சு ரூவாயக் குடுக்கிறியா?”

“க்ரிக்.. க்ரிக்..” தலையாட்டியது போலச் சத்தம் போட்டது மரம்.

(அடுத்த இதழில் முடியும்)

மாணவர் பக்கம்

பயணக் கட்டுரை

தொடர் - 3

• தமிழ்பாரதன்
மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்

# ஈரிருநாள் இலங்கை

அலைபாயும் கடலோரம் அலைபோலே நற்துயிலை அலைக்கழித்துக் கொண்டிருந்தன கனவுகள். விடிந்தால், போட்டி முடிந்தால், முடிவுகள் தெரிந்தால், அதை நானறிந்தால், பின் ஊரறிந்தால்... என அடுக்கடுக்கான வினாக்களின் விடைகள் இரவைப் போக்கியிருந்தன. நாளை வாழ்வின் மறக்க முடியா நிகழ்வேதேனும் உள்ளதெனின், தூக்கத்தைக் கலைக்கும் நனவிலி எல்லாருக்குமானது. இரண்டு முறைக்கு மேல் கலைந்த தூக்கத்தை முதல்நாள் அலைந்தோய்ந்த கால்கள் அசதியால் மீட்டுருவாக்கியிருந்தன. இதற்குள் பூமியின் மீது தன் கரத்தால் இடையறா ஒளிக்கதிர்களை உமிழும் கதிரவனைக் காண்பதற்கு நேரம் வந்திருந்தது.

நிலநடுக்கோட்டுக்கு இணையாய் வடக்கே 23 பாகை உத்தேசத் தூரத்தில் காணப்படும் கடகரேகை இந்தியாவினைத் தீபகற்ப இந்தியாவாகப் பிரித்துக்காட்டும். இந்தியாவை ஒட்டித் தென்கிழக்குப் பகுதியில் இலங்கை அமைந்துள்ளது.

பெரும் நிலப்பரப்பு வேறுபாடில்லாத காரணத்தால் இந்திய நேரமும் இலங்கை நேரமும் ஒன்றாகவே காணப்பட்டன. நீங்கள் ஊகித்தது போலவே, அலாரம் எழுப்பத் தயாராக இருந்தது. மொத்தம் வைக்கப்பட்டிருந்த ஐந்து அலாரங்களில் மூன்றைக் கடந்து எழுந்தது உடல், பொருள், ஆவி. இலங்கையில் முதன்முறையாய் விடியலைச் சந்தித்த காலை அன்றெமக்கு. சக



போட்டியாளர்களும் சற்றேறக்குறைய எழுந்துவிட, தயாரித்த பேச்சுகளால் சூழ்ந்திருந்த சுவர்களெல்லாம், பார்வையாளர் களாய் மாறின. சுவர்கள் போதுமெனச் சொல்லும்வரை பேசியபின், உடற்சுத்தமும், உள்ளச்சுத்தமும் செய்கலானோம்.

சர்வதேசப் போட்டி என்பதால் சில விதிமுறைகள் பின்பற்ற விதிக்கப் பட்டிருந்தன. அதில் கோட், சூட் அணிந்து வருதலும் ஒன்று. வினோத் வரும்போதே கோட், சூட் கொண்டுவந்திருந்தார். அருணாச்சலம் தங்கியிருந்த க்ளோபல் விடுதியில் கேட்டுப் பெற்றுக்கொண்டார். அவரோடு அன்றைய இருப்பு தீர்ந்துவிட்டது என்றனர். துப்பாக்கி திரைப்படத்தின் வசனம் நினைவுக்கு வந்தது. அமெரிக்கா போன்ற மேலத்திய நாடுகளில் கோட் போடுவது சாதாரண விடயம். ஆனால், இந்தியா போன்ற கீழத்திய நாடுகளில் சாதாரண விடயமில்லை. இதுவரை கோட், சூட் அணியுமளவு தேவை இருந்ததில்லை என்பதால், இன்று தேவைப்படும்போது, சொந்தமாகக் கோட், சூட் இல்லாமல் இருந்தது. ஆகையால், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று சட்டை அணிந்து தயாராகியிருந்தது மனம்.

பிறநாட்டுப் போட்டியாளர்கள் தயாராக, சகநாட்டவர்களான நாங்கள் தாமதித்திருந் தோம். முதல்முறையாக அயல்நாட்டு நட்சத்திர விடுதியில் உணவுண்ண நீராடியிருந்தன கைகள். உள்ளூர் உணவு, புலால் உணவு, கேக் வகைகள், திரவ உணவுகள், உடலறுக்கப்பட்ட பழங்கள் உண்ணத் தயார்நிலைக்குக் கிடத்தப் பட்டிருந்தன. தமிழ்நாட்டு வழக்கமான உணவுகளும் கிடைத்தன. மனம் முழுக் கொள்ளளவை எட்டுமளவு உண்ணலா யிற்று. தோசை, இட்லி, தேங்காய்ச் சட்னி, பழங்கள் உண்டபின் பழச்சாறும் உடலைப் புத்துணர்வாக்கியிருந்தது. உணவகத்தில் பலர் உணவுண்டு கொண்டிருந்தாலும் போட்டி யாளர்கள் என்பதைப் பரபரப்பான முகங்கள் பிரதிபலிப்பு செய்தன. ஒருவழியாய் யாவரும் உணவருந்தி முடிக்க அங்கிருந்து கிளம்பத் தயாராயிருந்தன வாகனங்கள்.

பிறநாட்டுப் போட்டியாளர்களும் வாகனத்தில் ஏற அங்கிருந்து, ஊர்ந்து, விரைந்து ஒளிப்பதிவு இடத்தை நோக்கிச் செல்லலாயிற்று. கடல் கடந்து விரிந்திருக்கும் தமிழிருக்கும் இடமெல்லாம் 'இசை' நிரப்பும் இடமாகவே இருந்தது. எல்லா உதடுகளும் முணுமுணுக்க, சற்றேறக்குறைய மழை களித்த மனமாய்க் குளிரூட்டப்பட்ட மகிழுந்தின் உட்பரப்பில் நீக்கமற நிறைந்திருந்தது இசைஞானி இளையராஜாவின் இன்னிசை.

ஒரு நாட்டின் தலைநகரம் என்பதற் கேயுரிய அனைத்துக் கூறுகளுடனும் காணப்பட்ட பெருநகர வீதிகளைப் பின்னோக்கி இழுத்துச்சென்றது வாகனத்தின் சன்னல் கண்ணாடிகள். அவ்வப்போது தமிழ்ப் பதாகைகளையும், தமிழர்களையும் பார்க்க ஆவலாய் இருந்தது. இருப்பினும், போட்டி பரபரப்பில் சாலையில் சுற்றிநிகழும் நடப்புகளை உய்த்துணர முடியாத மனிதர்களைச் சுமந்து நகர்ந்து கொண்டிருந்தது வாகனம். நிறைவில் பாதுகாப்புச் சுவரெழுப்பிய வளாகத்தினுள் நின்றது. அவ்விடத்தின் பெயரேதென விளிக்கையில், 'நாகர் பகுதி'யெனக் கதைத்தார் ஈழத்துத் தமிழர். ஒவ்வொருவராய் இறங்கி அரங்கின் உள்செல்ல, யாவரையும் வரவேற்றன வண்ண வண்ண விளக்குகள்.

பன்னாட்டுப் பேச்சுப்போட்டி நிகழும் சர்வதேச அரங்கம். எல்ஈடி ஒளித்திரை பின்னிருக்க, ஆயத்தநிலையில் இருந்தது மேடை போட்டியாளர்களுக்காக. தமிழகத்தின் சில தொலைக்காட்சிகளில் பேசியிருந்தாலும், இப்போது பேசுவது மலேசியாவில் ஒளிபரப்பாகவுள்ளது.

அரங்கில் போட்டியாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் தவிர எண்ணுமளவு மனிதர்களே இருந்தனர் காலை 08.48 மணிக்கு. முதல் சுற்றுப் போட்டிகள் தொடங்க இன்னும் சில மணித்துளிகளே உள்ளன என வந்த



அறிவிப்பில், இன்னும் கோட் போடவில்லை என்பது நினைவிற்கு வந்தது. துகிலுரியின் துகில்தந்த அக்காலக் கண்ணன் போலே, துகில் மேலே துகில் போட யாரேனும் கலியுகக் கண்ணனாக வந்து இருப்பரா என யோசித்திருந்த வேளை... தான் அணிய வைத்திருந்த புது கோட் தந்து உதவினார் வணக்கம் மலேசியாவின் ஒளிப்பதிவாளரும் படத்தொகுப்பாளருமான இரமேஷ்.

தெற்காசியப் பரப்பில் காய்ச்சல் வகை நோய்கள் பரவிவந்ததால், தம் நாட்டின் நலம் முதன்மையெனச் சில நாடுகள் பங்கேற்க வில்லை. இதனால் போட்டியன்று ஆயத்தமாக இந்தியா, இலங்கை, மலேசியா, மியான்மர் நாடுகள் களத்திலிருந்தன. ஒரு நாட்டிற்கு மூன்று நபர்வீதம் பன்னிரண்டு போட்டியாளர்கள் களத்திலிருந்தனர். ஒலிம்பிக் மாதிரி குறைந்த எண்ணிக்கை யிலான போட்டியாளர்கள். ஆனால், கடுமையான போட்டி. முதல்சுற்றில் தகுதியாகும் நபர்களே அரையிறுதிச் சுற்றில் பங்கேற்கும் வாய்ப்பை வரமாகப் பெறுவர். கருத்து, குரல்வளம், உடல்மொழி எனும் மூன்று பிரிவுகள் மட்டுமே தமிழகத்துப் பேச்சுப் போட்டியில் வெல்வோரைத் தீர்மானிக்கும். ஆனால், இது பன்னாட்டுப் பேச்சுப் போட்டி ஆதலின், நிபந்தனைகளே புதுமாதிரியாக இருந்தன.

'இரண்டு நிமிடம் கொடுக்கப்படுகிற தலைப்பிலே உரை நிகழ்த்த வேண்டும். நடுவர் பேச்சாளரின் அவ்வுரையிலிருந்து வினா தொடுப்பார். தொடுத்த வினாவின் விடையை ஒன்றரை நிமிடத்திற்குள் தெளிவுற, அறிவுறச் சொல்லல் அவசியம். போட்டியாளர் பேசிய தலைப்பு சார்ந்த ஒரு காணொளி எல்ஈடி திரையில் ஒளிபரப் பாகும். அது முரண்பாடான கருத்துகளைக் கொண்டதாகவே அமையும். அதை ஆமோதித்தோ, ஆட்சேபித்தோ ஒரு நிமிடத் திற்குள் பேச வேண்டும்'. முதல் சுற்றுக்கான நிபந்தனைகள் இவைதாம். இவற்றின் கூடுதலில் தகுதியானவர்களே அடுத்த சுற்றுபற்றிக் கனவு காணமுடியும்.

முதல்போட்டியாளரே ஈழத்துத் தமிழச்சி. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் தயாளினி குமாரசாமி களத்திறங்கினார். மலையானாலும் மலைக்காதே எனும் தலைப்பில் கொஞ்சு

தமிழில் பேசிய பேச்சு மலைக்கவே வைத்து விட்டது எனலாம். ஈழத்தமிழின் இயல்பான பேச்சுகளுக்கே செவிகள் இனிக்கும். இதில் பேச்சுப்போட்டியின் பேச்சு என்றால் ஊகித்துக்கொள்ளுங்களேன். அச்சமில்லை அச்சமில்லை என அச்சப்படாது பாரதியைத் துணைக்கு அழைத்துப் பேச்சைத் துவக்கினார். "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்றை நடத்திக்காட்டினார் காந்தி, துணிவே அவர் உடுத்திய துணி. 'வாயிலோயே வாயிலோயே' எனப் பாண்டிய அரசவையைப் பதறவைத்த கண்ணகி போன்று வீறுகொண்டெழ வேண்டும்" என்ற கருத்தை முன்வைத்தார்.

இரண்டாவது போட்டியாளர் இந்தியாவி லிருந்து.. மூன்றில் ஒருவர் யாரென்ற எதிர்பார்ப்பு எங்களுக்குள். இந்தியாவின் சார்பில் முதலாவதாகப் பேசும் வாய்ப்பு என்னை அழைத்தது. போட்டிக்குள் செல்லும் முன், பேட்டி தரவேண்டும். எதிர்பார்ப்புகள் ஏதுமற்று முழுப்பங்களிப்பைக் கொடுக்க வேண்டும் என்ற மனநிலையோடு பேட்டி முடித்து சர்வதேச மேடைக்குள் அரங்கேற்ற மடைந்தன கால்கள்.

ஒலிவாங்கியின் முன்பு பரந்துபட்ட பாரத தேசத்தின் தேசியக்கொடி பொருத்தப் பட்டிருந்தது. கால்கள் ஒலிவாங்கிமுன் நிற்கையில் எல்ஈடி திரையில் பெயரோடு முன்னெழுத்துகளின் விரிவாக்கமும், நாட்டின் பெயரும் ஒளிபரப்பப்பட்டது. நேரம் துவங்கியவுடன், இயல்புற மொழியத் தொடங்கியிருந்தது குரல். அங்கு பேசியதாவது,

"இன்று நாடாண்டு கொண்டிருக்கக்கூடிய மொழிகளுக்கு மத்தியில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திரைகடலோடியும் திரவியம் தேடு என்று சொல்லி உலகாண்ட மொழி தமிழ் A for apple, B for ball, C for cat என்று எழுத்துகளுக்குப் பொருட்களை உதாரணமாகச் சொன்ன மொழிகளுக்கு மத்தியில், **அ - அறம் செய விரும்பு, ஆ - ஆறுவது சினம், இ இயல்வது கரவேல்** என்று எழுத்துகளுக்கெல்லாம் குணங்களை உதாரணமாகச் சொல்லிய மொழி நம் மொழி.

மொழி தமிழர்களிடம் இல்லை, அன்னையைத் தமிழ்வாயால் மம்மியென்று அழைத்தாய், என்னுயிர்த் தமிழைக் கொன்றுபுதைத்தாய் என்று காசி ஆனந்தன் குறிப்பிடுவார். போரென்றால் புலிகுணம், பொங்குமின்பக் காதலென்றால் பூமணம், புகழுக்குரிய மானமென்றால் உலகிற்கே ஒரே இனமெனச் சரித்திரம் கண்டவர்கள் நாம். தயக்கமேன்!? போர் நடந்துகொண்டிருக்கும் போது வீரர்களை உற்சாகப்படுத்தி அனுப்பு வதற்கு, "பத்துதடவை பாடை வராது, பதுங்கிக்கிடக்கும் புலியே தமிழா! செத்து மடிதல் ஒரே முறைதான் .. சிரித்துக்கொண்டே செருக்களம் வாடா!" என்று சூளுரைத்தனுப் பியது நம்மொழி.

இப்போது மொழிக்கான, பண்பாட்டிற்கான, நமக்கான அரசியலைத் தேர்ந்து எடுக்கவேண்டிய சூழலிருக்கிறது. 'சிங்கங்கள் தங்கள் வரலாற்றைப் பதிவு செய்யாதபோது, வரலாறு முழுமையும் வேட்டைக்காரர்களுக்கானது'. ஆக, இருக்கு மென்பது அறிந்து, புரிந்து செயல்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

'ஈழம்சென்று
கங்கைகொண்டு
கடாரம்வென்று
இமயத்தில் கொடிநாட்டியவன்,
இன்று இனம்பிரிந்து
மொழிமறந்து
முகம்தொலைத்து
முகவரியற்று அலைகிறான்', என்ற நிலையில் தயக்கத்திலிருந்து விடுபடுவதற்கான ஒருங்கிணைப்பைத் தமிழர்கள் பெறவேண்டும்"

என்று பேசி முடிக்க, கேட்ட கேள்வி களுக்கும், காணொளிக்கும் விடைகொடுத்து இருக்கை நோக்கிப் பயணித்த கால்களில் சற்றே எடை கூடியிருந்தது. எதிர்பார்ப்புகள் ஏதுமற்றதால், மகிழ்ச்சியோடு அடுத்தவர்களின் உரையைக் கவனிக்கத் தொடங்கி இருந்தது செவி.

**- நீங்களும் செவி சாய்த்தவுடன் கேட்போம்**

• கவி: கரிகாலன்
சித்திரம்: அழ.ரஜினிகாந்தன்

# நமது கடவுள்!



நமது காலத்தின் கடவுள்
செறிவூட்டப்பட்ட யுரேனியமாக
மீத்தேன் எரிவாயுவாக
காப்பராக மெக்னீஷியமாக
நிலக்கரியாக பெட்ரோலியமாக
மின்சாரமாக
அவதாரமெடுத்திருக்கிறார்

இவர் உறையும் தேவாலயம்
ஸ்விஸ் போன்ற
குளிர்ப் பிரதேசங்களில்
இருக்கின்றன

நமது கடவுள்
முனீஸ்வரனைப்போலவோ
அய்யனாரைப்போலவோ
பிதா குமாரன் பரிசுத்த
ஆவியைப்போலவோ
அல்லாவைப்போலவோ

கோழிகளை பன்றிகளை
ஆடுகளை ஒட்டகங்களைப்
பலி கேட்கிறவரில்லை

பதிலாக நமது
நவீனக் கடவுள்
உழுகுடிகளின்
பச்சை ரத்தத்தைப்
பருகக் கேட்கிறார்

இப்போது நாம்
கற்க வேண்டியிருக்கிறது
குருதியை நஞ்சாக்கும்
வித்தையை! ■

# பின்னூட்ட எண்ணங்கள்

ஒரு சிற்றிதழை நடத்துவது என்பது ஒரு சர்க்கஸ் சாகசக்காரனின் கம்பி விளையாட்டு போன்றது. வெறும் கைகளை நம்பி அந்தரத்தில் பல்டி அடிப்பது போன்றது. அத்தனை பிரயத்தனங்களையும் செய்து இலக்கியத்தை வளர்த்ததில் சிற்றிதழ்களின் பங்கு மிக முக்கியமானது. தொழில்நுட்ப வளர்ச்சி யின் காலத்தில் இப்போது நிறைய மின்னிதழ்கள், இணைய இதழ்களும் சிறப்பாகச் சிற்றிதழின் பணிகளைச் செய்தவண்ணம் இருக்கின்றன.

படைப்பு மின்னிதழ், ஒரு அச்சு இதழுக்கான அத்தனை வடிவமைப்பு நேர்த்திகளோடும், கனமான உள்ளடக்கங் களோடும் மிகச் சிறப்பாக வெளி வந்திருக்கிறது. இதழைப் பார்த்தவுடன் கண்களில் ஒத்திக்கொள்ள வேண்டும் போல இருக்கிறது. நானும் கொலுசு மின்னிதழின் ஆசிரியராக இருக்கிறேன் என்பதால், இந்த இதழை உருவாக்க எவ்வளவு உடல் உழைப்பு, நேரம், மன உழைப்பு, பொருளாதாரம் தேவைப் பட்டிருக்கும் என்பதை என்னால் வியந்து யூகிக்க முடிகிறது.

படைப்பு மின்னிதழ் உருவாக்கத்தில் உழைத்த ஒவ்வொருவருக்கும் மனம் நிறைந்த நல்வாழ்த்துகள். இந்த இதழ் அச்சு இதழாகவும் வெளிவரவேண்டும். மேலும் தொய்வின்றி மிகச் சிறப்பாகப் பல காலம் வெளிவரவேண்டும் எனவும் வாழ்த்துகிறேன்.

இரண்டாவது இதழ், கவிஞர் சல்மாவுடன் நேர்காணல், கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், மொழி பெயர்ப்பு, மாணவர் பக்கம், சங்க இலக்கியம் எனப் பிரம்மாண்டமாக வெளிவந்துள்ளது.

**– இரா.பூபாலன்,** பொள்ளாச்சி.

சிற்றிதழ்ப்போராளி சுகனை நினைவுகூர்ந்த ஐயா வெற்றிப்பேரொளி அவர்களுக்கும், படைப்புக் குழுமத்திற்கும் நன்றி.

**– சக்தி அருளானந்தம்,** சேலம்.

தரம் மிக்க ஒரு இலக்கியப் பத்திரிகையைப் பல வண்ண அழகோடும், பல எண்ணங்களின் வனப்போடும் விரல் வைத்துப் பக்கம்பக்கமாகப் புரட்டிப் பார்க்கிற ஒரு பிரமிப்பில் ஆழ்ந்து போனேன்.. தேர்வு செய்த படைப்புகளிலும் தரம்.. அழகான ஓவியங்கள்..

தகவு மின்னிதழ் அழகு..

இதன் பின்னால் மறைந்திருக்கும் பிரம்மாக்களுக்கு நன்றியும் வாழ்த்துகளும்.

**– தர்மா சிங்,** நாகர்கோவில்.

தேர்ந்த கவிதைகள், கட்டுரைகள், சிறுகதை எனச் சிறப்பாக இருக்கிறது. படைப்பு.... படைப்புலக வரலாற்றின் தடம்.

**– கா.நா.கல்யாணசுந்தரம்,** வேலூர்.

உண்மையில் அகம் மகிழ்கிறேன். இது ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க படைப்பு. அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டும் அனைத்து வகையிலும் உதவிடும் பணி மேலும் சிறக்க, இலக்கிய மின்னிதழ் உலகில் புகழ்க்கொடி பறக்க எனது மனமார்ந்த வாழ்த்துகள். அத்துணைத் தொழில்நுட்பக் குழுவிற்கும் நிர்வாகக் குழுவிற்கும் எனது வாழ்த்துகள்.

**– பழனிகுமார்,** சென்னை. ■

• பிரேமபிரபா

# சாம்பலில் மூழ்கிய நகரம்

சிதறிய சிறு சிறு மேகங்கள் செல்லமான சிணுங்கல்களுடன் ஒன்றிணைய நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணின் அதிநுட்பமான கவனத்துடன் கார் மேகங்கள் அடிவானத்தில் நிலைத்து நின்றன. தூரத்தே எங்கோ பொழிந்து கொண்டிருந்த மழை குளிர்ச்சையைத் தன்னுள்ளில் வேண்டுமளவு போர்த்திக்கொண்டு மண்ணின் வாசனையை நாசியில் கிளர்த்தியது. எந்த நேரத்திலும் மழை வருவதற்கான அறிகுறிகள் வானத்தில் தெரிந்தன. இருண்ட மேகங்களிற்கிடையே இளைத்துப்போன ஒரு சிறிய மின்னல் கீற்று பலவீனமாகத் தோன்றி உடனே மறைந்தும் போனது.

ரதத்தில் மிகவும் ஒயிலாக அமர்ந்திருந்த மெலீனா மெல்லிய இடியின் சப்தத்தைக் கேட்டுக் கலவரத்துடன் ரதத்தின் வலதுபுறத்தில் இருக்கும் வேலைப்பாடுடன் கூடிய திரையை விலக்கி வானத்தைப் பார்த்தாள். வெற்றியைத் தீர்மானிக்கும் கடைசி நாள் போரைப் போல இரைச்சலுடன் மழை தொடர்ந்தது. சாலையில் இருக்கும் செம்மண் மழையில் கரைந்து சாலையின் இரு புறங்களிலும் வழிந்தோட கற்கள் பாவிய சாலையில் தடுமாற்றத்துடன் பாம்பியை நோக்கி விரைந்து கொண்டிருந்தது குதிரைகள் பூட்டிய அந்த சாரட் வண்டி.

“சாரதியே, நாம் இப்போது எங்கிருக்கிறோம்?“ என்று கேட்க “சின்ன எஜமானியே, தாங்கள் மிகவும் களைப்பாகக் காணப்படுகிறீர்கள். மழையின் சீற்றம் வேறு கூடிக்கொண்டே போகிறது. அருகில் இருக்கும் விடுதியில் சற்று நேரம் ஒய்வெடுத்துப் பயணத்தைத் தொடங்கலாமா?“ என்று கேட்டான் மாசிலோனா.

“வேண்டாம் சாரதியே, காற்றில் பரவும் சார்னோ ஆற்றின் மூலிகை மணம் என்னை அதிகம் உற்சாகப்படுத்துகிறது“ என்று கூறியதைக் கேட்டவுடன் குதிரைகளைச் சாட்டையால் அடிக்கப்போவதாகப் பாவனை செய்ய குதிரைகள் பாம்பியை நோக்கிச் சீறிப்பாய்ந்தன.

தூரத்தே தெரிந்த வேசுவியஸ் எரிமலை சிறுவயதில் தாத்தா கூறிய ரசிப்பான கதைகளின் ஒத்திசைவுடன் மெலீனாவின் மனக்கண் முன் தோன்றி மறைய “சாரதியே வண்டியை நிறுத்து“ என்று ஆணையிட்டாள் மெலீனா. பதற்றத்துடன் காணப்பட்ட மெலீனாவைப் பார்த்தவன் உடன் செய்வதறியாமல் குவளையில் இருக்கும் பழ ரசத்தைக் கோப்பையில் ஊற்றிக்கொடுத்தான்.

இரண்டு மிடறு குடித்தவள் “இந்த வேசுவியஸ் எரிமலையைப் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா?“ என்று மாசிலோனாவின் பதிலிற்காக ஒரு குழந்தையின் ஆர்வமான ஏக்கத்துடன் பொறுமையின்றிக் காத்திருந்தாள்.



“கடற்கரைக்குச் சமீபத்தில் இருக்கும் இந்த வேசுவியஸ் எரிமலையின் சீற்றத்தை எப்போதாவது பார்த்த முதியவர்களிடம் ஏராளமான கதைகள் இருக்கின்றன, சின்ன எஜமானியே. ஒரு சிலர் பார்வை இழந்த எரிமலை கனவு காண்பதாகப் பாம்பி மக்களை நம்பவைத்தார்கள். ஆனால் அடி வயிற்று இதமான சூட்டோடு காத்திருந்த அந்த எரிமலைக்குச் சதுரங்கக் காய்களென நகர்ந்த வருடங்கள் கற்றுக்கொடுத்திருந்தது,முதலில் அமைதியாக இருப்பதற்கும், பிறகு ஒரு நாள்ஆர்ப்பரித்துச் சீறிச் சினம் காட்டவும்”.

இதைக் கேட்டவுடன் லேசாக நடுங்கிய மெலீனாவின் கவனத்தைத் திசை திருப்பப் பேச்சை மாற்றினான் மாசிலோனா. விரைவில் இருவரையும் காதலர்களாகக் காணப் போகும் வேசுவியஸ் எரிமலை யாரும் அறியாத வண்ணம் ஒருமுறை லேசாக அதிர்ந்து அடங்கியது.

ஊரின் எல்லையில் இருக்கும் பிரம்மாண்டமான கேளிக்கை அரங்கு மழையில் நனைந்து பளிச்சென்று காணப்பட்டது. தாத்தாவுடன் விடுமுறை நாட்களில் இங்கு அடிக்கடி வந்திருக்கிறாள் மெலீனா. பாம்பியில் பலரால் நன்கு அறியப்பட்ட செல்வந்தரின் மகள் என்பதால் அவர்களுக்கான தனி இருக்கைகளுடன் அரங்கத்தின் நிர்வாகிகள் காத்திருப்பார்கள். தாத்தாவின் துளியும் ஒப்பனையில்லாத அன்பினை நினைத்தவளின் கண்களில் ஏனோ அவளையுமறியாமல் முதிர்ந்த முத்தெனக் கண்ணீர் துளிர்த்தது.

கி.பி.63ஆம் ஆண்டு. இத்தாலியின் செழிப்பான சார்னோ ஆற்றங்கரையில் தோன்றிய மனித நாகரீகத்தின் வெளிப்பாடு, அந்தக் காலத்தில் பாம்பி நகரம் ஒரு சிறந்த கலாச்சார மையமாக இருந்ததென்பதை முதலில் உங்களுக்கு அறிமுகப் படுத்தும். வானளாவிய கட்டிடங்கள், அப்பல்லோ, வீனஸ், ஜூப்பிடர் கடவுளர்களின் தேவாலயங்கள், ஊரின் எல்லையில் இருக்கும் நீள் வட்டமான கேளிக்கை அரங்கம் எனப் பாம்பியை மனிதவள நாகரீகத்தின் மொத்த அடையாளமாக நீங்கள் காண்பீர்கள். எவ்வளவோ மனித நாகரீகங்கள் இயற்கையின் சீற்றத்தால் அழிந்தாலும், மறுபுறம் அதன் வேர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. அப்படித்தான் எரிமலைச் சாம்பலில் பாம்பி நகரம் குறைந்தது ஆயிரத்து அறுநூறு வருடங்கள் பூமித் தாயின் நேரடிக் கண்காணிப்பில், அவளின் இதமான கருப்பைச் சூட்டுடன் புதிய கலாச்சாரப் படிமங்களுடன் காத்திருந்தது. பாம்பியின் கலாச்சாரத்தில் ஒன்றெனக் கலந்திருந்தது காதலும், இல் வாழ்க்கையும். அகழ்வாராய்ச்சி யாளர்கள் அகன்றெடுத்த ஏராளமான பதுமைகள், சித்திரங்கள்அனைத்தும், பாம்பி மக்களின் அன்பையும் காதலையும் வெளிப் படுத்துகின்றன. மனிதனின் நிர்வாணம் துளியும் கொச்சைப்படுத்தப்படாமல் பாம்பி மக்களால் ஒருமனதாக ஆராதிக்கப்பட்டது. வீனஸ் கடவுளே காதலின் மூலவராகவும், காவலராகவும் அறியப்பட்டார். முக்கியமாக விபச்சாரம் தவறாக அடையாளப்படுத்தப்படாமல் மனிதனுக்குஇன்றியமையாத, சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட நாகரீகமான வெளிப் பாடாகவே மக்களிடையே மதிக்கப்பட்டது. ஒருபுறம் பெருவாரியான மக்கள் ஒலம்பஸ், வீனஸ் போன்ற கடவுள்களை வழிபட்டாலும் சிறு சிறு வட்டாரக் கடவுள்களையும் வழிபட்டனர். பாம்பி மக்கள் மதத்தை வெற்றியின் அடையாளமாக மட்டுமே இனம் கண்டனரேதவிர இன்று போல் நிச்சயம் பாவத்தைக் கரைக்கும் வடிகாலாகக் கருதவில்லை. பாரம்பரியமாகக் கடைபிடிக்கும் குடும்ப வழிபாட்டு முறைகளைத்தான் மதம் அன்று போதித்தது. கோட்பாடு, கொள்கை களின்அடிப்படையில் நிச்சயம் இல்லை. குடும்ப வழிபாட்டில் குடும்பத் தலைவரே மத குருவாகவும் தன்குழந்தைகளுக்குச் சிறந்த மத போதகராகவும் இருந்தார்.

யுகங்கள் பல கடந்தும் துளியும் மாறாத மனித நாகரீகங்களிடையே வற்றாத தேன் ஊற்றாய், பனியின் இதமான நெஞ்சை வருடும் குளிர்ச்சியாய், வானவில்லின் கர்வத்துடன் ஒன்று இருந்தது என்றால்அதுதான் காவியங்கள் பல படைத்த காதல். மாசிலோனா நீண்ட நேரம் எரிமலையின் அடிவாரத்தில் மெலீனாவிற்காகக் காத்துக்கொண்டிருந்தான். சூரியக்கதிர்களின் கூர் முனை மேலும் அழகாகச் சிவப்பட்டு அடிவானத்து மேகங்களில் ஒளிந்துகொள்ளும் மாலைநேரமிது. இளமைத் துள்ளலுடன் மாசிலோனாவின்அருகில் வந்தமர்ந்த மெலீனா, அருகில் பூத்திருக்கும் சிறிய ஊதாப்பூவைக்

காம்புடன் பறித்துக் காம்பினை லேசாக முன்னும் பின்னும் சுழற்றினாள். அதற்கேற்ப அந்தச் சிறிய பூவும் வேகமாகத் தலையாட்டியது. அந்தப் பூவினைத் தன் உதட்டிற்கருகில் வைத்து மகரந்தத்தூளினை அவன் முகம் நோக்கி ஊதினாள்.

"என்ன மாசிலோனா, மலை உச்சியில் இருந்து எதை ரசித்துக்கொண்டு இருக்கிறாய், நான் உன் அருகில் இருக்கும்போது? உன்னைப் போலவே மேற்கில் வழிந்திறங்கும்அஸ்தமனச் சூரியனின் அவசரத்தைப் பாரேன்" என்றாள். அவளின் பக்கம் திரும்பாமலேயே மாசிலோனா "மெலீனா, நான் பாம்பியின் அழகை ரசித்துக்கொண்டிருக்கிறேன். எவ்வளவு அழகு பாரேன். அதோ தெரிகிறதே அந்த அப்பல்லோ ஆலயத்தைப் பார்த்தால் உனக்கு ஏதாவது ஞாபகம் வருகிறதா?" என்று கேட்டான்.

சிறிது நேரம் மௌனம் காத்தவள் "ஏன் இல்லை, முயலைத் துரத்திக் கொண்டு ஓடும்போது காலிடறிவிழப்போன என்னைச் சமயத்தில் பாய்ந்து பிடித்த கள்வனை அவ்வளவு எளிதில் மறக்கமுடியுமா மாசிலோனா? நாங்கள் அப்பல்லோவை வழிபடுகிறோம்.ஆனால் நீங்களோ வீனஸை வழிபடுகிறீர்கள். நம் காதல் கைகூடும்தானே?" என்று அவனின் தோள்மீது சாய்ந்துகேட்டாள் மெலீனா.

"அன்புள்ளங்கள் ஒருங்கிணைய மதங்கள் ஒரு பொருட்டேயல்ல. நீயோ செல்வந்தரான வணிகரின் ஒரே செல்ல மகள். நானோ ஒரு தேரோட்டி. போராடித்தான் காதலில் ஜெயிக்க வேண்டுமெனில் போராடவும் இந்த மாசிலோனா தயார்'' என்று மெலீனாவிற்குத் தைரியம் ஊட்டினான்.

"போதும் வீரனே, ஆகஸ்டு 24ஆம் தேதி என் பிறந்த நாள். அப்பாவும் கிரீஸிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பே என்னைக் காண வந்து விடுவார். நம் காதலைப் பற்றிஅப்பாவிடம் அன்றுதான் கூறப் போகிறேன்'' என்று எழுந்திருக்க முயற்சித்தவளின் கைகளைப் பற்றினான் மாசிலோனா.

"கண்டிப்பாகச் சந்திப்போம். என்ன பரிசுவேண்டும் என் இளைய ராணிக்கு? தயங்காமல் இந்த இளவரசனிடம் கட்டளையிடேன் மெலீனா" என்று அவள்முன் முழங்காலிட்டு நிற்க அவனின் இரு கைகளையும் தன் கண்களில் ஒற்றியபடி "உன் அன்பு ஒன்று மட்டும்போதும் வீரனே. வேண்டுமானால் பாரேன் இருபதாம்நூற்றாண்டில் நம் காதலைப் பற்றி நிச்சயம் ஒருவன் எழுதத்தான் போகிறான். நம் காதல் மீண்டும் பேசப்படத்தான் போகிறது. இருட்டுவதற்குள் நான் வீட்டிற்குப் போயாக வேண்டும். வா கிளம்புவோம்'' என்று மாசிலோனாவைத் துரிதப்படுத்தினாள் மெலீனா.

இந்தக் காதலர்களின் மனப் போராட்டத்தைப் புரிந்துகொண்டவேசுவியஸ் எரிமலையும் அவர்கள் துளியும்உணராவண்ணம் மெதுவாக இரண்டாவது முறையாக அன்று அதிர்ந்தது.

ஆகஸ்டு 24 ஆம் தேதி. 79 ஆம் ஆண்டு. அன்றுதான் மெலீனாவின் பிறந்த நாள். எவ்வளவோ பரிசுப்பொருட்கள் வந்திருந்தாலும் மாசிலோனாவைச் சுற்றியபடியே இருந்தது அவளின் மனம். மாசிலோனாவோ தன் வருடாந்திர முழுச் சேமிப்பில் கிடைத்த பணத்தில், சித்திர வேலைப்பாடமைந்த ஒரு அழகான நகைப் பேழையை மெலீனாவிற்காக வாங்கியிருந்தான். அதை அடிக்கொருதடவை எடுத்துப்பார்த்து மெலீனாவிடம் அதை எப்படிக் கொடுக்கவேண்டும் என்று பலமுறை ஒத்திகை பார்த்துக்கொண்டான்.

திடீரென்று மக்களின் கூக்குரல்கள். வேசுவியஸ் எரிமலை சீறியபடி அக்கினிக் குழம்பினையும் சாம்பலையும் வேகமாக வெளித்தள்ளியபடி இருந்தது. அழுகிய முட்டை வாடை எல்லா இடங்களிலும் பரவியிருந்தது. உயிர் தப்பிப்பதற்காக மக்கள் நாலாபுறங்களிலும் சிதறி ஓடிக்கொண்டு இருந்தார்கள். மக்கள் கடற்கரையை நோக்கியும், மேடான பகுதிகளை நோக்கியும் ஓடினார்கள். எரிமலையின் இரண்டு நாள் தொடர்ச் சீற்றத்தில் பாம்பி மெல்லமெல்ல எரிமலைச்சாம்பலில் மூழ்கியது. இரண்டு கைகளாலும் நகைப்பேழையை இறுகப் பற்றியபடி மூச்சடைத்து உயிர்துறந்தான் மாசிலோனா, மெலீனாவின் வற்றாத காதல்நினைவுகளுடன்.

1748ஆம் ஆண்டு இத்தாலியின் புதைந்த நகரமானபாம்பியில் இருந்து கண்டெடுத்த கலைப் பொருட்களில் அனைவரது கவனத்தையும் ஒரு மனதாகக் கவர்ந்தது அந்த அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய நகைப்பேழையும் அதனைப் பற்றியபடி இருக்கும் சிதைந்த கைஎலும்புகளும்தான். ■

• வடிவம் : பழனியப்பன் கிருஷ்ணமூர்த்தி
ஓவியம் : அழ.ரஜினிகாந்தன்

# மரம், மரமன்று; அது மனிதருள் ஒன்று

**(நற்றிணை 172)**

**தலைவன் :** தோழி.. தலைவியைச் சில நாட்களாகவே பார்க்க முடியவில்லையே, ஏன், என்னைச் சந்திக்க அவளுக்கு விருப்பமில்லையா?

**தோழி :** விருப்பம் இல்லாமல் இல்லை.. ஆனால்..

**தலைவன் :** என்ன ஆனால்?

**தோழி :** அவளுக்கு வழக்கமாகச் சந்திக்கும் புன்னையின் நிழலில் சந்திக்க விருப்பமில்லையாம்.

**தலைவன் :** அதுதான் ஏனென்கிறேன்?

**தோழி :** புன்னை அவளுடைய தங்கையாம், அம்மா சொன்னார்கள். அதனால் தன்னுடைய தங்கையின் முன்பாகவே தன் தலைவனுடன் எப்படி சிரித்துப் பேச முடியும் என்று கேட்கிறாள், அவள்.

**தலைவன் :** இதென்ன புதுக்கதையாக இருக்கிறது, புன்னை எப்படி தங்கையாகும்?

**தோழி :** நாங்கள் சிறுமிகளாக இருக்கும்போது 'திரிதிரி தாம்பாளம்' விளையாடிவிட்டுப் புன்னை விதையை மறந்து, அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டோம். அந்த விதை மழை பெய்த ஈரத்தில் தானாக முளைத்துவிட, எங்களுக்குக் கொடுப்பது போலவே புன்னைக்கும் நெய் கலந்த இனிமையான பாலூற்றி அம்மா வளர்த்தார்களாம். அதனால் புன்னை எங்களுக்குத் தங்கை முறையாம்.

(தலைவன் திகைக்கிறான். இயற்கையும் மனிதனும் ஒன்றான பரவச நிலையைப் புரிந்துகொள்கிறான். புன்னை அவள் தங்கை உறவென ஏற்கிறான்.)

**தலைவன் :** அப்படியானால் இனிமேல் தலைவியைச் சந்திக்கவே முடியாதா?

**தோழி :** சந்திக்கலாம், ஆனால் நிழலுள்ள வேறு மரங்கள் இருக்கின்றன அல்லவா, அங்கு.

(இயற்கைக் காதல், இயற்கையுடன் ஒன்றிய வாழ்வால் இன்னொரு இடத்தில் வளரத் தொடங்குகிறது.)



விரைவில்...

## படைப்பு 'தகவு' இதழின்

சார்பாகப் பள்ளி, கல்லூரி
மாணவர்களுக்கான மாபெரும்
இணையவழிக் கவிதைப்போட்டி
நடைபெறவுள்ளது.
எதிர்பார்த்திருங்கள்...

## படைப்புக் குழுமத்தின் இரண்டாம் ஆண்டு விழா

இடம்: அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை
தேதி: 09-09-2018
நேரம்:
மதியம் 2 மணிமுதல் 7 மணிவரை

# படைப்புப் பதிப்பகம் வெளியீடுகள்

நூல்களைப் பெற
97908 21981

























